# ஆங்கிலப் பாமகள்

( An - outline History of English Literature )

ஆசிரியர் :

கோவை கிழார்

வெளியிடுவோர் :

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரிக் கழகம்

பேரூர், கோவை - 641 010

# ஆங்கிலப் பாவலர்கள்

( An - outline History of English Literature )

ஆசிரியர் :

கோவை கிழார்

வெளியிடுவோர் :

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரிக் கழகம்

பேரூர், கோவை - 641 010

முதல் பதிப்பு : ஆகஸ்ட் 1979
படிகள் — 1,500

ஆசிரியர் :
"கோவை கிழார்
கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்

பதிப்பாசிரியர்கள் :
புலவர். அ. அ. மணவாளன், மு. க.
டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

வெளியிடுவோர் :
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
தமிழ்க்கல்லூரிக் கழகம்,
பேரூர், கோவை — 641 010.

விலை ரூ. 7-50

அச்சிட்டோர் :
என். ஐ. ஏ. அச்சகம்,
பொள்ளாச்சி — 642 003.

# பதிப்புரை

ஆங்கிலப் பாமகள் என்னும் இந்நூல், வரலாற்றுப் பேரறிஞர் சைவத்திரு கோவை கிழார், சோ. ம. இராமசந்திரஞ் செட்டியார் அவர்களால் எழுதப்பெற்றது.

ஆங்கில இலக்கிய வரலாருகிய இதனை பிள்ளைத் தமிழ் அமைப்பில் பகுத்து, உருவாக்கியுள்ளார். செந்தமிழ்த் திறம் வல்ல அவர் ஆங்கிலப் புலமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தமது முதுமைக் காலத்தில் இந்நூலை வெளியிட வேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. தம் நூலில் புதிதாக வெளிவர வேண்டியதில் இது முதல் இடம் பெற வேண்டும், என அவர் கருதினுர்.

இந்நூலைப் பதிக்க வேண்டும் என்று கருதிய போது அவர் எழுதி வைத்திருந்த கையெழுத்துப்படி கிடைக்கவில்லை. பலரிடம் கேட்டும் முழுமையாக இருப்பதாக அறிய இயலாமல் இருந்தது. ஒருநாள் நூலகத்தில் அவரது பழைய காகிதக் கட்டுகளை ஆய்ந்து செப்பப்படுத்த முயன்றபோது, அதற்கிடையே இது கிடைத்தது. பின்னர் அதனை, நமது கல்லூரியின் மாண வரும், சென்னைப் பல்கலைக் கழகத்தமிழ்த் துறையில் அகராதிப் பணியை மேற்கொண்டுள்ள வருமான திரு. அ. மணவாளன், அவர்களிடம் கொடுத்தோம்.

திரு. மணவாளன், தமிழ் புலமையுடன், இந்தி, ஆங்கிலம் மொழிகளிலும் நிறைந்த புலமை உடையவர், கோவை கிழாரது அன்புக்கு உரியவர். அவரிடம் தந்திருந்த ஆங்கிலப் பாமகளின் ஒரு பகுதியாகிய மொழி பெயர்ப்புப் பாடங்களையும் இணைத்து, பல்கலைக் கழகத்தில், அகராதித் துறையில் தம்முடன் பணியாற்றும் நமது உழவலன்புக்குரிய திரு. டாக்டர் இ. சுந்தர மூர்த்தி அவர் களையும் துணையாகக் கொண்டு தொடர்புடைய ஆங்கில இலக்கி யங்களின் பெயர்கள் கவிதை எண்கள் பலவற்றையும் பல்கால் ஆய்ந்து தட்டச்சுப்படி செய்து வழங்கினர்.

இந்நூலை பதிப்பிக்க வேண்டும் என்ற விருப்பத்தை கொங்கு நாட்டு வள்ளல், நா. மகாலிங்கம் அவர்களிடம் தெரி

வித்த போது தமது என். ஐ. ஏ. அச்சகத்தின் கொடையாகப் பதித்துதவ முன் வந்தார். இந்நூலை, சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிக் கழகம் வெளியிடுகிறது.

இந்நூல் பதிப்பாகும் போது பிழை திருத்தி, முகவுரை தந்து உதவிய அன்புக்குரிய, அருமைமிகு திரு. கு. வேங்கடாசலம் அவர்கட்கும், சிறந்த நூலாய் உருவாக உதவிய திரு. அ. மணவாளன், டாக்டர் திரு. இ. சுந்தரமூர்த்தி அவர்கட்கும் அழகாகப் பதித்துதவிய என். ஐ. ஏ. அச்சகத்தினர்க்கும் நன்றியையும், வாழ்த்தையும் உரித்தாக்குகிறோம்.

இந்நூலின் அருமையறிந்து தமது அச்சகத்தில் பதித்து உதவிய, கல்லூரிக் கழகத் தலைவர், நா. மகாலிங்கம் அவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*10—8—79,*
பேரூர்.

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்,
பேரூர் ஆதீனம்.

# பதிப்பாசிரியரின் முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்மொழிவளர்ச்சிக்காக முயன்று உழைத்த தமிழறிஞர்கள் பலர். கொங்கு நாட்டு மக்களால் 'கோவை கிழார்' என அன்புடன் அழைக்கப் பெற்ற திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் அத்தகைய அறிஞர் பெருமக்களுள் ஒருவர். சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க வாழ்நாள் முழுவதும் உழைத்தவர். தமிழிலக்கியத்தில் வரலாற்றுணர்வு பெருகி நிலைப்பதற்கு அடிகோலிய அறிஞர்களுள் ஒருவர். தென் மாநிலங்கள் அனைத்திலும் உள்ள பழமை வாய்ந்த திருக்கோயில்களைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்த போது ஆர்வத்துடன் தொல் பொருள் துறையிலும், கல் வெட்டாய்விலும் ஈடுபட்டு வரலாற்றாய்வுக்கு வளம் சேர்த்தவர். இவ் ஆர்வத்தின் விளைவே கொங்கு நாட்டு வரலாறு என்னும் இவரது வரலாற்று நூலாகும்.

தமிழின் மீது கொண்ட பேரார்வத்தின் காரணமாகத் தமிழ்த் தொண்டையே தலையாய பணியாகக் கருதி வளமான வழக்கறிஞர் பணியினைத் துறந்தவர். பேரூரில் தமிழ்க் கல்லூரி தோற்றுவித்தமை 'எழுவர் நாங்கள்' போன்ற பயணநூல்கள், 'கோயிற் பூனைகள்' போன்ற அங்கதச் சிறுகதைகள் ஆகியவற்றைப் படைத்தமை முதலாயின அவர்தம் தமிழ்ப் பணியாம்.

வரலாறு, கல்வெட்டு போன்ற பிற துறைகளைத் தமிழோடு இணைத்துத் தொண்டாற்றியதைப் போலவே பிறமொழி இலக்கியங்களையும் தமிழோடு தொடர்புறுத்தி நோக்க விழைந்தவர். இவ் விழைவின் முதற்படியாக ஆங்கில இலக்கிய வரலாற்றை ஊன்றிப் பயின்றார். அதன் வளர்ச்சி வரலாற்றில் அவருக்கு ஏற்பட்ட ஆர்வ ஈடுபாட்டைத் தமிழரனைவருக்கும் ஊட்டும் வகையில் ஆங்கில இலக்கிய வரலாற்றைத் தமிழில் தரவிரும்பினார். தமிழிலக்கியத்தில் ஊறித்திளைத்த காரணத்தால் ஆங்கில இலக்கியத்தைப் பாமகளாக உருவகப் படுத்தித் தமிழ் மரபிற்கேற்பப் பருவ வளர்ச்சிகளாகப் பகுத்துக் கண்டார். இவ் ஆர்வ முயற்சியின் விளைவே ஆங்கிலப் பாமகள் என்னும் இச்சிறு ஆங்கில இலக்கிய வரலாற்று நூலாகும்.

இந்நூல் 1933—36 ஆம் ஆண்டுகட்கு இடையில் முதல் வடிவம் பெற்றது. எனினும் ஆசிரியர் இதனை அப்பொழுது வெளியிடவில்லை. இடையிடையே நூலின் பகுதிகளைத் திருத்தியும், புதியதாகச் சேர்த்தும் வந்தார். 1967 ஆம் ஆண்டில் இதனை வெளியிட வேண்டும் என்று ஆசிரியர் கருதினார், எனினும் அது நிறைவேறவில்லை. இப்பொழுது வணக்கத்திற்குரிய *பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின்* அருள் விழைவினால் முதன் முதலாக அச்சுவடிவம் பெறுகிறது.

இந்நூலின் மூல ஏடுகள் சிதைந்தும், இடையிடையே விடுபட்டுமிருந்தன. மேலும் ஆங்கில இலக்கிய வரலாற்றின் இயக்கங்கள், அரசர்கள், கவிஞர்கள், நூல்கள் ஆகியவைபற்றிய விவரக்குறைவுகள், வேறுபாடுகள் ஆகியவற்றைச் சரிசெய்தும், படிப்போரின் தெளிவு கருதித் தேவையான அடிக்குறிப்புகளை எழுதியும் இதனைப் பதிப்பிக்குமாறு அடிகள் அருளாணையிட்டார்கள். அதற்கிசைய மேற்குறித்த விவரக் குறிப்புகளும், அடிக்குறிப்புகளும் இயன்றுங்கு இந்நூலில் தரப்பட்டுள்ளன. வரலாற்றுணர்வோடு எழுதப்பட்ட நூலாதலின் ஆங்கில அரசர்களின் *அரசு ஆண்டுப் பட்டியல்* ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் இடையிடையே ஆங்கிலக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்து தந்திருப்பது ஆசிரியரின் இருமொழிப் புலமையினை நன்கு விளக்கும். இப்புலமையின் சிறப்பு *ஆசிரியர் தந்துள்ள சில தமிழாக்கங்களால்* தெளிவாகும். (காண்க பக். 31, 96-100, 106). ஆங்கில இலக்கிய வரலாறு இதுவரை தமிழில் எழாத குறையை இந்நூல் ஓரளவு நீக்குகிறது. ஆங்கில இலக்கியம் பற்றி அறிய விரும்புவார்க்கு இஃதொரு நல்ல தொடக்க நூலாக, துணையாகத் திகழும் என நம்புகிறோம்.

*பதிப்பாசிரியர்.*

# அணிந்துரை

கோவைக் கிழார், திரு சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் ஒரு தலை சிறந்த எழுத்தாளர். கொங்கு நாட்டு வரலாறு, 'கோயில் பூனை' போன்ற பல அரிய நூல்களை எழுதிப் பிரசித்தி பெற்றவர்.

அவர் தமது இறுதிக் காலத்தில் ஆங்கிலக் கவிஞர்களது வரலாற்றையும் பலவகையான ஆங்கிலப் பாக்களையும் படித்து ஆராய்ந்து, நூல் ஒன்றை எழுதினர். அதுவே இந்த ஆங்கிலப் பாமகள் என்பது. இந்த நூலை வெளியிட வேண்டுமென்று தமது விருப்பத்தைத் தெரிவித்த சில தினங்களில் அமரராகி விட்டார்.

இந்த விருப்பத்திற்கிணங்கவே 'ஆங்கிலப்பாமகள்' என்னும் இந்நூலை ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் வெள்ளி விழா வெளியீடாக, இக்கல்லூரியை நடத்தும் பொறுப்பை வகிக்கும், ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிக் கழகம், வெளியிடுகிறது.

இந்த நூல் மிகச் சிறந்த நூலாகக் கருதுவதற்கு தக்க சான்றுகள் உள. இந்த நூலாசிரியர் ஒரு சிறந்த எழுத்தாளராக மட்டும் இல்லாது கவித்துவம் நிறைந்த ஒரு பாவாசிரியராகவும் இருந்துள்ளார், என்பதை இந்த நூலை முழுதும் படித்தவர் உணருவர் என்பதில் ஐயமில்லை. அது மட்டுமல்லாமல் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழி நூலாராய்ச்சியிலும் திளைத்து விளங்கினர் என்பதும் புலப்படும்.

தமிழ் மொழி பிறந்து, கிடந்து, இருந்து, தவழ்ந்து, நின்று, நடந்து, பயின்று வளர்ந்துள்ளதை ஓர் அருமையான பிள்ளைத் தமிழ்ப் பாடலாக 'வரந்தருவார்' என்னும் புலவர் பாடியுள்ளார். அதில் தமிழை ஓர் அணங்காகக் கொண்டு கன்னிப்பருவம் வரை வளர்ந்துள்ளதாக அழகாக வர்ணிக்கிருர்.

ஆங்கிலப்பாமகளின் நூலாசிரியரோ நமது ஆராய்ச்சியின் பயனுக ஆங்கில மொழியை ஒருமாது என உருவகப்படுத்துகிருர். ஆங்கில மாது பிறந்து, இருந்து, தவழ்ந்து, நின்று, நடந்து பயின்று, வளர்ந்து, மணந்து, வாழ்ந்து, முதுமைப் பருவத்தை அடைந்துள்ளதாக விவரிக்கிருர். அதாவது, தமிழ் மொழி 3500

ஆண்டுகள் வளர்ந்த பின்னரும் கன்னிப்பருவத்தைத் தாண்டவில்லை. ஆனால் ஆங்கில மாதோ 1200 ஆண்டுகளில் முதுமைப் பருவத்தை அடைந்து விட்டாள் என்பதை இந்நூலாசிரியர் ஆழ்ந்து அனுபவித்து எடுத்துரைக்கிறார்.

இதே முறையில் இந்நூலாசிரியர் 'ஆங்கிலப்பா' வை ஒரு மகளாகக் கொண்டு அம்மகளின் குழவிப்பருவம், கொச்சைப்பருவம், கன்னிப்பருவம், பூப்புப்பருவம், மணப்பருவம், வாழ்க்கைப் பருவம், முதுமைப்பருவம் ஆகிய ஏழு பருவங்களையும், ஆங்கில மொழி, ஆங்கில மக்கள் ஆகியவற்றின் வரலாற்றை அடிப் படையாகக் கொண்டு, தெளிவாக வியாக்கியானம் செய்துள்ளார்.

ஆங்கிலமொழி அரசியின் பிறப்பு அல்லது தோற்றத்தை ஆசிரியர் ஓர் அற்புதமான உருவக-உவமை அணியாக எடுத்துக் கையாண்டிருக்கிறார்.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்த ஆறு பொறிகளும் ஆறு தெய்வக்குழவிகளாகி உமையம்மையின் அருளால் ஒரே ஆறுமுகக் கடவுளாக அவதரித்த கதையைக் கந்த புராணத்தால் அறிகிறோம். அதுபோல, ஆதிபிரிட்டானிய மொழி யுடன் 6ம் நூற்றாண்டிலிருந்து, 10ம் நூற்றாண்டு வரை, இங்கிலாந்தில் குடியேறிய ரோமன், ஆங்கில்ஸ், சாக்ஸன், ஜ்யூட்ஸ், நார்மன் ஆகிய ஐங்குடிமக்களின் ஐந்து மொழிகளும் இணைந்து, விரவிக்கூடி ஒரு சில நூற்றாண்டுகளில் ஒரு கூட்டு மொழியாகக் கலந்து ஆங்கிலம் என்னும் தனித்த மொழியாக உருவெடுத்தது, என்று இந்நூலாசிரியர் மதிநுட்பத்துடன் விவரித்துள்ளார்.

ஆங்கில இலக்கியத்தை உருவாக்குவதற்கு நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களும், புலவர்களும், கவிஞர்களும், அறிஞர்களும், அந்தந்தக் காலத்தில் தோன்றி உதவியுள்ளார்கள். அவர்களில் கால வரிசையில் இந்நூலாசிரியரால் குறிப்பிட்டுச் சிறப்பிக்கப் பெற்றவர்கள் ; தாமஸ்வையட், ஜான்லிலி, சர்வால்ட்ர் ரேலே, ஷேக்ஸ்பியர், சாப்மன், மில்டன், ட்ரைடன் [Dryden] பட்லர் [Butler] செர்வான்டிஸ் [Cervantes] கோல்ட்ஸ்மித்[Gold-smith] டிபோ [Defoe] அடிசன், ஸ்டீல், தாமஸ் க்ரே [Gray] லயமன், சாசர் [Chaucer] ஜான்சன், பாஸ்வெல் [Boswell] கோல்ட்ஸ்மித் [Goldsmith] கோல்ரிட்ஜ், வோர்ட்ஸ்வொர்த்,

சதே [Southey] சர்வால்டர் ஸ்காட், பைரன் [Byron] ஷெல்லி, கீட்ஸ், ரோஜர்ஸ், டிக்கன்ஸ் [Dickens], டென்னிசன் [Tennyson], ப்ரௌனிங் [Browning], லாங்பெல்லோ [Longfellow], டோருடட் [Toru Dutt], சரோஜினி நாயுடு, தாகூர், மார்க் ட்வெயின் எட்வர்ட் ஆர்னல்ட் [Edward Arnold] ஆகியோர். இவர்களில் பெரும்பாலோர் ஆங்கில நாட்டைச் சார்ந்தவர்கள்; சிலர் அமெரிக்க அறிஞர்கள்; சிலர் இந்தியக் கவிஞர்கள்.

இவர்கள் எடுத்தாண்டுள்ள காவியங்கள், நாடகங்கள் கதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், புதினங்கள், காப்பியங் கள், சிறுபாடல்கள், இன்னிசைப் பாடல்கள், தனிப்பாடல் காதற்பா, அவலப்பா, நகைச்சுவைப்பா, அங்கதப்பா, இரங் கற்பா போன்ற பல இலக்கிய வகைகளில் ஒரு சிலவற்றை ஆசிரியர் ஆங்காங்கு அலசிப் பார்த்துள்ளார். இந்நூல் முழு வதையும் படிக்கும் பொழுது ஆசிரியரது எளிமையும், புலமை யும் அவரது இனிய தமிழ் நடையில் பிரதிபலிப்பதை உணர லாம். 'Style is the man' என்னும் வாக்கிற்கு இந்நூலா சிரியரின் நடையே ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

ஆங்காங்கு ஆங்கிலத் தலைப்புக்களை ஆசிரியர் தமிழாக்கம் செய்து காட்டியிருப்பது இனிமையாக உள்ளது. உதாரணமாக 'தங்கப்படகு', 'கந்தர்வராணி', 'பழுப்பு மங்கை' 'உல்லாச உள்ளம்' 'தேவகீதம்' 'கானக்குழவி' 'இடையன் பஞ்சாங் கம்', 'பறவைகளின் பாராளு மன்றம்' என்னும் தலைப்புக் களைப் பார்க்கும் பொழுது இந்தப் பாடல்களைப் படித்து இன்புற வேண்டும் என்று உந்து மனதில் ஏற்படுகிறது.

ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றை ஆசிரியர் தமிழ்க் கவிதைகளாக மொழி பெயர்த்து ஆங்காங்கு காட்டியுள்ளார். ஓரிரண்டு உதாரணங்களைக் காண்போம்.

மில்டன் என்னும் கவிஞனைப் பற்றி வோர்ஸ்வொர்த் என் னும் கவிஞர் ஆங்கிலத்தில் தீட்டியுள்ள

Milton, ......................

Thy soul was like a star and dwelt apart"

என்னும் வரிகளை

"நின்னுளம் விண்ணின் தாரகை போன்றது.

தன்னந்தனியே உயர்ந்தொளி உமிழ்ந்தது"

என்றும், சர்வால்டர் ஸ்காட் எழுதியுள்ள தேசபக்திப் பாடலான

"Breathes there the man with soul so dead
Who never to himself has said
This is my own, my native land?
....................
Un-wept, unhonoured and unsung"

என்பதை

"அன்னிய நாடுகள் அலைந்து திரிந்தபின்
தன்னுடை நாட்டில் தாளை வைக்கையில்
இதயம் பொங்கிக் கொழுந்து விட்டெழும்ப
இது வென் நாடு, ஈதென் தாய் நாடு
எனவே தன்னுள் இயம்பாதிருக்கும்
உணர்விலா மனிதனும் உளரோ உலகில்?
(இருப்பின்) , , , , , , , , , இறந்து
துறப்பான் மண்ணில் தூசியோ டொன்றாய்
அழுவாரின்றி அணைவாரின்றி
புழுதியோடடைவான், புகழ்வார் இன்றியே" —

என்று தமிழ்ப் படுத்தியுள்ளார்.

இவற்றைப் படிக்கும் பொழுது பொன் வேலைக்காரர் ஒருவர் சாதாரண தங்கத்தைப் பத்தரை மாற்றுத் தங்கமாக மாற்றுவதே நினைவுக்கு வருகிறது. ஆசிரியர் ஏக காலத்தில் ஒரு சுவை மிக்க கவிஞராகவும், வனப்புமிக்க மொழி பெயர்ப்பாளராகவும் விளங்குவதை இந்நூலில் காணப்பெறும் மொழிபெயர்ப்புக் கவிதைகளைக் கொண்டு அறியலாம்

ஆக இந்த நூல் இலக்கியப் பற்றுள்ள மாணவர், ஆசிரியர், மற்ற எல்லோராலும் படிக்கத் தகுந்தது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதுமாறு என்னைப் பணித்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகும்.

ஏ-9, மகாலிங்கபுரம்
பொள்ளாச்சி
6—6—1979

கு. வேங்கடாசலம்,
செயலர்,
ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார்
தமிழ்க் கல்லூரிக் கழகம், பேரூர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | ... | iii |
| பதிப்பாசிரியரின் முன்னுரை | ... | v |
| அணிந்துரை | ... | vii |
| தோற்றுவாய் | ... | 1 |
| குழவிப் பருவம் | ... | 17 |
| கொச்சைப் பருவம் | ... | 35 |
| கன்னிப் பருவம் | ... | 47 |
| பூப்புப் பருவம் | ... | 55 |
| திருமணப் பருவம் | ... | 77 |
| வாழ்க்கைப் பருவம் | ... | 91 |
| வளர்ச்சி முதிர்ந்த பருவம் | ... | 121 |
| இணைப்பு | ... | 131 |

# ஆங்கிலப் பாமகள்

- தோற்றுவாய்

# ஆங்கிலப் பாமகள்

## தோற்றுவாய்

### 1. மொழியின் சிறப்பு

உலக மொழிகளிலே ஆங்கில மொழி மிகவும் சிறந்த மொழியென்று எல்லோராலும் ஒத்துக் கொள்ளப் படுகின்றது. எப்படிப்பட்ட கருத்தையும் தெளிவாகக் குறிக்கக் கூடிய சொற்கள் அதில் உண்டு ; மற்ற எல்லா மொழிகளைக் காட்டிலும் மிகுதி யான சொற்கள் உண்டு.[1] மிகச் சிறந்த புலமை வாய்ந்த நூல்கள் உண்டு. உரைநடையேயன்றிச் செய்யுளிலும் மிகச் சிறந்த காவியங்கள் உண்டு. இயல், இசை, நாடகம் என்ற முப்பகுதிகளிலும் ஒப்பற்ற கலை நூல்கள் உண்டு. மேலும் இலக்கியமேயன்றிச் சரிதம், [வரலாறு] தத்துவம், சமயம், விஞ் ஞானம், கணிதம், சமூகத்துவம் [2][சமூகவியல்] முதலிய பலதுறை களிலும் இணையற்ற நூல்கள் இருக்கின்றன. உலகிலுள்ள மற்ற எல்லா மொழிகளிலுமுள்ள அருமையான நூல்கள் முழுவதும் இம் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. எழுத்துக்கள் குறைவு ; ஆனால் எல்லா உச்சரிப்புக்களுக்கும் அவை பயன்படு கின்றன. அச்சுக்கோத்தல், டைப் அடித்தல், தந்தி பேசுதல் தந்தியடித்தல் முதலியவைகளுக்கும் எளிதில் உடன்படக் கூடிய எழுத்தமைப்புப் பெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மொழி சிறந்த மொழியல்லவா ?

### 2. ஒரு சோதனை

நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்ப் புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியரான W. T. ஸ்டெட் (W. T. Stead) என்ற அறிஞர் ஒரு சோதனைத் தேர்வு செய்தார். உலகில் சிறந்த நாடுகள் எல்லாவற்றிலும் இருபது அறிஞர்களைப் பொறுக்கி எடுத் தார். அவர்களுக்கு ஒரு வினா விடுத்தார். அதாவது உலகில் மிகப் பெரியார்கள் வரிசைக் கிரமமாகப் பத்துப்பேர் யார் யார் என்பதே அக் கேள்வி. இருபது பேரும் தங்கள்தங்கள் ஆராய்ச்சிக்

கேற்றபடி பப்பத்துப் பேர்களை எழுதியனுப்பினுர்கள். எல்லா விடைகளையும் வைத்துக்கொண்டு யார் யாருக்கு அதிகப்படி தேர்ச்சி எண் கிடைத்திருக்கிறது என்று சோதித்தார். எல்லா வற்றிலும் மிகுதியாகத் தேர்ச்சி எண் பெற்ற பத்துப் பெயர்களை வெளியிட்டார். அவர்கள் எல்லோரிலும் முதல் பெயராகத் தேர்ச்சி பெற்றவர் *ஷேக்ஸ்பியர்* என்ற ஆங்கில நாடகப் புலவர் ஆவார். அவருக்கு இருபது எண் கிடைத்தது. கொலம்பஸ் போன்ற மற்ற நிபுணர்களுக்கு அடுத்தபடியில்தான் கிடைத்தது. இதன் முடிவு என்னவெனில் எல்லா முறைகளிலேயும் எல்லா நாட்டார்களும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்ததில் ஷேக்ஸ்பியரே முதன்மைப் பதவி பெற்றவரென்று எல்லாராலும் ஒரே தன்மையாகக் கொள்ளப் பட்டார் என்பதே.

இந்த ஷேக்ஸ்பியர் யார் என்று அறிந்திருப்பீர்கள். அவர் ஓர் ஆங்கிலேயர்; எலிஜபத் அரசி காலத்தில் இருந்தவர்[3]; அரசியல்வாதியல்லர்; தத்துவ நிபுணர் அல்லர்; விஞ்ஞானக் கலைஞர் அல்லர்; பெருத்த வணிகரும் அல்லர்; போர் வீரரும் அல்லர்; அவர் ஒரு நாடக ஆசிரியர். பல சிறந்த நாடகங்களை எழுதியிருக்கின்றுர். நாடகங்களேயன்றிச் சில காவியங்களையும் தனிப்பாடல்கள் பலவும் எழுதியிருக்கின்றுர். பிழைப்பிற்காக நடிகராக நாடகத்தில் தானே ஆடியும் இருக்கிறுர். ஒரு நாடக ஆசிரிய நடிகனுக்கு உலகிலேயே எக்காலத்திலும் சிறந்த பெருமகன் என்ற பேர் (பெயர்) கிடைக்குமானுல், அவருடைய நாடகங்கள் எப்படிப்பட்டவை என்ற கேள்வி பிறக்கலாம். அவர் வெறும் நாடகங்களை மட்டும் எழுதவில்லை. அந்நாடகங்களிலே அவர் படைத்திருக்கிற ஆண், பெண் பாத்திரங்கள் ஒப்பற்ற குணம் உடையவர்கள். அவர்கள் வாயில் பிணைத்த சொற்கள் பொன் போலும் போற்றத்தக்கவை. அச்சொற்களின் அமைப்பு, உருக்கம், பண்பாடு, உணர்ச்சி முதலியவை எவரும் மெச்சத்தக்கவை. மொத்தத்தில் ஆங்கில மொழிக்கு அவர் வாக்குகளே பெரும் சிறப்பைத்தந்து அதனைப் புகழேணியில் ஏற்றி வைத்தன. அவரும் ஆங்கில மொழியாலேயே ஒப்பற்றவரானுர். இந்தச் சோதனை ஒரு ஒப்பற்ற சோதனை அல்லவா?

### 3. மொழியின் ஏற்றம்

இப்படிப்பட்ட ஷேக்ஸ்பியர் என்னும் கவிஞனைப் பற்றி ஓர் ஆங்கில அரசியல்வாதி பேசும்போது "நாம் பெருமையாகக்

கைப்பற்றியிருக்கிற இந்தியாவையும் புறக்கணிப்பேன்; எங்கள் ஷேக்ஸ்பியரை விட்டுக் கொடுக்க மாட்டேன்'' என்று சொன்னாராம்.[4] இப்போது ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுக்கொடுத்து விட்டார்கள்; ஆனால் ஷேக்ஸ்பியரை விடவேயில்லை. அந்த ஷேக்ஸ்பியர் பிறந்த ஊருக்குக்[5] காசியாத்திரை போல உலகத்தார் எல்லாரும் செல்லுகிறார்கள். அவர் வாழ்ந்த வீட்டை நாட்டுப் பொதுச் சொத்து ஆக்கியிருக்கிறார்கள். அவருடைய நாடகங்களை உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் மொழிபெயர்த்து இருக்கிறார்கள். அப்பெருமை ஆங்கில மொழிக்கு வந்திருக்கிறது. அதனை எல்லா நாட்டார்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர் ஒருவர் மட்டுமல்ல, கணக்கற்ற கவிஞர்கள் ஆங்கில மொழியில் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் எல்லாரும் தம் மொழிக்குச் சிறப்புத் தந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைக்குச் சிறப்பினைத் தந்திருக்கிறார்கள். காவியம், கதை, சிறுகதை, சிறுபாடல், இன்னிசைப்பா, தனிப்பாடல், காதற்பா, அவலப்பா, நகைச் சுவைப்பா, புதிர், கட்டுரை, அங்கதம், இரங்கற்பா முதலான பகுதிகளொவ்வொன்றிலும் பல பெரும் புலவர்கள் தோன்றி மொழியை மேம்படுத்தி இருக்கிறார்கள். விஞ்ஞானக்கலை முன்னேறவே அதற்கேற்ற நூல்களும் தோன்றின. புதுப் புதுச் சொற்களும் விளைந்தன உலகிலுள்ள பல மொழிகளிலிருந்தும் பல சொற்களை ஏற்றுக்கொண்டு ஆங்கிலம் அவற்றை தன்மயம் ஆக்கிக் கொண்டது. இவ்விதம் பலவகை வழிகளிலும் ஆங்கில மொழி சிறந்து வளர்ந்தது.

புலவர்களால் ஆங்கில மொழி வளர்ச்சி அடைந்தது மட்டுமன்றிப் பல நாட்டு மக்களும் அதனைப் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டதனால் அம்மொழி மிகப் பெருக்கம் அடைந்தது. ஆங்கில நாடு மிகச் சிறியது. ஐரோப்பாவில் இரண்டு தீவுகளில் மட்டும் பேசப்பட்டு வந்தது. பிற மக்களோடு அரசியலிலும், வாணிபத்திலும் சேர்ந்து உழைத்ததனால் அது மற்ற மொழிகளின் கூட்டுறவைப் பெற்றது. ஆங்கிலேயர் தமது ஒப்பற்ற ஊக்கத்தினால் உலகத்தில் பல்வேறு நாடுகளைப் பிடித்து ஆளத் தொடங்கினர். சென்ற இடமெல்லாம் தங்கள் மொழியையே வற்புறுத்திப் படிப்பித்தனர். இதனால் ஆங்கிலம் எங்கும் பரவிற்று. உலகிலேயே மற்ற மொழிகளைக் காட்டிலும் பரவலான இடங்களிலும், மக்களிடமும் அதுவே பேசப்பட்டது. தாய்மொழியல்லாத பிற

மக்களும் அதனை எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்கள். அரசியல், வாணிபம் என்ற இரு துறைகளிலும் ஆங்கிலமே உலக மொழியாகி விட்டது. தன்னரசு ஏற்றுக் கொண்ட பிறநாட்டார்களும் ஆங்கிலம் கற்கத் தொடங்கினுல் இம் மொழியின் ஏற்றத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

## 4. மொழிப் பற்று

ஆங்கில மொழியைத் தம் தாய் மொழியாகப் பேசும் மக்களுக்கு அதன் மீது ஒப்புயர்வற்ற பற்றுண்டு. அதன் மீது மிகுந்த மதிப்பும் கொள்வார்கள். இப்பற்றும் மதிப்பும் தற்காலத்தில் பிறந்ததல்ல; ஆதி முதற் கொண்டே உண்டு. இப்பற்றை அறிவித்ததற்கு மேலே சொன்ன அரசியல் நிபுணனின் கூற்றே போதுமானது. ஷேக்ஸ்பியர் வேண்டும், அவனை விடமாட்டேன் என்ருர். ஷேக்ஸ்பியர் என்ற ஆளை அல்ல. அவன் எழுதிய கவிகளை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று பொருள். அவன் எழுதிய ஆங்கில மொழியை விடமாட்டேன் என்பது அவன் எண்ணம். ஆங்கில நாட்டின் மீது ஏனையோர் பல காலங்களில் படையெடுத்து உள்ளே புகுந்து அதன் பண்பாட்டை அழிக்க முயன்றிருக்கிருர்கள். அப்போதெல்லாம் சிற்சில சொற்களைத் தம் முள் எடுத்துக் கொண்டார்களே யொழிய தமது மொழியைப் புறக்கணிக்கவில்லை; அதனுல் மொழி பெருகிற்றே யொழிய அழியவில்லை. அதுவே மக்களுக்கிருந்த மொழிப் பற்றினைக் காட்டும்.

ஆங்கில நாடாகிய பிரிட்டன் மீது 2000 ஆண்டுகளுக்கு முன் உரோமானியர் புகுந்து புது ஊர்களை ஏற்படுத்தி அவற்றை இணைக்கும் வழிகளை நிர்மாணித்துத் [சாலைகளை அமைத்து] தம் மொழியைப் புகுத்தினுர்கள். நாடு அவர்கள் ஆட்சியில் நான்கு நூற்ருண்டுகள் வரை அடிமையாக இருந்தது. பிறகு வடக்கே பனி நாடுகளிலிருந்து டேன் சாதியார் (Danes) 7-ஆம் நூற்ருண்டில் வந்து நாட்டைப் பிடித்துச் சில ஆண்டுகள் ஆண்டார்கள். அவ் வட நாட்டினரிடமிருந்து பல சொற்களையும், அந்நாட்டுக் கதைகளையும் தழுவிக் கொண்டார்கள். வந்தவர்களைத் துரத்திவிட்டு ஆங்கிலேயரே ஆண்டனர். பிறகு கி. பி. பத்தாம் நூற்ருண்டில் பிரான்சு நாட்டு நார்மண்டியிலிருந்து நார்மன்கள் [Normans] வந்து பிரான்சு மொழியைப் புகுத்தினுர்கள்; பல சொற்கள் வந்தன. வந்த அரசர்களும் பிரபுக்களும் ஆங்கிலத்தைத் தழுவிக்

கொண்டார்களே ஒழிய ஆங்கில மக்கள் புதுமொழியை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னால் வந்த சில பிரெஞ்சு அரசர்களும் அதே கதி ஆனார்கள். பிறகு வடக்கே இருந்து ஸ்காட் மக்கள் அரசாள வந்தார்கள். அவர்களும் ஆங்கில மயமானார்கள். 17 ஆம் நூற்றாண்டில் ஒரு ஜெர்மன் சிற்றரசன் அரசாள வந்தான். அவனும் ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டான். எனவே ஆங்கில மொழி அழியவில்லை; மாறாக வந்தோர்கள் ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டார்கள். புதுச் சொற்கள் வந்து ஆங்கிலத்தை வளப்படுத்தின. இந்த வகையில் ஆங்கில மொழிப் பற்று அது பேசும் மக்களுக்கு மிகுதியும் உண்டென்று அறியவேண்டும். இன்றைக்கும் ஆங்கிலக் குடிகள் வேறு நாடுகளுக்குப் பிழைப்பிற்காகவும், ஆட்சி செய்யவும் செல்லுகிறார்கள். ஆனால் தங்கள் தாய்மொழியை விடுவதில்லை. மொழிப் பற்று அத்தனை உறுதி என்க.

## 5. பிறமொழியாளர் அன்பு

ஒரு மொழி பேசுகிறவர்கள் அம்மொழியில் பற்று வைத்தல் இயற்கை. அவ்விதப் பற்று ஆங்கிலேயர்க்கு மிகவும் உண்டென்று கண்டோம். ஆனால் பிற மொழியாளர் ஒரு மொழியின் மீது அன்பும், மதிப்பும் கொண்டால் அம்மொழி மிகவும் சிறந்ததல்லவா? திருக்குறளையும், திருவாசகத்தையும் பெஸ்கியும், போப்பும் மெச்சித் தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டனர்.[6] அது அந்நூல்கள் உள்ள தமிழ்மொழியின் மீது அவர்கள் வைத்துள்ள பெரும் மதிப்பினால் அல்லவா? அது போலவே ஆங்கில மொழியின் மீது ஏனையோர் வைத்துள்ள மதிப்பு மிகவும் சீரியது என்று கூறுவது மிகையாகாது. ஆங்கிலத்திலுள்ள எல்லாச் சிறந்த நூல்களையும் பிற மொழியாளர்கள் எல்லோரும் மொழி பெயர்த்துக் கொண்டு படித்துச் சுவைக்கிறார்கள்.

மேலும் பிற மொழியாளர்கள் ஆங்கிலத்தைக் கற்று அம்மொழியில் தங்கள் எண்ணங்களை எழுதி வைத்துள்ளார்கள்: புதுக் கதைகள், நாடகங்கள், கவிகள் முதலியவைகளும் எழுதிப் புகழ் பெற்றிருக்கிறார்கள். நமது நாட்டு இரவீந்திர நாதர் [1861—1941] ஆங்கிலக் கவிகள் எழுதி உலகிலேயே ஒரு சிறந்த எழுத்தாளர் என்று நோபல் பரிசும் பெற்றார். தோருதத்து அம்மை, சரோஜினி நாயுடு [1879—1949] முதலியவர்களின் பாடல்கள் ஆங்கிலேயர்களாலும் விரும்பப்படுகின்றன. ரோமேச சந்திர தத்தர் [R. C. Dutt]

எழுதிய ஆங்கிலக் காவியங்களும், நவீனங்களும் மிகவும் பாராட்டப் படுகின்றன. ஜோசப் கான்ராட் [1857—1924] என்ற பிற மொழி யாளன்[7] ஆங்கிலம் கற்று எழுதிய நவீனங்கள் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டன. அதுபோலவே இங்கிலாந்திற்கு வெளியே உள்ள அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியாக் குடிகள் எத்தனையோ நூல்கள் எழுதத் தொடங்கி விட்டார்கள். இதுவே ஆங்கில மொழியினுடைய மேன்மையை எடுத்துக் காட்டுகிறது.

மேலும் உலகில் எந்த நாட்டுப் பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டாலும் ஆங்கில மொழி கற்பிக்காத கழகம் உளதோ என்று கேட்கலாம். கலாச்சாரத்திற்கும் அது வேண்டும்; கலைஞன் ஆர்வத்திற்கும் அது வேண்டும். அரசியல், தொழில், வாணிபம் இவைகளுக்கும் ஆங்கிலமொழி வேண்டும். ஆகவே ஐரோப்பிய வெள்ளையர் பாடசாலைகளில் மட்டும் அல்ல கீழை நாடுகளாகிய ஜப்பான், சீனு, பிலிப்பைன், இந்தோனீசியா, இந்தோ சீனு, பாரசீகம் முதலிய பல நாடுகளிலும் ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கியுள்ளார்கள்; ஏனென்று கேட்கலாம். கல்வியில் சிறப்பு அடைவதற்குத்தான்; அதுவுமன்றி ஆங்கில மொழியினிடம் பிறர் வைத்துள்ள அன்பும் மேன்மையும்கூடக் காரணம் என்றும் கூறலாம்.

## 6. ஆங்கிலமும் மேலைநாட்டுப் பிற மொழிகளும்

ஆங்கிலத்தையடுத்துச் சிறப்புற்று விளங்கும் மேலைநாட்டு மொழிகளில் பிரஞ்சு, ஜெர்மன், ருஷ்யன், இத்தாலியன் என்பவை முக்கியமானவை. பொதுவாக வெள்ளையர் மொழிகள் எல்லாமே பண்டைக் குடிவகைகளை முன்னிட்டுப் பிரிக்கப்படுகின்றன. வடக்கு அல்லது டியூட்டானிக்கு [ Teutonic ] தெற்கு அல்லது இலத்தீன் [Latin] கிழக்கு அல்லது சிலோவோனிக்கு [Slavonic] என்பவைகள். வடக்கு மொழிகளிலே நார்வீஜியன், ஜெர்மன், டச்சு முதலியவைகள் சேரும். தெற்கு மொழிகளிலே இத்தாலியன், பிரஞ்சு, ஸ்பானியம், போர்த்துக்கீசு முதலியவைகள் சேரும். கிழக்கு மொழிகளிலே ருசியா, செர்வியா, கிரீக்கு முதலியவைகள் சேரும். இப்பிரிவுகளிலே ஆங்கிலம் வடக்கு மொழியைச் சேர்ந்தது; ஜெர்மன் மொழிக்குத் தாயாதி ஆக வேண்டும். நார்வீஜியன், டேனீசு, ஸ்வீடன், டச்சு இவைகளுக்கு உறவு முறை கொண்டது. ஆனாலும் பிரிந்து வந்த பிறகு அதன் போக்கு வெகு மேன்மையாகி விட்டது. ஜெர்மன்மொழியில் வல்லெழுத்து

மிகுதி. உச்சரிப்புக் கடினம். வாயில் நுழையாத நீண்ட சொற்கள் உண்டு. ஆனால் அதிலும் பெரிய கவிகள் தோன்றியிருக்கின்றனர். அவர்களிடமிருந்து ஆங்கிலமொழி பலவற்றைக் கடனாகப் பெற்று இருக்கிறது. வடநாட்டுப் பூர்வகதைகளே ஆங்கில மொழியின் வளர்ச்சிக்கு உணவு கொடுத்திருக்கின்றன.

தெற்கு மொழிகளோ உரோமானியப் பண்பாட்டில் பிறந் தவை. இலத்தீன் மொழியின் திசைச் சொற்களாக விளைந்தவை. ஆகவே ஆங்கிலத்திற்கு வேருகக் குடிவளம் பெற்றவை ; என்றாலும் ரோமன் நாட்டார் தொடக்கத்திலே ஆங்கில நாட்டை ஆண்ட தனால் அவர்கள் கலப்பு மிகுதியும் ஏற்பட்டது. ஆங்கிலத்தைக் காட்டிலும் இத்தாலிய மொழி இன்னிசைக்கு உகந்தது என்பார்கள். பிரஞ்சு மொழியில் தேவையற்ற எழுத்துக்கள் மிகுதி. உச்சரிப்பு இல்லாத எழுத்துக்களாலே மொழி கடினமாகிறது. பாரிஸ் (Paris) என்ற சொல் பரி என்றும், Brough என்ற சொல் பரோ என்றும் உச்சரிக்க வேண்டும். அத்தனைக் கடினம் ஆங்கிலத்திற்கு இல்லை. என்றாலும் பிரஞ்சுச் சொற்கள் பல ஆங்கிலத்தில் உள்ளன. கலைச்சொற்களுக்கு இலத்தீனே கடன் கொடுத்தது. அதன் கவிஞர்களும் கணக்கற்ற கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள்.

இனி, கிழக்கு மொழிகளால் ஆங்கிலத்திற்கு உதவி மிகுதி இல்லை. தொலைவு மிகுதியால் எட்டவில்லை போலும். ஆனாலும் கிரீக் மொழியிலிருந்து கணக்கற்ற கதைகள் ஆங்கிலத்தில் புகுந்து இருக்கின்றன. விவிலிய நூலுக்குக் கிரீக்கே உதவி புரிந்து இருக்கிறது.

## 7. ஆங்கிலமும் கீழைநாட்டு மொழிகளும்

கீழைநாடுகள் என்பன ஆசியாக் கண்டத்தில் உள்ளவை. அவைகளிலும் மூன்று வகைகளாக மொழிப் பிரிவுகள் உள்ளன. சித்தியம் என்று மேற்கு நாட்டு மொழிகளையும், இந்தியம் என்று தெற்கு நாட்டு மொழிகளையும் மங்கோலியம் என்று கிழக்கு நாட்டு மொழிகளையும் கூறலாம். இவைகளுக்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள உறவைச் சிறிது ஆராய்வோம்.

அரபி, துருக்கி, பாரசீகம், புஷ்டு, உருது முதலியன சித்திய

மொழிகளாகும். பழைய மொழி ஹிப்ரு என்பது. இவைகள் எல்லாம் ஏனைய ஆரிய மொழிகள் போல இடது புறத்திலிருந்து வலது புறத்திற்கு எழுதப்படுவது இல்லை. வலது புறத்திலிருந்து இடது புறத்திற்கு எழுதப்படுபவை. சிறு வளைவுகளும், புள்ளிகளும் மிகுதியாக இருக்கும். இம்மொழிகளால் ஆங்கிலத்திற்கு மிகுதியாகப் பயன் இல்லை. அராபிக் கதைகள், எண் உருவங்கள், கணக்குச் சொற்கள் இவைகளே இந்த மொழிகளிலிருந்து சென்றன.

தென்மொழிகளோ இந்திய நாட்டு மொழிகள். இவைகள் இரண்டு பகுதிகள் கொண்டன. வட இந்திய மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தன. தென்னிந்திய மொழிகள் திராவிடம் என்று வழங்கும் பண்டைத் தமிழிலிருந்து பிறந்தவை. இவைகளிலே வடநாட்டு மொழிகளுக்கும், ஆங்கிலத்துக்கும் உறவு மிகுதி. அவை ஆரியத்தின் கிளைகளாகும். வட மொழியோ பேசப்படாத மொழியாகி விட்டது.[8] ஆங்கில மொழியோ நன்ருகவும், மிகுதியாகவும் வழங்குகிற மொழி. இந்த வேறுபாடு எப்படி இருந்த போதிலும் பல ஆங்கில நிபுணர்கள் வட மொழி பயின்று, அதிலிருந்து கணக்கற்ற காவியங்களை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்துக் கொண்டார்கள். இதிகாச, நாடகங்களையும் ஆங்கிலக் கவிகள் வரைந்து கொண்டார்கள். வட மொழியிலிருந்து பிறந்த வட நாட்டு மொழிகள் பல இன்றும் பேசப்படுகின்றன. ஆனல் அவைகளால் ஆங்கிலத்திற்கு மிக்க பயன் இல்லை. திராவிட மொழிகளைப் பற்றிப் பின்னல் பேசுவோம்.

கீழ் நாட்டு மொழிகள் ( மங்கோலிய ) சீனம், ஜப்பானியம் முதலியவை. இவைகள் மேலிருந்து கீழே செங்குத்தாக எழுதப்படுபவை ; ஓரெழுத்து ஒரு மொழியாக உள்ளன. அவைகளைச் சித்திர எழுத்துக்கள் எனலாம். இம்மொழிகளால் ஆங்கிலத்திற்குப் பெரும் பயனில்லை. சில கதைகளும் பழமொழிகளும் புகுந்து வந்தன.

## 8. தமிழும் ஆங்கிலமும்

தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் புகுந்து 300 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது அது முதல் ஆங்கிலேயர் சிலர் தமிழ் கற்றுக்

கொண்டு சில அருமையான நூல்களும் எழுதியுள்ளனர். தமிழ் மக்களோ மிகுதியும் ஆங்கிலம் கற்றுக் கொண்டு மிக்க கல்வித் திறமையும் பெற்றிருக்கிறார்கள். சிலரோ தாய்மொழியாகிய தமிழைவிட ஆங்கிலத்திலேதான் நன்கு பேச முடியும் என்று பிதற்றியும் வந்தார்கள். முதலில் வாணிபத்தின் பொருட்டு இரு மொழிகளுக்கும் தொடர்பு ஏற்பட்டது. பிறகு அரசியலின் பொருட்டு அத்தொடர்பு மிகுந்தது. இந்த வகையில் பல சொற்கள் தமிழிலிருந்து ஆங்கிலம் சென்று விட்டன. மிளகுத்தண்ணீர், கட்டுமரம், ஆயா, தேக்கு, இஞ்சி, பந்தல், மாங்காய், கும்பகோணம், ஆயக்கட்டு, அணைக்கட்டு, கீற்று என்பன பல ஆங்கில அகராதியில் ஏறி விட்டன. அப்படியே அநேக சொற்கள் ஆங்கிலத்தில் இருந்து தமிழில் புகுந்து விட்டன. அவைகளைப் பற்றி இங்குக் கூற வேண்டியதில்லை.

மேலும் தமிழ்மொழியிலிருந்து குறள், தேவாரம், திருவாசகம் முதலிய பல ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. இன்னும் பல மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றை முதலில் எழுதியவர் ஆங்கிலத்திலேயே எழுதிவிட்டார்.[9] இந்த வகையில் ஆங்கிலம் தமிழால் பெருக்கம் அடைந்து கொண்டிருக்கிறது.

ஆங்கிலத்தை விடத் தமிழ் பண்டைய மொழி. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இருந்தே தமிழ் ஆராயப்பட்டு வந்திருக்கிறது. அதன் இலக்கியமும் பழமையானது; பண்பட்டது. ஆங்கிலம் மழலை மொழியாகப் பேசப்பட்டு வந்த நாளிலேயே தமிழ் சிறந்த பண்பாட்டு மொழியாகி இருந்தது. தமிழ்ச் சங்க காலத்தில் ஆங்கிலேயர் நிலையான அரசைக் கூடப் பெறவில்லை; ஆங்கிலமும் தனித்த ஒரு மொழியாக வெளிப்படவில்லை. அத்தனை பண்டைமொழி இன்னும் வளரும் மொழியாக இருக்கிறது. பல கோடி மக்களால் பேசப்பட்டும் இருக்கிறது. வடமொழி போல, அறிஞராலன்றி மக்களால் பேசப்படாததல்ல ஆகவே இப்போது ஓங்கி வளர்ந்திருக்கிற ஆங்கிலத்தோடு தமிழ் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் இருக்கிறது அல்லவா ?

தென்னாட்டில் உள்ள மற்ற மொழிகள் தமிழுடன் உறவு கொண்டவை. அவைகள் பழந்தமிழிலிருந்து பிரிந்தவை. வடமொழிக் கலப்பினால் திசைச் சொற்களாகிப் பிறகு வேறு மொழி

களாகவே ஆகி விட்டன. அவ் வடமொழிச் சொற்களை நீக்கிப் பண்டைய நிலையில் வைத்துப் பார்த்தால் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலியவைகள் தமிழேயன்றி வேறல்ல. ஆகவே அவைகளோடு ஆங்கிலத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதில்லை. தனக்கு இணையான தமிழோடு மட்டும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## 9. தமிழ்க் கன்னி வளர்ச்சி

தமிழ்மொழி வளர்ச்சியைக் கூற வந்த வரந்தருவார்[10] அம் மொழியை ஒரு கன்னியாகவே உருவகப்படுத்தி அவள் தோன்றியதிலிருந்து ஏழு பருவ நிலைகளைக் கற்பித்து அவள் இன்னமும் வளர்கிறாள் என்ற நிகழ்கால வினைமுற்றால் முடிக்கின்றார். அந்தந்தப் பருவத்தின் செயல்களாகப் பிறத்தலுக்கும், பிறகு முறையே கிடத்தல், இருத்தல், தவழ்தல், நிற்றல், நடத்தல், பயிலல், வளர்தல் என ஏழு செயல்களை [வளர்ச்சிக்குமாக] வகுத்துக் கொண்டார். இவைகள் எல்லாம் குழந்தைப் பருவத்திலேயே ஏற்படும் செயல்கள். ஆகவே அப்பெரியாருடைய கருத்தில் தமிழ்க் கன்னி அல்லது தமிழணங்கு இன்னும் குழவிப் பருவம் மாறாத இளங்கன்னியாகவே இருக்கிறாள் என்பதும் தமிழ்க்கன்னி இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறாள் என்பதும் பெறப்படுகின்றன. குழவிப் பருவத்திலே ஒரு கன்னி வெகு நன்றாகச் செழிப்பாக நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளருவது இயல்பல்லவா ? அந்த முறையில் அக்கன்னி வளருகின்றாள் என்பதை மொழிப்பற்றினால் மட்டும் அன்று; உண்மையிலேயே அவ்வாறு வளர்ந்து வருவதைக் கருதியும் கூறுகிறார். இதனை ஒரே பாடலில் கூறும்படியான பிள்ளைத் தமிழாக அமைத்துப் பாடி இருக்கிறார். அப்பாடல் கீழ்வருமாறு:

*பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்*
*திருப்பிலே இருந்து வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை*
*நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து ஓரே*
*மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.*[11]

பிள்ளைத்தமிழ், உலா, முதலிய பிரபந்தங்களுக்கும் இலக்கணமாக உள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற ஏழு பருவங்களையும் எண்ணி அவைகளைப் போல ஏழு செயல்களைத் தமிழணங்கிற்குக்

கற்பித்தார் போலும். தேவர்களின் ஆயுள் போலத் தெய்வத் தமிழ்க் கன்னியின் வளர்ச்சியை ஏழு பருவங்களாகக் கொண்டு பருவத்திற்கு 500 ஆண்டுகளாக ஏழு பருவங்களுக்கு 3500 ஆண்டுகள் எனக் கொண்டார் போலும். பொதியமலையிலே பிறந்த தமிழ் பாண்டியன் அவையிலே கிடந்தது (முதல் சங்க காலம்). பிறகு சங்கப் புலவரிடம் இருந்தது (கடைச்சங்ககாலம்). பிறகு வைகை ஏட்டிலே தவழ்ந்தது (சைவ வைணவ காலம்). பிறகு நெருப்பிலே நின்றது (சோழர் ஆதிக்கம்—நெருப்பு வெளி மொழிக் கலப்பாகிய நெருப்பு என்க). பிறகு கற்றோர் நினைவில் நடந்தது (சேக்கிழார், கம்பர் செயங்கொண்டார் காலம்); மருப்பில் பயின்றது (மடாதிபதிகள் மூலம் பயின்றது) ; இறுதியில் மருங்கிலே வளர்தல் (நிகழ் காலம்). அதாவது தமிழ்மொழி நூலாராய்ச்சி பெற்று வருகிறது. இந்தவகையில் ஏழு பருவங்களிலும் தமிழ்க்கன்னி படிப்படியாக வளருகின்றாள் என்று கூறுவதனால் மற்ற மொழிகளைப் போலத் தளர்ச்சி பெறும் காலம் அவளுக்குத் தொடங்கவில்லை என்பது புலவர் கருத்து ஆகும்.

### 10. ஆங்கில மாது வளர்ச்சி

ஆங்கில மாது அண்மையில் தோன்றி விரைவில் வளர்ந்து இன்று முதிர்ச்சியும் பெற்றுள்ளாள். அவளை வருணிக்க வரந்தருவார் போன்ற ஒரு கவிஞரும் தோன்றியிருந்தால் அடியிற் கண்ட கருத்துக்களை அமைத்துப் பாடியிருப்பார். ஆயிரத்து இரு நூறு ஆண்டுகளுக்கு முன் பிரிட்டன் தீவின் உள் நாட்டு மண்ணிலே வடநாட்டிலிருந்து சென்ற வீரர் விதைத்த விதையிலிருந்து அவள் தோன்றினாள். கீழ்த்திசைக்கண் இருந்து வந்து அவளை வேட்டு வலிமையால் போரிட்டுக் கவர்ந்த அவ்வேற்று வீரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டாள். பிறகு பூப்பூம் பருவமும் உற்றுத் திரண்டாள். மணப்பருவம் உற்று மகிழ்ந்தாள். இல்வாழ்க்கையில் இயற்கையைக் கண்டு இன்புற்றாள். இல்லற வாழ்க்கையின் அநுபவத்தின் வாயிலாக முதிர்ந்த நிலை பெற்று விளங்குகிறாள். பிறருக்குத்தன் அனுபவங்களைக் கூறிப் புத்திமதி புகன்று அக்களிப்பில் திகழ்கிறாள்.

ஆகவே தமிழணங்கைப் போல ஆங்கில மாதின் வாழ்க்கையையும் ஏழு பருவங்களாகப் பிரித்து நாம் வருணிக்கலாம்.

| | | |
|---|---|---|
| I. | குழவிப் பருவம் | 750—1300 |
| | 1) கிடத்தற் பருவம் | 750—1000 |
| | 2) உந்துதல் பருவம் | 1000—1300 |
| II. | கொச்சைப் பருவம் | 1300—1400 |
| | 1) குதலைப் பருவம் | 1300—1350 |
| | 2) மழலைப் பருவம் | 1350—1400 |
| III | கன்னிப் பருவம் | 1400—1500 |
| IV. | பூப்புப் பருவம் (இயல், இசை, நாடகம்) | 1500—1650 |
| V. | மணப்பருவம் (காதல்) | 1650—1750 |
| VI. | வாழ்க்கைப் பருவம் | 1750—1900 |
| | 1) இன்ப வாழ்க்கை | 1750—1825 |
| | 2) இல்வாழ்க்கை | 1825—1900 |
| VII. | முதுமைப் பருவம்[12] | 1900—1950 |

இவ்வகையாக ஆங்கில மாதின் வாழ்க்கையை ஏழு பருவங்களாக வகுத்து விவரித்தால் அவளுடைய முழு வரலாற்றையும் பண்பாட்டோடு அறியலாம்.

இப் பாகுபாடு ஆங்கில மாதின் பொது வாழ்க்கையைக் காட்டிய போதிலும் அவளுடைய மரபின் வளர்ச்சியும் அதே பாகுபாட்டையே கொண்டுள்ளதென அறியலாம். ஆங்கிலம் மட்டுமே அல்ல, எந்த உயரிய மொழியை எடுத்து ஆராய்ந்தாலும் உரைநடை, விஞ்ஞானம் முதலிய பகுதிகளைக் காட்டிலும் அம்மொழியில் அமைந்த பாக்களே நெஞ்சின் தன்மையை நன்கு விளக்கும். அந்த முறையில் ஆங்கிலமும் உள்ளதாதலின் நாம் பொதுவாகச் சொன்ன ஆங்கில மாதின் பருவங்களின் வளர்ச்சி ஆங்கிலப் பாமகளுக்கும் ஏற்கும் என்று அறிக.

இவ் இரு மொழிமகளிரிடத்தும் ஒற்றுமைப் பண்புகள் பல உண்டு. இரு மகளிரும் அறிவில் முதிர்ச்சி பெற்றுள்ளவர்கள். பண்பாட்டில் திகழ்ந்து விளங்குகிறவர்கள். தாம் வசிக்கும் இல்லங்களான தாய்நாடுகளுக்கு மேன்மை தருகிறவர்கள். தம் தனயர்களால் உழுவலன்போடு போற்றப்படுகிறவர்கள். தனயர்களின் பண்பாட்டை உலகில் விளங்கச் செய்கிறவர்கள். ஏனைய மொழி மங்கையர்களுக்குத் தம் வனப்புச் செயல்களில் சிலவற்றைப் பகிர்ந்து கொடுத்து அவர்களையும் இனிமை பெறச் செய்கிறவர்கள். அழகிலும், வடிவிலும், நடையிலும், செயலிலும்,

ஒழுங்கு பெற்ற நன்னிலைமை பெற்று உலகிலேயே சிறந்த மங்கையர் திலகங்களாகப் புகழ் பெற்று என்றும் குறையா வனப்போடு வாழ்ந்து வருகின்றவர்கள். இந்த ஒற்றுமைப் பாட்டினை எடுத்துக்காட்டிவிட்டு இனி ஆங்கிலப் பாமகளுடைய வாழ்க்கை வரலாற்றை விரிவாகக் கூறுவோம்.

## குறிப்புகள்

1. ஆக்ஸ்போர்டு ஆங்கிலப் பேரகராதியின் இரண்டாவது இணைப்பின்படி (New Supplement 1972) 4,64,000 வேர்ச்சொற்கள் ஆங்கில மொழியில் உள்ளன.

2. [ ] பகர அடைவுக்குள் இந்நூலில் தரப்படும் சொற்கள், குறிப்புகள் அனைத்தும் பதிப்பாசிரியரால் தரப்படுபவை. ஆசிரியரின் மொழிநடையிற் (1933-36) காணப்படும் வடசொல்லாட்சி, சொல் வழக்கின்மை போன்ற மொழிநடை வேறுபாடுகளைக் கருதி இக்கால வழக்குக்கேற்பப் பொருந்தும் சொற்களும் தொடர்களும் இப்பகர அடைப்பில் தரப்படுகின்றன. மேலும் கருத்து விளக்கத்திற்காகத் தேவைப்படும் தொடர்கள், நூற்பெயர்கள் ஆசிரியரின் பெயர், அரசர்களின் அரச ஆண்டுகள் முதலிய பிற செய்திகளும் இப்பகர அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன.

3. முதலாம் எலிசபெத் ( Elizabeth I ) ஆங்கில இலக்கியத்தின் பொற்காலம் என்று கருதப்படும் கி. பி. 16 — ஆம் நூற்றாண்டில் ( 1558-1603 ) இங்கிலாந்து நாட்டின் அரசியாகத் திகழ்ந்தவர்.

4. Thomas Babington Macaulay.

5. Strateford—upon—Avon நடு இங்கிலாந்தில் உள்ள ஒரு சிறு நகரம்.

6. திருக்குறளை இலத்தீன் மொழியில் பெஸ்கியும், திருவாசகத்தை ஆங்கிலத்தில் போப்பும் மொழியாக்கம் செய்துள்ளனர்.

7. உக்ரேனிய நாட்டில் பிறந்து ஆங்கிலக் குடிமகனாக மாறியவன் (1886)

8. ஒரு காலத்தில் பேசப்பட்டு வந்த வடமொழி பிற்காலத்தே பேச்சு வழக்கற்றது என்பது ஆசிரியர் கருத்தாகலாம். வடமொழி எக்காலத்தும் பேச்சு மொழியாக இருந்ததில்லை என்ற கருத்தும் நிலவி வந்துள்ளது. காண்க : '' எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் ஸமஸ்கிருதம் தேச பாஷையாக பேசப்படவில்லையென்று தெரிகிறது '' — ஸமஸ்கிருத பாஷாப் பிரயோஜனம், 29—10—1932 ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய நன்மொழிகள், இரண்டாம் பாகம், 'சங்கர விஜயம்,' மதராஸ் லா ஜர்னல் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை, 1933. ப. 4.

9. 1859-இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த Tamil Plutarch என்ற நூலின் ஆசிரியர் சைமன் காசி சிட்டி (Simon Casie Chitty), 1929-இல் வெளிவந்த A History of Tamil Literature என்ற நூலின் ஆசிரியர் எம். எஸ். பூரண லிங்கம் பிள்ளை, 1956-இல் வெளிவந்த History of Tamil Literature என்ற நூலின் ஆசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய மூவருள் இந்நூலாசிரியர் யாரைக் குறிப்பிடுகிருர் என அறிய இயலவில்லை.

10. வில்லிபுத்தூராரின் மகன்

11. *வில்லிபாரதம், சிறப்புப்பாயிரம்*

12. இங்கு ஆசிரியர் ஆங்கிலத்தின் மொழி வளர்ச்சி முழுமையை ( maturity ) ‘ முதுமை ’ என்னும் சொல்லால் குறிப்பதாகக் கொள்ளலாம்.

# குழவிப் பருவம்

750-1300

# I. குழவிப் பருவம்
## (750—1300)

## I. கிடத்தற் பருவம் (உயிர்ப்பு) (750 – 1000)

### *1. பண்டை வரலாறு*

ஆங்கிலப் பாமகளின் வளர்ச்சி வரலாற்றைக் காணும் போது அந்நாட்டுச் சரிதப் பகுதியும் ஆங்காங்கே கூறுதல் வேண்டும். எந்த மொழியும் அவ்வந் நாட்டு மக்கள் வரலாற்றை ஒத்தே வளருகிறதல்லவா? ஆங்கிலப் பாமகளும் அந்த முறையிலேயே சிறந்து வளர்ந்தாள். ஆங்கிலப் பாமகள் தோன்றி வளர்ந்த நாடு பிரிட்டன் என்ற ஒரு தீவு. ஐரோப்பாவின் மேற்குக் கரையில் அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு பெரும் தீவு — ஐரோப்பா சமநிலத்திற்கும் அத்தீவிற்கும் இடையில் 25 கல் அளவு கொண்ட ஒரு குறுகிய நீர்ப் பிணைப்பே உண்டு. கடலால் இயற்கை அரண் ஒன்று அதற்கு ஏற்பட்ட போதிலும் பிற நாட்டார் புகுவதற்கும் எளிதாகவே இருந்தது. அங்கு இருக்கும் மக்கள் பிற நாட்டாரின் உறவு இன்றி வாழுதலும் அரிது. பெருந் தீவானாலும் நாடு சிறியதே. ஆகவே மிகுந்த ஊக்கத்தோடு வசதிகளைத் தேடிக் கொள்ளாமல் அந்நாட்டு மக்கள் பிழைத்தல் அரிது. எனவே தொடக்கத்தில் இருந்து முயற்சியும், அதற்கேற்ற ஆண்மையும், வீரமும் பெற்றே விளங்கினார்கள். அந்தப் பண்புகளுக்கு ஏற்ற பெருமையும் புகழும் பெற்று விளங்கினார்கள். அவர்களுடைய நாவரசியாகிய ஆங்கிலப் பாமகளும் அப்படிப்பட்ட பண்பாடுகளில் தோன்றி வளர்ச்சியுற்று, உலகிலேயே சிறந்த வனப்பும், பெருமையும் உடையவளாகத் திகழ்கிறாள். தற்போது ஏனைய மொழி அரசிகளைத் தனது தங்கையர்களாகவும், புதல்வியர்களாகவும் கொண்டு அன்போடு அணைத்து வளர்த்து உதவி புரிந்தும் வருகிறாள். அன்னாளுடைய தோற்றச் சிறப்பை இனிக் கூறுவோம்.

பிரிட்டன் நாற்புறமும் கடலால் சூழ்ந்த தீவாக இருக்கிறது என்று கூறினோம். அத்தீவு பல சிறு தீவுகளையும் தன்பால் அடக்கியுள்ளது. ஆகவே அது தீவுகளின் தொகுதி என்றே கூற வேண்டும். சமநிலமும், குன்றுகளும் ஆறுகளும் படைத்த

நிலமாக இருப்பதனுல் அது பல இயற்கைப் பிரிவுகளாக அமைந்திருக்கிறது. இருபத்தைந்து நூற்ருண்டுகளுக்கு முன் அது காடுகள் அடர்ந்த நாடாக இருந்த போது பிரிட்டன் என்ற பண்டைக் குடிகள் அதில் வசித்து வந்தார்கள். அவர்கள் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டு, மரவுரிகளை அணிந்து கொண்டு ஒரு முரட்டு மொழியைப் பேசிக் கொண்டு இருந்தார்கள். பெருங்கற்களை வளைவாக அடுக்கி அதில் தெய்வ ஆராதனை புரிந்து வந்தார்கள்.[1] அவர்கள் பல பகுதிகளில் பல வேறுபாடு கொண்ட மொழிகளையும் பேசி வந்தார்கள். குடிகளுக்குள் அடிக் கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு ஒற்றுமை இன்றி வாழ்ந்து வந்தார்கள்.

இப்படியிருக்க இருபது நூற்ருண்டுகட்கு முன் உரோமா னியத் தலைவன் சீசர் என்போன் இத்தீவுக்கு வந்தான். தீவின் வனப்புகளையும், நாட்டு மக்களின் பண்டைத் தன்மைகளையும் கண்டு அதனைக் கைவசப்படுத்த எண்ணினுன். சிறிது காலத் திற்குள் உரோமானியர் இந்தத் தீவைப் பிடித்து நகரங்களைக் கட்டி அதில் பாதைகளை ஏற்படுத்தினுர்கள். பிரிட்டன் மக்களும் உரோமானிய ஆட்சியையும், அவர்கள் சமயங்களையும் ஏற்றுக் கொண்டனர். உரோம் கிறிஸ்துமயம் ஆக ஆங்கிலேயரும் கிறிஸ்தவர் ஆனுர்கள். 5-ஆம் நூற்ருண்டில் உரோம் நசுக்கப் பட பிரிட்டனில் இருந்த உரோமானியர் அதனை விட்டுச் சென் றனர். பிரிட்டானியர் சுய ஆட்சி பெற்று அதனை வகிக்க முடி யாமல் வீண் சச்சரவுகளாலும் உள்நாட்டுக் கலகங்களாலும் துன்பப்பட்டு வந்தார்கள்.

அப்போது வடமேற்கு ஐரோப்பாவில், ட்யூட்டன் வகுப்பி னர் வசித்து வந்தனர். அவர்களிலே ஜூட் (Jute) ஆங்கில்ஸ் (Angles) சாக்சானியர் (Saxons) என்ற மூன்று குடி மரபி னர் இருந்தார்கள். அவர்கள் வீரத்தில் சிறந்தவர்கள். தாங் கள் வசித்து வந்த நாடு மிகக் குளிரானதனுலும், செழிப்புக் குறைவாக இருந்ததனுலும் அந்நாட்டை விட்டுத் தெற்கே வரத் தொடங்கினுர்கள். பிரிட்டனில் குடிகள் காட்டு மிராண்டிகள் போல் சண்டை சச்சரவுகள் செய்து வருவதைக் கண்டு அதில் புகுந்தார்கள். அவர்கள் படகு ஓட்டுவதில் மிகவும் வல்லவர்கள். எனவே பழைய பிரிட்டானியர்களை எளிதில் வென்று அந்நாடு முழுவதும் குடியேறினுர்கள். சாக்ஸன் குடியேறிய பகுதிகள்

'' செக்ஸ் '' என்னும் பெயர் பெற்றன (உ. ம். சஸ்ஸெக்ஸ், வெஸ்ஸெக்ஸ் ). அவ்வாறு குடியேறியவர்கள் தம் மொழிகளோடு பிரிட்டனின் பழைய மொழியையும் ஏற்றுக் கொள்ளவே ஒரு கலப்பு மொழி ஏற்பட்டது. அவ்வாறு ஏற்பட்ட கலப்பு மொழி ஆங்கிலோ-சாக்ஸன் ( Anglo-Saxon ) என்ற பெயர் பெற்றது. இதுதான் புதுமொழியின் தோற்றம். அதிலிருந்துதான் தற்கால ஆங்கில மொழியும் பெருகிற்று.

இவ்வாறு வடக்கே இருந்து வந்து குடியேறிய ஆங்கிலோ-சாக்ஸன் குடிகள் பிரிட்டனை ஏழு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஏழு அரசுகளாக ஆண்டனர். அவர்களுள்ளும் அடிக்கடி சண்டைகள் நடந்தன. சில அரசுகள் ஒன்று சேர்ந்தன. அவர்களிலே ஆல்பிரட் [King Alfred the Great 849—899 ] என்ற அரசன் மிகவும் புகழ் பெற்றவன். அவன் காலத்தில் வடக்கேயிருந்து டேன் ( Dane ) என்ற குடிகள் படையெடுத்தார்கள். அவர்களை ஆல்பிரட் தடுத்து வெற்றி பெற்றான். ஆனால் அவனுக்குப் பிறகு மீண்டும் டேன்கள் வந்து நாட்டைப் பிடித்தனர். அந்த டேன்களில் கான்யூட் [ Canute II 1016-1035 ] என்ற அரசன் மிகப் புகழ் பெற்றவன். மீண்டும் ஆங்கிலோ—சாக்ஸன்களே அரசைப் பெற்று ஆளுகையில் நாடு முழுதும் ஒரு குடைக்கீழ் வந்தது. எட்வர்ட் [ Edward the Confessor 1043 - 1066 ] என்றவன் சிறப்புடன் ஆண்டான். பிறகு ஹெரால்ட் [ Harold II January 6 — October 14, 1066] அரசுக்கு வரவே நார்மண்டியிலிருந்து வில்லியம் என்ற சிற்றரசன் தனக்கே நாடு உரியது என்று சொல்லிப் பிரிட்டன் மீது படையெடுத்தான். 1066-இல் நடந்த போரில் ஹெரால்ட் கொல்லப்பட்டு வில்லியம் [William, the Conqueror 1066-1087] என்ற நார்மன் அரசன் ஆங்கில அரசனானான். நார்மன் குடிகள் ஆங்கிலர் போல வடக்கேயிருந்து வந்த தாயாதிக் கூட்டத்தார்தான். ஆகவே ஆங்கில அரசு ஒரு தனி அரசு ஆயிற்று. ஆங்கிலோ-சாக்ஸன் மொழியிலும் நார்மன் சொற்கள் புகுந்து மொழி பெருக்கம் அடைந்தது. மொழியின் பெயரும் ஆங்கிலோ-நார்மன் ( Anglo—Norman ) என்று ஆயிற்று. இதுதான் ஆங்கில அரசியல் சரிதம். அதுவே ஆங்கில மொழியின் சரிதமும் ஆயிற்று.

### 2. மொழியரசி தோற்றம்

வடமேற்கு ஐரோப்பாவில் குடியேறியிருந்த ஆங்கிலோ—

சாக்ஸன் குடிகளோடு அங்கு இருந்தே முன்னால் பிரான்ஸ் கரையில் குடியேறியிருந்த நார்மன் குடிகள் இணைந்து 6 முதல் 10 நூற்றுண்டுகளில் ஒரு புதிய வகுப்பும், ஒரு புதிய கலப்பு மொழியும் பிரிட்டனில் தோன்றின. அம்மொழிக்குப் பிரிட்டனில் பழைய மொழி அடிப்படையாகவும் புதிதாக வந்த நான்கு குடிகளின்[2] மொழிகளும் கூட்டு மொழிகளாகவும் அமைந்து தம்மில் நன்கு விரவிக் கலந்து ஒரு தனிப் புது மொழியாக ஆங்கிலம் தோன்றிற்று. ஆறு பொறிகளில் உதித்த ஆறு தெய்வக் குழவிகள் உமையம்மை அருளால் ஒன்று சேர்ந்து ஒரு கந்தன் ஆனதுபோல் ஆங்கிலப் பாமகளும் ஒரு மொழியரசியாகப் பிரிட்டானியாவில் (Breton) உதித்தாள்.

ஆறு குழந்தைகளுக்கும் பாலூட்டி வளர்த்தவர்கள் ஆறு கார்த்திகைப் பெண்கள். ஒன்று சேர்ந்து கந்தன் ஆனபிறகு ஊட்டி வளர்த்தவள் உமை அம்மை. அதுபோல ஆங்கிலோ—சாக்ஸன் ஆங்கிலோ—நார்மன் முதலிய பல பகுதிகளாக வளர்ந்து தோன்றிய ஆங்கிலப் பாமகளுக்கு அவ்வக்காலத்தில் பல கவிஞர்கள் தோன்றிப் பாலூட்டி வளர்த்திருக்கிறார்கள். அவர்கள் அளித்த பாலாகிய கவிதைகள் சில இந்நாளிலும் இருக்கின்றன. அவைகளின் பெயர்களைச் சற்றுக் கூறி மகிழ்வோம்.

ஆதி பிரிட்டானியக் கவிகள் ஏதாவது எழுதினார்களோ என்னவோ அறியோம். அவர்களுக்கு எழுதவும் தெரியுமோ கவி பாடவும் தக்க பண்பாடு அடைந்தார்களோ என்னவோ சொல்ல முடியாது. பல ஆண்டுகளாக உரோமன் ஆட்சிக்குட்பட்ட அடிமை அரசாக இருந்ததனால், உரோமன் மொழியான இலத்தீனை மட்டும் அறிந்திருப்பார்கள். பிறகு ஆங்கிலோ—சாக்ஸன்கள் நாட்டில் குடியேறியபோது பிரிட்டானியர்கள் அவர்களோடு கலந்து தம் மொழியோடு ஆங்கிலோ—சாக்சனைச் சேர்த்துக் கொண்டார்கள். இலத்தீன் ஓடிப்போக ஆங்கிலோ—சாக்ஸனுக்கு மதிப்பு ஏற்பட்டது. ஆனால் ஆங்கிலோ—சாக்சானியர் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவவே உரோமானியர் மதத்திற்கு உட்பட்டார்கள். ஆகவே ஆலயங்களிலும், மடங்களிலும் மீண்டும் இலத்தீன் மொழியே வழங்கப்பட்டது. முதலில் தோன்றிய புலவர்கள் இலத்தீனில் எழுதத் தொடங்கினர். ஆகவே மக்கள் பேசும் மொழி ஒன்று; ஆலயங்களில் பிரார்த்தனைகளில் வழங்கும் மொழியொன்று. இவ்வாறு வெகுகாலம் இருக்க முடியாதல்லவா?

மக்கள் சிறிது சிறிதாகக் கல்வியறிவு பெறத் தங்கள் கருத்துக்களை எழுத்தில் அமைக்கத் தொடங்கினுர்கள். இயல்பாக அக்காலத்திற்கு ஒத்த பண்பாட்டிற்கு அமைந்த கருத்துக்களாக அவை இருந்தன.

அவர்கள் எழுதிய மொழி அப்போது பேசிய மொழி அன்று. உச்சரிப்பும் வேறே. இப்போது அவைகளைப் படித்தால் வேறு மொழி எனவே தோன்றும். நமது நாட்டில் சங்கத் தமிழுக்கும் தற்காலப் பேச்சுத் தமிழுக்கும் எத்தனை வேற்றுமை இருக்கின்றது. அதைவிடப் பன்மடங்கு ஆங்கிலோ—சாக்சனுக்கும் தற்கால ஆங்கிலத்திற்கும் இருக்கின்றது. அக்காலத்துக் கவிகளைத் தற்கால மொழியில் மொழிபெயர்த்து எழுதினுல் அன்றி பொருள் அறிய மாட்டோம். இந்த நிலையில் அவர்கள் மொழிப்போக்கு இருந்தது. சில கருத்துக்களை இங்கே எழுதுவோம். பல ஆண்டுகளாக ஆராய்ந்த பெரும் நிபுணர்களான மொழியாராய்ச்சி வல்லுநர்களால்தான் இக்கவிதைகள் வெளியிடப்பட்டன. 13, 14—நூற்ருண்டுகளாக இவைகள் அழியாமல் இருந்ததும் வியப்பானதேயாகும்.

## 3. முதல் எழுத்தாளர்கள்

உள்நாட்டு மொழியைத் தம் கவிகளால் முதன்முதலில் அணி செய்தவர்கள் ஆல்ட்ஹெலம் [Aldhelm 640—709]; பீட் [Bede 673—735]; அல்குயின் [Alcuin 735—804] என்ற எழுத்தாளர்கள். அவர்களில் பீட் என்றவன் சமய வரலாற்றை எழுதினுன். அவன் பல கலைகளையும் பயின்றவன். வெகு உருக்கமாகவும், நெஞ்சில் ஊன்றும்படியாகவும் கருத்துக்களைக் கூறி உள்ளான். கி.பி. 633-இல் எட்வின் [Aedwin] என்ற அரசனைக் கிறிஸ்து சமயம் தழுவச் சொன்ன போது கூறிய செய்தியை அடியிற் கண்ட உருக்கமொழியில் எழுதியிருக்கிருன்.

"அரசே, இப்புவியில் மனிதன் வாழும் தற்கால வாழ்க்கையை முன்பின் நமக்குத் தெரியாத வாழ்விற்கு ஒத்திட்டுப் பார்த்தால், ஒரு மண்டபத்தில் நீயும் உன் ஆட்களும் அமர்ந்து, சுகமாக விருந்து அயரும்போது ஒரு கதவின் வழிப் புகுந்த ஒரு குருவி அம்மண்டபத்தில் நுழைந்து மற்ெருரு கதவின் வழி வெளியேறுவதை ஒத்துள்ளது. மண்டபத்தில் வெளியே மிகக் குளிருடன் புயல் வீசுகிறது. அக்குருவி அதை விட்டுச் சூடு மிளிரும் மண்டபத்துள் நுழைந்து அங்குள்ள சுகத்தை அதுவும் பெற்று, காற்றுக்கடக்கமாக இருந்து விட்டு மீண்டும் குளிர்ப்புயலில் பறந்தோடுகிறது. அதுபோல் மனிதனுடைய வாழ்வு இப்புவியில்

சுகமாகத் தோன்றுகிறது. முன்பின் யாதோ? அறியோம். அதையும் தூயதாக்கும் இந்தச் சமயக் கொள்கை''[3] இந்தக் கருத்து எத்தனை ஆணித்தரமாக இருக்கிறது பாருங்கள்.

## 4. பண்டை ஏடுகள்

ஆங்கிலோ-சாக்ஸன் பாக்கள் நான்கு ஏட்டுத் தொகுதிகளாய்க் கிடைத்திருக்கின்றன. அவையாவன :

1. கீட்மன் பாடல்கள் (Caedmonian poems) சமயச் செய்யுள்கள்.
2. செய்யுள் திரட்டு (அன்பு, இசை, இரங்கற்பாக்கள்)
3. பியோவுல்ப் (Beowulf) ஜூடித் (Judith)
4. அடியார்கள் சரிதைகள் (சமயக் கதைகள்).

இவைகளில் கவிஞன் தன் அறிவால் ஒரு பொருள் பல சொற்கள், ஆகுபெயர், அணிகள் முதலியவைகளைப் பெரிதும் ஆண்டிருக்கிறன். எடுத்துக் காட்டாக யாக்கை என்பதற்கு எலும்புக் கூடு, நெஞ்சு என்பதற்கு மார்பின் சரக்கறை, நாவிகன் என்பதற்கு நீர்மேல் வழி நடப்போன், கண் என்றால் சிரசின் அணிகள் முதலியன,[4]

இந்தக் கவிதைகளில் பியோவுல்ப் (Beowulf) பண்டைக் கால வாழ்க்கையைச் சித்திரிப்பது, இது 6-ஆம் நூற்றுண்டில் நடந்த ஒரு போரை வர்ணிப்பது. அப்போரில் பியோவுல்ப் என்ற வாலிபப் போர் வீரன் புரிந்த சாகசச் செயல்களை இக்கவிதை வருணிக்கிறது. அந்தப் போர் டென்மார்க்கில் நடந்ததாகக் கூறுவதால் இக்கவிதை சுயநாட்டுக் காவியம் அல்ல. ஆகவே தமது பூர்வீக நாட்டுக் கவிதையை ஆங்கிலோ-சாக்ஸனில் வழி நூலாக்கிப் பாடியிருக்கலாம்.

சிறு கவிதைகளிலே நாடோடி [The Wanderer] நாவிகன் [The Seafarer] என்ற பனுவல்களில் அரிய கருத்துக்கள் பல மிளிர்கின்றன. மேலும் சில போர்ப்பாடல்கள் பாடப்பட்டு இருக்கின்றன. அவைகளில் அக்கால மக்களின் போராவேசம்நன்கு விளங்குகிறது. சண்டைகளும், வெற்றிகளும் அழகிய மாலைகளாகப் பாடப்பட்டிருக்கின்றன. ப்ருனன்பர் (Brunanburh) மால்டன் போர் (Battle of Maldon) அவைகளில் உயர்ந்தவை. சங்க காலத்து வேளிர் போர்களைப் போல் அக்காலத்து ஆங்கில நாட்டுக் குறுநில மன்னர்களின் போர்களும், வெற்றிகளும் இங்கே

புகழப்பட்டுள்ளன. படுகளத்தில் பிணங்களை உண்ணும் கழுகுகளின் செயல்கள் கலிங்கத்துப்பரணியில் உள்ள பேய் முறையீடு போல இருக்கும்.

கிறிஸ்து சமயக் கவிதைகள் சிலவுண்டு. அவைகளில் சிறந்தவை சினிவுல்ப் (Cynewulf) இயற்றிய கிறிஸ்து (Christ), புனிதவான்களின் சரிதைகள் (The Lives of the Saints) என்பன. கிறிஸ்து சரிதை ஆயிரத்து எழுநூறு அடிகள் கொண்ட ஒரு பனுவல். இதில் சுவையுள்ள பகுதிகள் பல உண்டு. எடுத்துக்காட்டாகப் பின்வரும் அடிகளைக் காண்க:

### இறைவன் கொலு

*வல்லமை மிக்க வானவர் இறைவன்*
*சொல்லரும் புனிதச் சொர்க்கர்க் கரசன்*
*கூடிய அமரர் குழாங்கள் சூழ*
*நாடிய தலையவர் நன்கு தொடர*
*வீரப் புனிதம் மிகுகுழு அமரர்*
*சார நிற்கச் சால்பின் ஒளிமிக*
*அப்பெருங் குருவோ அச்சம் மிகுந்தே*
*அப்பனுர் வெகுளிக் கஞ்சி நடுங்கும்*
*இறைவன் திருமுன் எண்ணெண்ணு பயத்தே*
*நிறைவென் அமரர் திகழ்பெருந் தலையரே*
*நடுங்கி நிற்கின் நன்னெறி யின்றி*
*ஒடுங்கிக் கிடக்கும் உலக மக்கள்*
*துயரத் தாழ்ந்த துன்ப கோடிகள்*
*உயர அமரும் உம்பரன் திருமுன்*
*எங்ஙனம் நடுங்கி எவ்வாறிருப்பரோ*
*அங்ஙனம் கிடக்கின் அதுவியப் பன்றே*[5]

புனிதவான்களின் சரிதைகளில் ஜுலியானு [St. Juliana] ஹெலென் [St. Helen] ஆண்டிரியாஸ் [St. Andreas] என்பவை குறிப்பிடத் தக்கவை. அப்புனிதர்களின் சரிதைகளில் அவர்கள் இயற்றிய அற்புதங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

செய்யுள் சாதாரண மக்களுக்கு ஏற்றதன்று. ஆகவே அவைகள் மடத்து அறைகளில் மட்டும் முடங்கிக் கிடந்தன. நார்மன் படையெடுப்புக்குப் பின் அப்பாடல்கள் ஆதரிப்பாரின்றிக் கிடந்தன. என்றாலும் ஆங்கிலப் பாமகள் தோன்றிய பின் அக் கவிதைகளே அவளுக்குப் பாலூட்டி வளர்த்தன.

## II. உந்துதற் பருவம் (செங்கீரை) [1000—1300]

ஆங்கிலப் பாமகள் தோன்றிக் கவிதைப்பால் ஊட்டப்பெற்று, கைகளால் உதறிக்கொண்டு, சிரித்தும், அழுதும் வளர்ச்சி பெற்றதைக் கண்டோம். அவள் சிரித்து மகிழ்ந்த பாடல் சில. அழுது துக்கித்த பாடல் சில. அவற்றை ஒரு சிறிது ஆராய்ந்தோம். இனி அப்பாமகள் கிடந்து வளர்ந்ததை விட்டு ஆற்றல் பெற்றுக் கவிழ்ந்து உந்தியும் நாற்கால் பெற்றுத் தவழ்ந்தும் செங்கீரை ஆடியமையும் கண்டு களிப்போம். ஆக, இவ்வாறு ஆங்கிலப் பாமகள் முயன்று வளர்ந்த செய்திகளை நன்கு அறிவதற்கு அக்கால ஆங்கில நாட்டு வரலாறு ஒரு சிறிது அறிய வேண்டியிருக்கும். அதனைச் சுருங்கிய அளவில் கூறுவோமாக.

### நாட்டு வரலாறு

கி. பி. 1066-இல் ஆங்கில நாட்டு அரசை விரும்பி நார்மன் நாட்டு வில்லியம் அதன் மேல் படையெடுத்துப் போர் செய்து வென்று அரியணை ஏறினன். அவனோடு அவனுடைய படைகளும், சீமான்களும், குடிகளும் ஏராளமாக ஆங்கில நாட்டில் குடி புகுந்தார்கள். நாளாவட்டத்தில் அவர்கள் ஆங்கிலோ-சாக்ஸன்களோடு கலந்து கொண்டு ஆங்கிலராகி விட்டனர். அவ்வாறு செய்கையில், தங்கள் மொழியாகிய நார்மன் மொழியை ஆங்கிலத்துடன் தாராளமாகப் பிணைத்து விட்டார்கள். பல பொருள்களுக்கு இருமொழிச் சொற்களும், வழங்கத் தலைப்பட்டன. சில நூற்றுண்டுகளில் ஒரு புது உருவத்தில் ஆங்கில மொழி தோன்றிற்று. புதிதாய் வந்த நார்மன் அரச வம்சம் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் வரை ஆண்டது. பிறகு அந்த வம்சத்தில் உதித்த மற்றொரு பிரெஞ்சு வமிசமான பிளான்டாஜினெட் (Plantagenet) வம்சம் அரசுரிமை பெற்றது. 1154-இல் இரண்டாம் ஹென்றி அந்த வம்சத்து அரசன் ஆனன். அவனுடைய சந்ததியார் 1400-வரை அதாவது $2\frac{1}{2}$ நூற்றுண்டுகள் ஆண்டார்கள். அவர்கள் தொடக்கத்தில் பிரெஞ்சுக் குடிகளாக இருந்த போதிலும் ஆங்கில மொழியையே ஏற்றுக் கொண்டனர். பிரெஞ்சு நாட்டோடு பகைமையும் கொண்டு நூறு ஆண்டுகள் கொடிய போரும் நடத்தினர். அவர்கள் ஆங்கில நாட்டை ஆண்ட போது மொழிப் பெருக்கம் மிகுதியும் எற்பட்டது. பிரெஞ்சுச் சொற்கள் மிகுதியாக ஆங்கிலத்தில் புகுந்தன. கருத்துக்களும் கணக்கின்றி ஐரோப்பா நாடுகளிலிருந்து புகுந்தன. நாட்டில் அரசாட்சி முறைகளும் சீர்திருத்தம் பெற்றன. அரசர்கள் தெய்வீகத் தன்மை பெற்றவர்கள் என்னும் கொள்கை போய் மக்களுக்

காக ஆள்பவர்கள் என்ற கொள்கை நிலையூன்றிற்று. ஜான் என்ற கொடுங்கோல் அரசன் காலத்தில் பிரபுக்கள் கூடி அரசனிடம் ஒரு சாசனம் பெற்ருர்கள். அது மகத்தான சாசனம் ( Magna carta ) என்று பெயர் பெற்றது. அது முதல் நாளுக்கு நாள் மக்கள் உரிமைகள் அதிகமாயின. மக்கள் விருப்பப்படியே அரசன் ஆள வேண்டும் என்ற கொள்கை நிறைவேறிற்று. இந்த நிலைமையில் ஆங்கில மொழியும் பல வகையில் சீர்திருத்தம் பெற்று மிக்க பொலிவுடன் வளரத் தொடங்கிற்று.

நார்மன் குடிகள் ஆதியில் ஆங்கிலரின் தாயாதிக்குடிகள் ஆனபோதிலும் சில நூற்ருண்டுகளாகப் பிரான்சில் கடற்கரை நாட்டில் வசித்து வந்தமையால் தமது மொழிச் சிறப்பை விட்டுப் பிரெஞ்சு மொழியைத் தழுவத் தொடங்கியிருந்தார்கள். ஆகவே அவர்கள் ஆங்கில நாட்டிற்குப் பிரெஞ்சு மொழியின் சுவையை மிகுதியும் ஊட்டினுர்கள். அவர்களுடைய அரச வம்சத்திற்கும், அவர்கள் கிளையாகிய பிளான்டாஜினெட் வம்சத்திற்கும் பிரஞ்சு வம்சத்திற்கும் நாட்டில் உரிமைப் பிரதேசங்கள் பல இருந்தன. அவற்றை நிருவகிப்பதற்காக அடிக்கடி அவர்கள் பிரான்சுக்குச் செல்ல வேண்டி வந்தது. அப்போது ஏற்பட்ட வேற்றுமைகளினுல் பகைமை ஏற்பட்டுப் பெரும் போர்கள் மூண்டன. படைகளின் போக்குவரத்தால் மொழி உறவு மிகவும் ஏற்பட்டது. இந்த மொழிக் கலப்பு சில நூற்ருண்டுகள் வரை நீடித்தது. ஆனுலும் ஆங்கிலோ-சாக்ஸன் உருவம் முழுவதும் போய் விடவில்லை. பிளான்டாஜினெட் வம்சம் தொலைவதற்கு முந்தியே பிரெஞ்சுப் பிரதேசம் அவர்கள் கையை விட்டு விலகியது. அரச வம்சமும் ஆங்கில மயம் ஆகிவிட்டது. இந்த வகையில் மொழியில் பல மாறுதல்கள் ஏற்பட்டுப் புது உருவத்துடன் ஆங்கிலப் பாமகள் தோன்றினுள். இந்த வரலாற்றுப் பகுதியில் அக்குழவி சிரித்து, அழுத பாடல்களை ஒரு சிறிது காணலாம்.

## 2. பழங் கவிதைகள்

1) ஆங்கிலோ-நார்மன் அரசு சிறப்புற்ற நாளில் தோன்றிய கவிதை சான்சன்-டி-ரோலண்ட் (Chanson-de-Roland) என்பது. அந்நூலை ஓதினுல் 'இது எந்த மொழி' என்றே கேட்க வேண்டும். அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தாலன்றி இப்போது நாம் அறிய முடியாது.

அந்நாளில் இளம் வீரர்கள் தம் காதலியிடம் கொண்ட

அன்பு காரணமாகப் போருக்குச் சென்று காதலியைத் துன்புறுத்திய அரக்கர்களை வென்று காதலியை மணப்பது முறையாகும். அந்த வரலாற்றுக் கவிதைகளே மிகுதியாக எங்கும் காணலாம். அந்தக் கொள்கையை (Chivalry) ஷிவெல்ரி என்பார்கள்.

அப்போது ஏற்பட்ட கவிதைகளில் ஆர்தர் மன்னனுடைய கதைகள் சிறந்து விளங்கின. இவைகள் ஆங்கில நாட்டுக் கதைகள். நாட்டுக் கதைகளே சிறந்த கவிதைகளாகப் பரிணமித்தன; அழகிய நாட்டுப் பாடல்களாக மலர்ந்தன. நாட்டு மொழியும் பல்வேறு மாற்றங்களைப் பெற்றது. ஆனால் கவிதைகள் பழமையைப் போற்றிக் கருத்துக்களை வெளியிட்டன.

சில சமயக் கவிதைகளும் தோன்றின. விவிலியத்திலிருந்து பல நூல்கள் யாக்கப்பட்டன. அடியார் சரிதங்கள் எழுதப்பட்டன. மானிங்கு [Mannyng] என்ற கவிஞன் பாவத்தைப் பற்றி ஒரு கவிதை இயற்றினன். பிறகு வாடிங்டன் [Wadington] என்பவன் பாவச் செயல்களைப் பற்றி 44 கதைகளைப் படைத்தான். அவைகளில் சில உள்நாட்டுக் கதைகள். அக்காலத்தில் பக்திச் சுவைப் பாடல்கள் 24000 அடிகள் வரை தொகுக்கப்பட்டன. ரோல் [Richard Rolle] என்ற ஒரு துறவி உலகத் துன்பங்களைப் பற்றிப் பாடியிருக்கிறார். அதில் நரக வேதனைகளை மிகப் பயங்கரமாக வருணித்திருக்கிறார்.

இனி, சமயப் பற்றற்ற கவிதைகளும் தோன்றின. அவைகளை இயற்றிய கவிஞர்களில் லேயமன் [Layamon 12th C] சிறந்தவன்; ஆர்தர் கதைகளைச் செய்யுளாகச் செய்தவன்; அவனுடைய கற்பனைகள் மிகவும் சிறந்தவை. ஓர் உதாரணம் கூறுவோம்:

### ஆர்தர் மறைவுக் காட்சி

*இந்தச் சொற்கள் இயம்பின கணமே*
*உந்திக் கொண்டொரு ஓடம் அணுகிக்*
*கருநீர்த் திவலையில் கனவென மிதந்தது;*
*கருநிண் மகளிர் இனத்தில் இருந்தனர்;*
*கரைஅரு கணைந்து [கடிதின்] ஆர்தரை*
*உரையெது மின்றி உடனெடுத் தேகி*
*மெதுவாய் அரசை மீதந்திடும் படகிடை*
*இதமாய் வைத்தனர் இனிதுடன் சென்றது*
*ஆர்தர் [மறைவால்] அணுகும் பெருந்துயர்*
*என்றே மெர்லின் [இயம்பிய] செய்தியை*

*மக்கள் நம்பினர் மன்னர் ஆர்தர்*
*துக்கமில் ஆவிகள் தொடர்பில் வதிந்துளன்*
*என்று சொல்லி இதுவரை அரசை*
*நன்று காண்பான் எதிர்பார்த்துளரே.*[6]

### 3. வீரக் கதைகள்

பதின்மூன்றும் நூற்றுண்டின் இறுதியில் பல சாகசக் கதைகள் (adventures) இம்மொழியில் தோன்றின. இவற்றுள் ஸ்காண்டிநேவியக் கதைகள் மிகவும் புகழ் பெற்றன. ஆங்கில நாட்டின் தன்மைக்கேற்பச் சில மாறுதல்களுடன் தோன்றிய இக் கதைகளின் ஆங்கில ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஹேவ்லக் (Havelok), ஹார்ன் (King Horn) முதலிய சாகசக் கதைகளின் தொடக்கம் கானக் குழவிகள் (Babies in the woods) என்னும் கதைப்பாடலைப் போன்று அமைந்துள்ளது. அதில் வோல்ட் [Athel Wold] என்ற ஆங்கில மன்னன் இறக்கும் தருவாயில் கோல்ட்பர் [Goldburh] என்ற தன் மகளைத் தம்பியிடம் ஒப்புவித்து ஒரு சிறந்த வாலிபனுக்கு அவளை மணம் செய்து வைக்கும்படி ஆணை யிட்டு இறக்கிருன். சிற்றப்பனே அரசுக் கட்டிலை விரும்பி அவளைக் கொன்று விட்டுத் தானே ஆள முயல்கிருன். அதே காலத்தில் டென்மார்க் அரசன் தன் மகன் ஹெவ்லக்கை கோடார்டு [Godard] வசம் ஒப்புவித்து இறக்கிருன். கோடார்டோ கிரிம் [Grim] என்ற செம்படவனிடம் அவனைக் கொன்று விடும்படி ஒப்புவிக்கிருன். ஆனல் கிரிம் அவ்விளவரசனைக் கொல்லாமல் இங்கிலாந்திற்கு அனுப்பி விடுகிருன். அங்கே அவன் அலைந்து திரிந்து இளவரசியிடம் வேலைக்கு அமருகிருன். அவனுடைய வல்லமைச் செயல்களைக் கண்டு மக்கள் வியக்கிருர்கள் ''அவனே சிறந்தவ'' னென்று ஏளனமாகக் கூறி இளவரசியை அவனுக்கு மணம் செய்து வைக்கிருன் சிற்றப்பன். அவ்வாலிபன் இளவரசனென்று இளவரசி அறிகிருள். இளவரசனே தக்க உதவி பெற்று டென்மார்க் மீது போர்தொடுத்து அதனை மீட்டு அரசனுகிருன். பிறகு இங்கி லாந்தைப் பிடித்துக் கோடார்ட், கோட்ரிக் [Godrich] என்ற இருவரையும் முறையே தூக்கிலிட்டும், நெருப்பிலிட்டும் தண்டிக் கிருன். இதுதான் அக்கதை.

'மன்னர் ஹார்ன்' என்ற மற்ருெரு காவியம் இதனைத் தொடர்ந்தே எழுதப்பட்டது. அதன் கதையையும் ஒரு சிறிது கூறுவோம்:

ஹார்ன் சட்டனே [Suddene] நாட்டரசன் மகன். அவன்

சிறு குழந்தையாக இருந்தபோதே சாரஸன்கள் [Saracens] அந்நாட்டின் மீது படை எடுத்து அரசனைக் கொன்று விட்டார்கள். ஹார்ன் மிக அழகாய் இருந்ததைக் கண்டு அவனைக் கொல்லாது. அவனுடன் 12 இளம் பிரபுக்களைப் படகில் ஏற்றிக் கடலில் விட்டு விட்டார்கள். பாய்மரமும், துடுப்பும் இல்லாத அப்படகு வெஸ்டர் நெஸி [Westernesse] என்ற நாட்டிற்குச் சென்றது. அந்நாட்டு அரசன் எய்ல்மர் [Ailmar] என்றவன் ஹார்னை எடுத்து வளர்த்தான். அப்போது அரசிளங்குமாரியே அவனைக் காதலித்தாள். அது கண்டு அரசன் அவனை நாடு கடத்தினன். போகுமுன்னர் ஏழு ஆண்டுகளில் திரும்பி வருவதாக வாக்களித்து அவள் மோதிரமும் பெற்றுச் சென்றான். அந்த ஏழு ஆண்டுகளும் கணக்கற்ற சாகசச் செயல்களைச் செய்து வந்தான். ஏழு வருஷம் கழித்தும் அவன் வராமல் போக எய்ல்மர் குமாரியை வேறு ஒரு அரசனுக்கு மணம் செய்து கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினன். அரசகுமாரி அழுது கொண்டிருக்க, திருமண நாளும் வந்தது. இதைக் கேள்விப்பட்ட ஹார்ன் ஊருக்கு விரைந்து வந்தான். அவன் ஒரு யாத்திரிகனைப் போலக் கரிபூசிக் கொண்டு மாறு வேடத்தில் வந்தான். திருமணச் சடங்கு நடைபெறுகிறது. யாத்திரிகனுக்குத் தாகம் என்று கூற அவள் திராட்சை ரசம் தருகிறபோது அவன் பழைய நினைவைக் கூறுகிறான். அவளோ அவன் தூதன் என்று எண்ணி ஹார்ன் இறந்து விட்டதாக நினைத்துத் தன் நெஞ்சை விளித்து அழுகிறாள். தன் படுக்கையில் வாளை மறைத்து வைத்து அரசன் வந்தால் குத்தி விட்டுத் தானும் இறந்து விட நினைக்கிறாள். இப்போது ஹார்ன் தோன்றி கரியை நீக்கித்தானே ஹார்ன் என்று தோற்றமளிக்கிறான். இதில் வரும் இறுதிக் காட்சி மிக உருக்கமாக அமைந்துள்ளது.

## இறுதிச் சந்திப்பு

*எவனுனை நோவ இயக்கி நின்றான்*
*அவனினி உன்னை அண்டான் நெஞ்சே!*
*வீணாய் இனிநீ வெடித்துப் போவாய்*
*காணா தானேன் எனக்கடைசி இரவில்*
*வெறுத்த மன்னனை வீழ்த்தித் தானும்*
*அறுத்து மடிய அமளியில் அரசி*
*வாளொன்ற டியில் மறைத்துக் கிடத்திச்*
*சூளொடு அதன்மேல் சோர்ந்து வீழ்ந்தனள்*
*மார்பிடை வாளை வைத்தாள் அவனோ*
*ஹார்னவன் அவளெதிர் ஆர்வம் பொங்கப்*

*பூசிய கரியைப் புடவையில் துடைத்தே*
*ஆசையும் மீறவே அன்புரை வழங்கினன்*
*அரசி! என்றன் அன்பே! ஈதோ*
*பரிசால் உரைசெய் பண்பின் ஹார்ன்நான்,*
*என்னுரை காத்தனன் இன்று மீட்க [நின்]*
*முன்னர் வந்துளேன் முத்தம்ஈ கென்ருன்.*[7]

ஏறக்குறைய இதே காலத்தில் 'ஆந்தையும், இராப் பறவையும் (Owl and the Nightingale) போன்ற பல சிறு கவிதைகளும் பாடப்பட்டன. பல நாட்டுப்பாடல்களும் இயற்றப்பட்டு, நாடெங்கும் பாடப்பட்டன. [மூன்ரும்] எட்வர்ட் (Edward III) செய்த போர்களைப் பற்றிப் பல கவிதைகள் அம்மானைப் பாடல்களாகப் பாடப்பட்டன.

இவைகளெல்லாம் ஆங்கிலப் பாமகளின் செங்கீரைப் பாடல்களாகவும் தாலாட்டுப் பாடல்களாகவும் விளங்கின. நாட்டுப் பாடல் வரிசையில் ஆசிரியர் இன்ஞர் எனத் தெரியாத பல சிறுவர் பாடல்கள் முளைத்தன. அவற்றின் காலம் இன்னதென்று கூற முடியாது. அவற்றில் 'மின்னும் வான்மீன்' என்னும் ஒரு பாடலை எடுத்துக்காட்டாக இங்கே காணலாம்.

(Twinkle Twinkle Little Star)

*சின்னச் சின்னத் தாரகையாய்*
*மின்னும் மின்னும் நீயாரோ*
*துன்னும் உலகில் வெகுமேலாய்*
*மன்னி விண்ணில் வைரமதாம்;*

*கொதிக்கும் சூரியன் சென்றவுடன்*
*எதற்கும் அவனொளி இலையாகில்*
*உதிக்கும் சிற்ரொளி நீகாட்டி*
*மதிக்கும் இரவில் மின்னிடுவாய்;*

*அப்போதிருட்டில் வழி நடப்போன்*
*ஒப்பி உன்னொளிக் கேற்றிடுவான்*
*அப்படி மின்ஞ திருந்தனையேல்*
*எப்படி அவன்வழி அறிந்திடுவான்;*

*கருநீல் வானம் தாங்கிடுவாய்*
*அருமென் பிறைக்குள் நுழைந்திடுவாய்*
*இருவான் சூரியன் வருமட்டும்*
*திருவின் கண்கள் மூடிடுவாய்;*

முன்னம் இருட்டில் வழிநடப்போர்க்கு
உன்நல் சிற்றொளி காட்டிடல் போல்
பின்னும் எனக்கே நீயருள்வாய்
சின்னஞ் சிறிய தாரகையாய்.

## குறிப்புகள்

1. இத்தகைய நடுகற்கள், "Druid Stones" என வழங்கப்படுகின்றன. இவை இன்றும் இங்கிலாந்து நாட்டின் வேல்ஸ் பகுதிகளில் காணப்படுகின்றன. கெல்டிக் (Celtic) பழங்குடியினர் இத்தகைய நடுகல் வணக்கத்தைக் கொண்டொழுகினர்.

2. நான்கு குடிகள் : ஜுட், ஆங்கில்ஸ், சாக்ஸன், நார்மன்

3. 'So, O King, does the present life of mar on earth seem to me, in comparison with the time which is unknown to us, as though a sparrow flew swiftly through the hall, coming in by one door and going out by the other, - and you, the while, sat at meat with your captains and liegemen, in wintry weather, with a fire burning in your midst and heating the room, the storm raging out of doors and driving snow and rain before it. For the time for which he is within, the bird is sheltered from the storm, but after this short while of calm he flies out again into the cold and is seen no more. Thus the life of man is visible for a moment but we know not what comes before it or follows after it. If, then, this new doctrine brings something more of certainty, it deserves to be followed.

   —A History of English Literature by Emile Legouis and Louis Cazamian, [Dent, London, p. 12.]

4. யாக்கை — bone chamber
   நெஞ்சு — treasure — chamber
   நாவிகன் — the traveller on the waters
   கண் — jewels of the head

5. Heaven's angels King holy shall shine,
   Glorious O'er the hosts, the powerful God;
   And around him chiefs most excellent,
   Holy martial bands shall brightly shine.
   A train of blessed angels; they inwardly
   Tremble with fear, for terror of the Father.
   Therefore 'tis not any wonder, how of wordly men
   The impure race, sadly sorrowing,
   Shall sorely dread, when the holy race,
   White and heaven-bright, the archangel-host,
   Before that countenance is with dread affrighted.

   — B. Thorpe's translation op. cit. p. 43

6. When these words ware spoken,
There came thither wending,
A little boat moving,
On the waters it floated,
And two women in it,
Wondously formed ;
And lo ! they took Arthur,
And swiftly they bore him,
And softly him down laid,
And forth ' gan their sailing.
Then was it accomplished
What Merlin said whiles,
That great woe would follow
On Arthur's forthfaring.
Still think the Britons
That Arthur yet liveth
And dwelleth in Avalon
With the fairest of all elves
Still wait the Britons
For Arthur' s returning.

op. cit. p. 86

7. " Heart, now thou burst,
For Horn hast thou no more
That thee hath pained so sore '.
She fell on her bed,
There her knife is hid,
To slay therewith her loathed king
And herself, both.
On that same night,
If Horn come not might.
To heart knife she set,
But Horn anon her let,
His shirt-lap he can take,
And wiped away that black,
That was on his neck,
And said, ' Queen, so dear,
I am Horn, thine own.
Nor canst thou me not know.
I am Horn of Westernesse,
In arms thou me kiss "

op. cit. pp. 90—91

# கொச்சைப் பருவம்

1300-1400

# II. கொச்சைப் பருவம்
## (1300—1400)

## குதலைப் பருவம் (1300—1350)

ஆங்கிலப் பாமகள் செங்கீரை ஆடிச் சப்பாணி தட்டிச் சிறுநடை நடக்கத் தொடங்குகிருள். அப்போது சின்னஞ்சிறு குதலைகளைப் பேசி மகிழ்விக்கிருள். அப்போது அழுகைகள் குறைந்து புன்னகைகள் மிளிரும். அவ்வாறு சின்னஞ்சிறு சொற்களை அழகுபெற உச்சரிப்பதில் வயது ஏற ஏற, குதலைகளுக்கு உருவங்கள் ஏற்படும். தொடக்கத்தில் உருவமில்லாத குதலைகள், வர வர உருவம் பெற்று மிளிரும். ஆகவே இந்தப் பருவத்தை இரண்டு பிரிவுகளாகக் கொள்ளலாம். அரை குறை உருவச் சொற்கள் பிதற்றும் பருவத்தைக் குதலைப் பருவம் என்றும், உருவம் அடைந்த சொற்களைப் பேசும் பருவத்தை மழலைப் பருவம் என்றும் குறிப்போம். இவ்வாறு இரண்டு பிரிவுகளாகக் கொண்டு இந்தக் கொச்சைப் பருவத்தை விவரிப்பதே பொருத்தமானதாகும். குதலைப் பருவத்தில் சின்னஞ்சிறு கருத்துக்களைக் கொண்ட கவிதைகள் தோன்றின. அவைகள் தோன்றிய காலத்து நாட்டு வரலாற்றை ஒருசிறிது கூறுவோம்.

### 1. வரலாறு

பிளான்டாஜினெட் வம்சம் பிரஞ்சு நாட்டிலிருந்து வந்த போதிலும் ஒன்றிரண்டு தலைமுறைகளில் அந்த அரசர்கள் ஆங்கிலேயர் ஆகிவிட்டனர். ஆங்கில மொழியையே தழுவிப் பெருக்கினர். 1307-இல் பட்டத்திற்கு வந்த இரண்டாம் எட்வர்டும் [1307—1327], அவனுடைய புகழ்பெற்ற மகன் மூன்ரும் எட்வர்டும் [1327—1377] தூய ஆங்கிலேயராக விளங்கினர். அவன் மகன் இரண்டாம் ரிச்சர்டுடன் [1377—1399] அந்த வம்சம் முடிந்தது. பிறகு 1399 இல் ஆங்கிலக் குடும்பமாகிய இலங்காஸ்டர் (Lancaster) குடும்பத்து (நான்காம்) ஹென்றி [1399 —1419] பட்டத்திற்கு வந்தான். அவன்வந்த பிறகு நூறு ஆண்டுகள் வரை தொடர்ந்து போர்கள் நடந்தன. ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் நூற்ருண்டுப் போர் நடந்தது. அந்தப் போரானது ஆங்கில மன்னன் மூன்ரும் எட்வர்டுக்கு வெற்றியும், ஆங்கிலேயர்களுக்குப் பேரும் புகழும் தந்தது. ஆனல் நாட்டில் மக்களுக்கு யாதொரு சுகமும் இல்லை.

ஆங்கில நாட்டு எல்லையில் போர் எதுவும் நடக்கவில்லை. ஆனாலும் ஆங்கிலேயர் பிரான்சில் போர் செய்து துன்புற்றார்கள். இந்தப் போர்க்காலத்தில் மக்கள் யாதொரு உரிமையுமின்றி அடிமைகள் போலப் பிழைத்து வந்தார்கள். ஆகவே மக்களுக்கு உண்மை உணர்ச்சி வரவில்லை. வெற்றியிருந்தும் உண்மை உணர்ச்சி இல்லாவிடில் கவிதை பிறக்குமா? ஆகவே அக்காலத்தில் பாமகளின் செல்வாக்கு சிறிது குறைந்துதான் இருந்தது. ஆனால் மொழியோ பக்குவம் அடைந்தது. பொதுமக்கள் மொழிப் பற்று உள்ளவர்களாக இருந்தார்கள்.

## *2.* எழுத்தாளர்கள்

14-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் உயர்வற்ற சில கவிதைகளே தோன்றின. மாண்டவில் [ John Mandeville ], விக்லிப் [John Wyclif 1320—1384] என்போர் உரைநூல்களை எழுதினார்கள். அவைகள் பெரும்பான்மையும் பிரஞ்சுமொழி ஆவேசங்களே. மாண்டவில் என்ற போர்வீரன் கீழ்நாடுகளுக்குச் சென்று முப்பத்து நான்கு ஆண்டுகள் திரிந்து விட்டுப் பல அற்புதங்களைக் கண்டதாக எழுதிய கற்பனை நூல் அவனுடையது ஆகும். விக்லிப் என்ற பாதிரி உரோமன் சமயத்திற்கு மாறுபட்ட கொள்கைகளை வெளிப்படுத்திப் பைபில் என்ற கிறிஸ்தவ வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தான். இக்கால நூலோடு அதனை ஒப்பிட்டுப் பார்த்தால் அதில் பல பிழைகள் இருப்பதைக் காணலாம். ஆனாலும் அதுதான் விவிலியத்துக்கு ஆங்கிலத்தில் தோன்றிய முதல் மொழிபெயர்ப்பு. மேற்கு வட்டங்களில் சில புலவர்கள் மோனை நிரம்பிய பாடல்களைப் பாடினார்கள். அவைகளில் ஒன்று *வில்லியமும் வெர்வுல்பும்* [ William and Werwolf ] என்பது. அது ஒரு கட்டுக்கதை. ஒரு அரசகுமாரன் மாற்றாந்தாயால் ஓநாயாக மாற்றப்பட்ட கதையாகும். பிறகு கெவெய்ன் [ Sir Gawayn and the Grene Knyght] பேர்ல் (Pearl) என்ற காவிய நூல்கள் தோன்றின. முந்தியது ஆர்தர் (King Arthur) கதை. பிந்தியது கற்பனைக் கதை.

## *3.* செய்யுள்கள்

அக்காலத்துச் செய்யுள் நூல்களுள் சிறந்தது பியர்ஸ் ப்ளோமன் (Piers Plowman) என்பது. அதனை வில்லியம் லாங்லண்டு [William Longland 1332—1400] என்பவன் இயற்றினான். இதனுடைய மூவகை வடிவங்கள் முப்பதாண்டு இடைவெளியில் வெளிவந்தன [1362, 1377, 1398]. ஆங்கில ஆர்வம் மிகுதியும்

கொண்டது ; இதில் பிரஞ்சு இரவல் கிடையாது. லாங்லண்டு ஒரு நாள் இடையன் வேடங்கொண்டு மால்வர்ன் குன்றுப் பகுதியில் படுத்திருக்கையில் ஒரு கனவுக் காட்சி காண்கின்ருன்: ஓர் அகன்ற நிலப்பரப்பில் கணக்கற்ற குடிகள் இருந்தார்கள். அவர்கள் குற்றங்களில் மூழ்கியவராய்ச் செய்வதெது என அறியாமல் இருந்தார்கள். தேவமாதா தோன்றி 'உண்மை காண வேண்டும். அதுவே சொர்க்கத்திற்கு வழி' என்று சொல்லி மறைந்தாள். உண்மை காணும் வழி தெரியாமல் மக்கள் திகைத்து நிற்க, பியர்ஸ் ப்ளோமன் என்பவன் தோன்றிச் சரியான வழியில் அழைத்துச் செல்கிருன். இடையில் 'மீட் துரைமகளின் திருமணம்' (The Marriage of Lady Meed) 'ஏழு கொடிய பாவங்கள்' (The Confession of Seven Deadly Sins) என்ற இரண்டு தனிக்கதைகள் வருகின்றன. நல்ல நெறியில் அழைத்துச் சென்ற ப்ளோமனே கிறிஸ்துவாகப் பரிணமிக்கிருன். இதுதான் கதை. இடையிடையே தர்க்கம், அலங்காரம், அங்கதம் முதலியவை வெகு நன்ருக ஆளப்படுகின்றன.

வடக்கே ஸ்காட்லாண்டில் பார்பர் [Barbour] என்ற கவி புரூசு (Bruce) என்ற ஒரு கவிதை நூல் இயற்றினன். இதில் புரூசின் சாகசச் செயல்களைக் கூறும்போது நாட்டுப்பற்றும் சுதந்திர தாகமும் நன்கு வெளிப்படச் செய்கிருன்.

4. நாட்டு நிலைமை

அக்காலத்தில் பாமர மக்கள் மிகவும் துன்பப்பட்டார்கள். இலண்டனில் கொள்ளை நோய் வந்து கணக்கற்ற மக்கள் இறந்தார்கள். துன்பம் சகிக்காத மக்கள் கலகம் செய்தார்கள். அந்தக் காலத்தில் கவர் [Gower 1325—1408] என்ற கவி தோன்றி அருமையான கவிகள் இயற்றினன் ஏழைகளைச் செல்வர்கள் வதைத்ததைக் கண்டு அறிஞர்கள் கொதித்தெழுந்தனர்.

''ஆதாம் தோண்ட ஏவாள் நெய்தாள்
யாதாம் கண்ணியம் யாரே கனவான்?''[1]

என்று மக்கள் எண்ணத் தொடங்கினர்கள்.

இந்தக் காட்சிகளையும் கொள்கைகளையும் அமைத்துக் கவர் (Gower) ஒரு சிறந்த கவிதை இயற்றி நாட்டுப்பற்றை வேரூன்றச் செய்தான். இந்தக் கவிதைகள் ஆங்கிலப் பாமகளின் குதலைச் சொற்களாய் வெளிப்பட்டன.

## மழலைப் பருவம் (1350—1400)

குதலைகள் மொழிந்து சப்பாணி தட்டுகிற ஆங்கிலப் பாமகள் தற்போது தளர்நடை நடக்கப் பயின்று மழலை பொழியத் தொடங்குகிறாள். வீட்டுப்புறத்தே சிறு பொம்மைகளை வைத்து விளையாடிச் சிற்றில் இழைத்து மகிழ்கிறாள். அச்சிற்றிலில் தேமாங்கனி மூன்றை அடுப்பாக அமைத்துக் கிளிஞ்சலைக் சட்டியாகச் சாய்த்து மாதுளை விதைகளை அரிசியாக இட்டுச் சிறுசோறு சமைக்கிறாள். அவ்வாறு விளையாடுகையில் அழகே உருவாக அமைந்த அழகன் தோன்றுவதாகப் பாவித்துத் தன் சிற்றிலை எங்கே அழித்து விடுகிறானோ என்று கனாக் கண்டு,

சிறியேன் சிற்றில் சிதையேலே
செழியோய் சிற்றில் சிதையேலே

என்று மழலைகள் மொழிந்து வருந்துகிறாள். இந்தப் பருவம் மனக் கோட்டை கட்டும் பருவம்; அரிய வனப்புகளை எண்ணும் பருவம்; அழகிய கருத்துக்கள் நிரம்பிய கவிதைகள் மழலைகளாகத் தோன்றி வெளிவரும் பருவம். கொவ்வைச் செவ்வாயில் முத்துக்கள் சிதறும் பருவம் இந்த மழலைப் பருவத்தில் பாமகளின் அழகினைப் போற்றிப் புகழ்ந்த அரிய கவிஞன் ஒருவன் தோன்றினான். அவனுடைய மழலை மொழிக் கவிதைகளைப் பற்றி இங்கே கூறுவோம். அப்போது நாடு இருந்த நிலைமையைப் பற்றியும் சற்றுக் கூற வேண்டாமா?

### *1. சாசர்*

இதுவரை லாங்லண்டு அரசியல் குறைகளை எடுத்துச் சொன்னான். விக்லிப் சமயத் துறையின் மூடக் கொள்கைகளைக் கண்டித்தான். கொள்ளை நோயால் மடிந்த மக்களின் துன்பத்தைக் கவர் விளக்கினான். மக்கள் துன்பப்பட்டு வாட்டெய்லர் தலைமையில் கலகம் செய்தனர். அக்கலகம் வெகு கொடூரமாக அடக்கப்பட்டது. இரண்டாம் ரிச்சர்டின் கொடுங்கோல் ஆட்சி தொலைந்தது. இலங்காஸ்டர் பிரபு ஆட்சிக்கு வருகிறான். இந்தச் சமயம் ஒரு நெருக்கடியான சமயம் அல்லவா? துன்பப் பெருக்கில்தானே தீவிர உணர்ச்சி பெருகும்? அந்தச் சமயத்தில் சாசர் என்ற [Chaucer—1340 - 1400] என்ற பெருங்கவிஞன் தோன்றினான். 1340-இல் ஒரு மதுவர்த்தகனின் மகனாய்த் தோன்றிப் போர் வீரனாகிப் பல போர்களில் ஈடுபட்டு அரசாங்கத்தில் உயர் அலுவல் பெற்றுப் பாராளுமன்றத்திலும் அங்கம் பெற்று இறுதியில் ஏழ்மையும் அடைந்து 1400-இல் காலமானான்.

ஆகவே அக்காலத்துச் சிறப்புகள் முழுதும் துய்த்து உலகப் பிழைப்புக்கள் எல்லாம் கண்ட ஒரு அனுபவசாலி. அத்தகைய அனுபவசாலி ஒருவன் கவிதைகள் எழுதினல் எப்படியிருக்கும்? சேக்கிழாரைப் போன்ற ஒரு கவிஞன் என்றல்லவோ கூற வேண்டும்? தற்கால ஆங்கில மொழிக்குச் சாசரே தந்தை என்று கூறினல் அது மிகையாகுமா? தற்போது ஆங்கில இலக்கியம் பயில்பவர்கள் சாசர் நூல்களிலிருந்துதான் படிக்கத் தொடங்குகிருர்கள்.

## 2. *சாசர் நூல்கள்*

*சாசர் எழுதிய நூல்களில் ரோமன்-டி-லாரோஸ்* [Roman-de-la-Rose] ஒரு மொழிபெயர்ப்பு நூல். அந்நூலில் அவனுடைய செய்யுள் நடை ஒழுங்குபெற்றது. பிறகு சில்லரைக் கவிதைகளும், உருவகக் கவிதைகளும் வெளிவந்தன அடுத்தாற்போல் 'பறவைகளின் பாராளுமன்றம்' [The Parliment of Fowles] என்ற அங்கதக் கவிதை ஒன்று தோன்றிற்று. அதில் அரச வாழ்வைப் பழிக்கிருன். ட்ராயிலஸும் கிரசீடும் [Troilus and Criseyde] என்றதில் இத்தாலிய மொழிச்சார்பு தோன்றுகிறது. இறுதியில் அவனுடைய சிறந்த கவிதை நூலாகிய 'காந்தர்புரிக் கதைகள்' தோன்றின [Canterbury Tales]. இந்நூலே அவனுக்கு ஒப்பற்றப் புகழையும் பெருமையையும் தந்திருக்கிறது. அதில் கண்ட கதைகளைப் பற்றிக் காண்போம்:

### காந்தர்புரிக் கதைகள்

நமது நாட்டில் புனிதத் தலங்களுக்கு யாத்திரை போவது இயற்கை. அதைப்போலவே 14 ஆம் நூற்ருண்டில் (1385) காந்தர்புரி என்ற புனிதத் தலத்திற்கு ஆங்கிலேயர்கள் யாத்திரை சென்று அங்கேஉள்ள தாமஸ்-ஏ-பெக்கட் [Thomas a Becket—1118?—1170] என்ற புனிதனுடைய ஆலயத்தைத் தொழுது காணிக்கைகளைச் செலுத்தித் தத்தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வது இயற்கை. ஒரு தடவை முப்பத்திரண்டு பிரயாணிகள் ஒன்றுகூடி ஒருபெரும் சாத்து போலச் சென்ருர்கள். அவர்களிலே போர்வீரன் முதற்கொண்டு சில தொழிலாளி ஈருகப் பலவகை மக்கள் இருந்தார்கள். பொழுது போவதற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை கூறுமாறு கேட்கப்படுகிருர்கள். சாசரே இதனைத் தம் முன்னுரையில் [Prologue] பின்வருமாறு கூறுவதைக் காணலாம்:[2]

கூதிர்ப் பருவக் கொடுமை விலக
கோதில் தன்பெயர் குதூகலத் துதிர
வேனில் இளமை விரும்பிய வளமுறத்
தேனில் தாதில் திரவி மலர்விரிய
ஆடொடு மறிகள் அழகுறக் குதிக்கக்
கூடிய செடியிடைக் குருவிகள் பாடத்
தென்றற் காலொடு தெரிகதிர் விரிய
மன்றல் சடங்குகள் மாநிலம் படர
நகரக் குடிகளும் நாட்டு மாந்தரும்
பகர வொண்ணாத பரவசம் மீதுறக்
காந்தற் புரிக்கண் கவிஞர் கோயிலில்
சாந்தத் தாமசுச் சமாதியின் தாளிடைக்
கோரிக் கைகளைக் கொண்டு செலுத்தவே
காணிக் கைகளைக் கையுற வோடும்
ஏந்திச் செல்வார் எங்கும் யாத்திரை
நாந்தி முறையில் நடை பெற்றதுவே
யானும் ஒருநாள் யாத்திரை எண்ணினன்
வானும் அருட்செய வண்மையும் பெற்றே
நகரத்திடையே நண்ணிய காலைச்
சிகரச் சிறப்பில் செழித்த ஓர்விடுதியில்...
இருபத் தொன்பான் இன்சொல் மாந்தர்
ஒருமித் திருத்தலை உன்னியங் கடைந்தேன்
அன்னார் கூட அதே யாத்திரையில்
துன்னிய கொள்கை தொடர்ந்திடக் கண்டே
இடமிலா தெனினும் ஏற்றுக் கொண்டு
நடமதில் அமரத் தாங்கி நின்றேன்
அந்தக் குழுவில் அமர்ந்த மாந்தரில்
எந்தத் தொழிலரும் இயங்கிட இருந்தனர்
போரே தொழிலாய்ப் பூண்டோன் புகழை
நேரே சமரிடை நேர்க்கெதிர் வீரன்
ஆயுதம் தாங்கிய அடியவர் இருவர்
சேயினை ஒத்து செறிந்தனர் புடைவர
பலநா டுற்றும் பலபோர் புரிந்தும்
சிலநாள் கோயில் சேவைக் கிவர்ந்தனர்
மடத்துக் கன்னியர் மதத்துப தேசியர்
இடத்தில் அமரர் இதபர தேசியர்
கோயில் காக்கும் குலத்தருச் சகரும்
வாயில் காக்கும் வளமார் [குருக்கள்]
மற்றொரு தொகுதியாய் மடத்தில் அமர்ந்து
தெற்றியில் அன்பைத் தெளிக்க வந்தனர்...
வணிகன் கணக்கன் வகை பரிசாரகன்

கணிகன் தரகன் கடை விற்பனையாளன்
என்பவர் எல்லாம் இடங்கண் டமர்ந்து
மன்பதை அன்பை மதித்திட நின்ருர்
சமயல் ஆளுடன் சார்புறு மருத்துவன்
அமயம் பார்க்கும் அணிபஞ் சாங்கன்
உழவுத் தொழிலன் ஊக்கும் படியான்
நிழலில் நெய்வோன் நீள்துகில் தைப்போன்
வேருெரு பாங்கர் விடுதியில் அமர்ந்து
கூறிய எல்லாக் குலத்துடன் இருந்தனர்
அக்குழுத் தன்மையில் அளவிலா மகிழ்வில்
சொக்கிய நெஞ்சில் சூழ்ந்தேன் யானும்
மக்களில் ஊக்கம் மலிந்திடல் கருதித்
தக்க தென்றுன்னித் தங்கிய விடுதித்
தலைவனும் தலைவியும் தாமுடன் பட்டார்
நிலைமை மல்க நெடுங்கணக் கதனில்
முப்பத் திரண்டாய் முறைமை அமைய
ஒப்புக் கொண்டனர் ஊக்கவே யாத்திரை
போகும் வழியில் பொழுதெல்லாம் களிப்பே
ஆகும் வண்ணம் அமைதல் வேண்டி
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கதையை
செவ்விய வகையில் செப்பிட வேண்டும்
ஏகையில் ஒருகதை இவர்கையில் ஒருகதை
ஆக இரண்டை ஆற்றிடல் வேண்டும்
இந்த முறையை யாவரும் ஏற்றுச்
சிந்தை களிக்கச் செய்தனர் யாத்திரை
ஆளுக் கேற்ப அமைந்தன கதைகள்
தாறும் கைகளும் தாங்கின பண்புகள்
கூத்தும் கேலியும் குறையா திருந்தன
சாத்தும் படிப்பினை சலியா திருந்தது
இந்தப் படியே எழில்கதிர் தொடங்கத்
தந்தை தாமசுத் தாள்சேர் வரைக்கும்
கதைகள் கூறிக் களித்தனர் ஆகப்
புதையல் எடுத்த புகழினை அடைந்தார்.

ஒவ்வொருவரும் தமக்குகந்த கதை கூறுகிருர்கள். அக் கதைகளைக் கூறுகையில் கதை சொல்வோனின் குணங்கள் கூறப் படுகின்றன. இக்கதைகளில் நாட்டு நடவடிக்கைகள், மக்கட் போக்குகள், குற்றங்கள், நன்மைகள், தீமைகள் ஆங்காங்கே தீட்டப்பட்டுள்ளன. எல்லாச் செய்திகளும் கற்பனைக் கதைகளாகக் கூறப்படுகின்றன. இக்கவிதைகளிலே ஆங்கிலச் சமுதாயம் முழு தும் கண்ணுடி போல் பிரதிபலிக்கப்படுகிறது. உதாரணமாக

ஷாண்டிக்கிலியர் [Chanteclere] என்ற கோழியின் கதையில் கோழியையே கண்டிராத ஒரு நரி வரக் கோழி இந்நரி நம்மைக் கொல்ல வருகிறது என்று மிரண்டு உளறவும் நரி அதனைக் கேட்டு அக்கோழியை ஏமாற்றிப் பிடித்துச் செல்கிறது. பின்னர்க் கோழி நரியை ஏமாற்றித் தப்பித்துக் கொள்கிறது.

சாசர் இதனைப் பின்வருமாறு கூறுகிறார் :

*வேனிற் பருவம் வியப்பில் வர அதைச்*
*சீனிச் சுவையில் சேவல் துய்த்தது*
*பெட்டை ஏழும் பேணிப் புடைவர*
*வெட்ட வெளியில் உலாவி மகிழ்ந்தது*
*கொடுமதி தனில்கூர் குள்ள நரிஒன்று*
*சடுதியில் தோன்றிச் சாலவும் பூரித்துச்*
*சேவலைப் புகழ்ந்து செம்மொழி விடுத்ததும்*

*ஆவலில் அதனருகு அணுகிச் சென்றது*
*ஐய நினைப்போல் அழகிய இன்னிசை*
*உய்யக் கொள்வதில் ஒருபறை யேனும்*
*நிலத்தில் இல்லை நின்னெழில் தகப்பன்*
*குலத்தில் சிறந்தவன் கூவுமுன் அவனோ*
*கண்ணை மூடிக் கவினிசை பெருக்கின்*
*விண்ணும் மதிக்கும் அவ்வெறும் புகழ்ச்சியைச்*
*சேவல் கேட்டுச் செருக்கொடு தானும்*
*ஆவல் கொண்டே அங்கண் மூடிக்*
*கூவத் தொடங்கிக் கொழுத்து நின்றது*
*தாவியே அந்நரி தருக்கின சேவலைக்*
*கவ்விப் பிடித்துக் கான்வழி சென்றது*

*வவ்விய தறிந்து மக்கள்பின் தொடர்ந்தனர்*
*சமயம் அறிந்துதன் சமர்த்தும் விடுத்தே*
*இமயச் சேவல் இழிநரிக் கியம்பிற்று*
*மக்களைக் கண்டு மயங்கேல் நரியே*
*சிக்கின பின்னர் சேவல் என்றே*
*என்றுரை அவர்க்கே என்றது சொல்ல*
*நன்றெனு வாய்திறந் தந்நரி கூறிடச்*
*சேவல் உடனுடன் சிறை பிடிப்புதறி*
*ஆவலில் பறந்தே அமர்ந்தது மரக்கிளை*
*(இளிவரல்) நரியோ இரக்கமொடு சினந்து*
*ஆமாம், என்செயல் அறிவுறுத் தியதே*
*திறக்காச் சமயம் திறந்திடும் வாயோ*
*சிறக்கா தாகும் எனச் சீறிச் சென்றது*
*அதுகேட் டதுமே அறிவிலாச் சேவலும்*

*அதுவே எனக்கும் அறிவுறுத் தியதே*
*விழிப்பாய் இருக்கும் வேளையில் கண்ணே*
*செழிப்பாய் மூடின் செவ்விய தாகுமோ*
*என்றுகூறி இணைவிழி சபித்துத்*
*தொன்று தொட்ட தொழிலில் நின்றது*
*மதியிலார் உலகில் மதியிழந் தக்கால்*
*விதியிஞ லாயதென வீண்பழி யிடுவரே.*

—[The Nun's Priest's Tale
summarised ll, 4465—4625].

இவ்வாருக நாட்டுப் பொதுமக்கள் தம் வாயாலேயே துன்புறு வது இயல்பல்லவா? இக்கதை கூறுகையில் ஆறு அணுத் திருடிய வாலிபர்களேயும் தூக்கிலிடும் கொடிய வழக்கத்தைச் சாசர் பழிக்கிருர். இவ்வித அங்கதக் கதைகள் நிறைந்த இந்த நூல் அக்காலச் சமுதாயத்தை அறிய மிகவும் உதவுகிறது.

இந்நூல் 14ஆவது நூற்ருண்டில் வழங்கிய மொழியில் எழுதப் பட்டுள்ளது. தற்காலத்து மாணவர்களுக்கு இதன் உச்சரிப்பு மிக வியப்பாக இருக்கும். ஆனுல் ஆங்கில மொழி வளர்ச்சியை அறிவ தற்கு இந்நூற் கவிதைகள் மிகப்பயன் தருபவை. காந்தர்புரிக் கதைகள் ஆங்கிலப் பாமகள் கட்டிய அழகிய சிற்றில் ஆகும். அச்சிற்றிலேக் கட்டி அதைப் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டு மகிழு மாறும் அச்சிற்றிலே அழியேல் என்றும் பாமகள் மன்ருடுகிருள். அந்தப் பாமகளின் மழலேச் சொற்களேக் கேட்டு மகிழ்வோமாக

## குறிப்புகள்

1. 'When Adam delved and Eve span
who was then a gentleman?'

கி.பி. பதினுன்காம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து நாட்டில் வளப்பம் குறைந்து வறுமை மிக்கிருந்தது. உழுவித்துண்ணும் பிரபுக்கள் தங்களேக் கனவான்களாகவும் ( Lords ) உழுது பயிர் செய்யும் உழவர்களே அடிமைகளாகவும் ( Vassels ) கருதிக் கொடுமைப்படுத்தினர். இதன் விளேவாகக் கி.பி. 1381இல் உழவர் எழுச்சி ( Peasants' Rising ) தோன்றியது. பைபிளின் வாசகங்கள் முதன் முதலாக ஆங்கிலத்தில் விக்லிப்பால் மொழிபெயர்க்கப்பட்டு நாட்டின் மூலே முடுக்குகளில் எல்லாம் அறிவிக்கப்பட்டன. ''ஆதாம் ஏவாள் மானுடத்தின் ஆதித் தாய்தந்தையராகப் பைபிள் கூறும்போது கனவான்கள் என்ற ஒரு பிரிவு எங்கிருந்து வந்தது?'' என்ற எண்ணத்தைப் பரப்புவதற்காக ஜான் பால் ( John Ball ) என்ற பாதிரியார் மேற்கண்ட வாசகத்தை உழவர் எழுச்சியின் கொள்கைக் குரலாகப் பரப்பினுர்.

2. 'The Prologue' summarised : 1-42; 715-858.

# கன்னிப் பருவம்

1400-1500

# III. கன்னிப் பருவம்
## ( 1400 – 1500 )

ஆங்கிலப் பாமகள் மழலைப்பருவம் நீங்கிக் கன்னிப் பருவம் அடைகிறாள். கன்னிக்குரிய குறிகள் எல்லாம் தோன்றுகின்றன. குழவியாக இருந்த போது வனப்பு மட்டுமின்றி எளிய பண்பில் திகழ்ந்தாள். எல்லோராலும் பாராட்டப்பெற்றாள். கன்னிப் பருவம் வரவே அதற்குரிய நாற்குணங்களும் பெற்றாள். மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு, ஆகியன அவள் அறியாமலே அவளை அடைந்தன. எளிமையாக எங்கும் உலாவுதலை நீக்கி நாணத்தினால் ஒல்கி நடக்கத் தொடங்கினாள். எல்லா மக்களின் காட்சிக்குக் கிடையாளாகி இல்லத்தளவில் இருக்கத் தொடங்கினாள். தெருவில் வெளிப்படையாக விளையாடிக் கொண்டிருந்த குழந்தை இப்போது எங்கே என்று மக்கள் கேட்கவும் தொடங்கினர். ஆகவே அவளுடைய வனப்புக்களைப் பருகி மகிழும் கவிஞர்களும் குறைந்தார்கள். அப்படிப்பட்ட கன்னிப் பருவம் ஏறத்தாழ ஒரு நூறாண்டுகளாக அஞ்ஞாதவாசம் போல் அடங்கி ஒடுங்கி இருந்தது. இந்தப் பருவ காலத்தில் அவளை விரும்பிய கவிஞர்கள் எண்ணிக்கையில் குறைவு மட்டும் அன்றிக் கவிஞர் என்ற விருது பெறத் தக்க பண்பற்றவர்களாகவும் இருந்தார்கள். முன்னாள் புகழ் பெற்று விளங்கிய சாசரைப் பின்பற்றிய ஒருசிலரே கவிதை இயற்றத் தொடங்கினர். கன்னிப் பருவம் நீங்கிப் பூப்புப் பருவம் வந்த பின்னர் மீண்டும் மிகப் புகழ்பெற்ற கவிஞர்கள் தோன்றினர். இடையே வந்த ஒருசிலரோ குறிப்பிடத்தக்க நன்மதிப்புக்கள் இல்லாத சில்லறைப் பேர்வழிகளாக இருந்து மறைந்தனர். அவ்விதப் பாமரத் தன்மைக்கு என்ன காரணம்? பாமகளின் இயற்கை வளர்ச்சித் தத்துவமேயாகும். மேலும் அந்நாளின் காலநிலையும் கவிதை வளர்ச்சிக்கு ஏற்றதாக அமையவில்லை.

### 1. வரலாறு

அக்காலத்து ஆங்கில நாட்டுச் சரிதையை ஒரு சிறிது ஆராய்வோம். மன்னனுக்கு [Henry VI—1422 — 1466 1470—71] இரண்டு மக்கள் இருந்தனர். ஒருவன் *இலங்காஸ்டர்* கோமகன்; மற்றவன் *யார்க்குக்* கோமகன். இவ்விரண்டு பங்குதாரர்களுக்கும் தாயாதிச் சண்டைகள் ஏற்பட்டன. அதனால் உள்நாட்டுக் கலகம் தோன்றியது. இலங்காஸ்டர் முதலில் பட்டத்துக்கு வரப் பிறகு அதைத் தடுத்து யார்க்கு

அப்பட்டத்தைப் பறித்துக் கொண்டான். இந்தப் போரில் ஒருவர் வெள்ளை ரோஜா மலரையும் மற்றவர் சிவப்பு ரோஜா மலரையும் குறிகளாகக் கொண்டனர். ஆகவே இந்தச் சண்டை ரோஜாச் சண்டை [Wars of Roses] எனப் பெயர் பெற்றது. ஏறத்தாழ ஒருநூறு வருடங்கள் இவர்கள் சண்டையிட்டுச் சலித்துப் போய் இருவருக்கும் சந்ததியும் அற்றுப்போக மகள் வயிற்றில் உதித்த மற்றொரு இளவரசன் அரியணையைக் கைப்பற்றினான். அவன் ஏழாம் ஹென்றி [Henry VII 1485—1509] என்ற பெயருடன் பட்டம் பெற்று ஏகபோக உரிமையோடு ஆளத் தொடங்கினான். அதுதான் டூடர் [Tudor] வம்சம் என்பது. அது 1485 இல் தொடங்கியது. இந்த யுத்த காலமே வறட்சிக் காலமாக இருந்தது.

மக்கள் இரு கட்சியராகி உள்நாட்டுப்போரில் அலைப்புண்டு கிடக்கையில் உண்மையான உணர்ச்சி வருமா? கவிதைகளைப் பாட நேரமும் ஓய்வும் ஏது? ஆகவே சில்லறைப் புலவர்களைத் தவிர வேறு சிறந்த புலவர்கள் தோன்றவில்லை. அவர்களும் முந்தியிருந்த *சாசரின்* சீடர்களும், பின்பற்றியவர்களுமே ஆக இருந்தார்கள். அவர்கள் கவிதைகளைப் பற்றிச் சில குறிப்புகளைக் கூறுவோம்.

## 2. எழுத்தாளர்கள்

லிட்கேட் [Lydgate 1373?—1450?] என்பவன் கிரேக்கக் கதைகளாகிய தீபிஸ், [The Stories of Thebes], ட்ராய் [Troye Book] என்ற கதைகளைப் பாடினான். சுமார் 1½ லட்சம் அடிகள் எழுதினான். ஆனால் சுவையற்ற பாடல்கள். யாப்பும் சரியானது அல்ல. பார்க்லே [Alexander Barclay 1474—1552] என்ற ஒரு பாதிரி மொழிப்பெயர்ப்புக்களை ஆக்கினான். மூடர் நாவாய் [Ship of fools] என்ற கவிதை ஒரு மொழிபெயர்ப்பே ஆகும். ஸ்கெல்டன் [John Skelton -1460?—1529] என்றவன் அவை யடக்கமாகத் தனக்கு யாதும் தெரியாது என்றும் தன் பாடல் வெள்ளை என்றும் கூறுகிறான். இவன் வெள்ளைத் தன்மையாவது அங்கதச் செய்யுளே (Satire) ஆகும்.

ஆனால் இக்காலத்தில் வடக்கே ஸ்காட்லண்டில் சில கவிஞர் கள் தோன்றிச் சில அரிய கவிதைகள் இயற்றினார்கள். பார்பர் என்பவன் எழுதிய புரூசை அனுசரித்து ஹாரி [Harry] என்ற பாணர் கவிஞன் வாலேஸ் என்ற கவிதையை இயற்றினான். அக்காலத்தில் முதலாம் ஜேம்ஸ் [1394—1436] என்ற அரசனே

ஒரு கவியாகத் திகழ்ந்தான். இவனுடைய கவித்திறத்தைப் பற்றிச் சிறிது ஐயம் உண்டு. ஆனால் எவர் எழுதியபோதிலும் கவிதை ஒன்று இருக்கிறதானால் அதன் பெருமை போகாதல்லவா? அரசனே எழுதியிருந்தால் அது அருமையாகும். மேல் நாடுகளில் அரசர்கள் கவிகளாக இருந்ததில்லை. தமிழ் நாட்டிலே பாண்டியர் களும், வடநாட்டிலே ஹர்ஷன் முதலியோர்களும் அரச கவிகளாக இருந்திருக்கிறார்கள். ஸ்காட்லண்டில் ஒரு அரச கவி இருந்திருந் தால் அது குறிப்பிடத் தக்கதல்லவா? 'அரசன்' [The King's Quair] என்ற கவிதை அவனுடைய காதலைக் குறிக்கிறது. பதி னேரும் ஆண்டிலே சிறைபிடிக்கப்பட்டுப் பத்தொன்பதாண்டுகள் சிறைவாசம் அனுபவித்தான். அப்போது அரசனுடைய உறவின ரான இளவரசியைக் காதலித்து மணம் செய்து கொண்டான். இந்த அனுபவங்கள் எல்லாம் நெஞ்சிலிருந்து எழும்பிய சுயகவிதை களாகப் பரிணமித்தன.

*டன்பார்* [Dunbar — 1460 ?—1520 ?] என்ற மற்றொரு கவி நூறு கவிதைகள் எழுதிவிட்டான். இவைகளில் "முட்செடியும் ரோஜாவும்" [The Thrissil and the Rois] என்பது குறிக்கத் தக்கது. "தங்கப் படகு" [Golden Targe] என்பது மற்றொன்று. டக்லாஸ் [GAVIN DOUGHLAS 1475 ?—1522] என்பவன் King Hart என்ற கவிதை எழுதினான்.

3. நாடோடிப் பாடல்கள்

நாடோடிப் பாடல்கள் என்று கூறப்பெறும் *கதைப்பாடல்கள்* (Ballads) இக்காலத்தில் பல தோன்றின. பாணர்கள் அவை களைப் பாடி மக்களை மகிழ்வித்தனர். இவைகளின் ஆசிரியர் இன்னார் என்று அறிய முடியாது. இவைகளில் சிறந்தவை 'செவி சேஸ்', 'பழுப்புக் கன்னி' என்பன.

கதைப் பாடல்கள் தொடக்கத்தில் ஆடல் அல்லது கூத் தோடு உதித்தன. கூத்தனும், பாணனும் ஆடிக்கொண்டு அவை களைப் பாடுவார்கள். யாழை மீட்டிக் கொண்டு அதனை இசைக்கு இணங்கப் பாடுவான் பெரும்பாலும் போர்ச் செயல்களைக் குறித் தும், காதல் நிகழ்ச்சிகளைக் குறித்தும் அவைகள் இருக்கும். இரண்டும் கலந்தவையே மிகுதி. வடபகுதியில் பெரிய பிரபுக்கள் அரண்களிலிருந்து இன்பமும் வீரமும் துய்த்துக் கொண்டிருந்த நாளில் இவ்வகைப் பாடல்கள் மிகுதியாகத் தோன்றின. பாணர் கள் தங்கள் பிழைப்பின் பொருட்டு இப்பாடல்களைத் திருவோ லக்க மண்டபங்களில் பாடிப் பரிசு பெறுவார்கள். தமிழ்நாட்டில்

பாளையக்காரர்கள் நாளில் இருந்த நிலையே இங்கிலாந்தில் இருந்தது என்க. இவைகளில் சில பாடல்கள் காவியங்களைப் போலப் பெருகி நீண்டிருக்கும். அருமையான கருத்துக்களையும் அங்கங்கே மிளிர வைத்திருக்கக் காணலாம். இவ்வகைப் பாடல்கள் போர் மிகுந்த நாள்களில் மிகவும் போற்றப்பட்டன. செவி சேஸ் [ Chevy Chase ] கதைப் பாடல்களிலே தலை சிறந்தது. இதன் கதை வடக்கே நார்தம்பர்லாந்தின் [Northumberland] பெர்ஸி [Percy] என்ற கோமகனுக்கும் ஸ்காத் லாந்தின் டக்கலஸ் என்ற கோமகனுக்கும் நடந்த போர்ச்செய்தி களாகும். இப்பாடல் இசைக்கு ஏற்ற சீர் அமையப் பெற்றது. இயைபுத்தொடை ஒன்று விட்டு ஒன்ருய் அமையப் பெற்றது. பெர்ஸியும் டக்கலஸூம் பெரு வீரர்கள். பெர்ஸி வடக்கே வேட்டைக்குச் செல்கிருன். மான்களைத் துரத்திக் கொண்டு டக்கலஸ் நாட்டுள் புகுகிருன். டக்கலஸ் தன் நாட்டில் வேட்டையாடுதலைக் கண்டு சினந்து பெர்ஸியை எதிர்க் கிருன். இருவரின் சேனைகளும் எதிர்க்கின்றன. ஆனல் இருவரும் சந்தித்துத் தன்னந்தனியே போர் புரியலாம் என்று முடிவு செய் கிருர்கள். போர் மூண்ட பிறகு பெர்ஸியின் ஆட்கள் தமது தலைவனை அபாயத்துக்கு உட்படுத்தாது தாங்களும் போராடுகிருர்கள். பெர்ஸி டக்கலஸைக் குத்திக் கொன்று விடுகிருன். ஆனல் அவனுடைய வீரத்தைக் கண்டு துயர் உறுகிருன். டக்கலஸின் சவத்தை வாரி எடுத்து முத்தமிட்டு அழுகிருன். இந்தப் பகுதியை இசையில் வல்ல பாணன் வெகு உருக்கமாகப் பாடி மக்களிடையே மானுடப் பெருமையை நிலைநாட்டுகிருன்.

*"கேடயத்தின்மேல் சாய்ந்தே கீழ்விழ்ந்த டக்லஸ்கோ*
*காடகத்தில் இறந்திடவும் கண்டனுல் பெர்ஸியுமே*
*இறந்தவனைக் கைகளினுல் ஏந்திக்கண் ணீர்உகுத்தான்*
*[திறந்தமனம்] வாய்விட்டுத் தேம்பிடுவான் துயர்மொழிகள்*
*நின்னுயிரைக் காப்பாற்ற நிலமெல்லாம் [தந்திடுவேன்]*
*[நினையொத்த நெஞ்சினரோ நெடுவீரம் கொண்டவரோ*
*பனிபடரும் வடநாட்டின் பால்எங்கும் கண்டிலனே]".*[1]

**பழுப்பு மங்கை** [ The Nut-brown Maid ]

ஒரு தலைவனுக்கு ஒரு மங்கலான [மாநிறமான] பெண் உதிக் கிருள். வயது வந்தபோது ஒரு சாமானியன் மீது காதல் கொள்கிருள். அவன் தடை செய்கிருன். அவள் விடவில்லை. ஒருமுறை ஒரு கொலை புரிந்ததற்காக அவன் நாடு கடத்தப்படுகிருன். புறப்படு கையில் அவளுடன் ஒருமுறை பேசிவிட்டுச் செல்ல வருகிருன். அஞ்ஞாதவாசம் மிகக் கொடியதென்றும், தனக்கு வேருெரு காதலி

உண்டு என்றும் கூறுகிறான். ஆனால் அவளோ காதலை விடவில்லை. அவனோடு உடன்செல்ல முயலுகிறாள். அவளுடைய காதலின் அளவு கட்டுக்கு மீறியது. இறுதியில் அச் சாமானியனும் மற்றொரு பிரபுவினுடைய மகன் என்று தெரிய வருகிறது. இருவரும் மணக் கோலம் பூண்டு மகிழ்கிறார்கள். காதலர் பிரியும்போது பேசும் சொற்கள் நெஞ்சைத் துளைக்கின்றன.

*''தலைவ இந்தத் தரையினில் மகிழ்ச்சி*
*கலைமதி [யொப்ப கரையும் கூடும்]*
*வேனிற் பருவம் விளைக்கும் இன்பம்*
*தேனென இனிக்கினும் [தீர்ந்திடும் கடிதில்]*
*விடைகொடு என்கிறாய் வீண் அம்மொழியே*
*இடையினில் பிரிதல் ஏனோ வேண்டும்*
*இல்லை இல்லை இனியாம் பிரியோம்*
*நல்லைநின் பேச்சும் நாடாய் இனிஅதை*
*எங்குச் செல்வாய்? யாதுநீ செய்தாய்?*
*தங்கும் மகிழ்ச்சி தங்கா தாகிப்*
*பிரிந்துநீ செல்லின் பெரிதும் கவல்வேன்*
*புரிந்து கொள்வாய் புவியில் மக்களில்*
*நெஞ்சில் வைத்தது நினையலால் பிறரிடம்*
*கொஞ்சும் காதல் கொண்டிலன் யானே''*[2]

நாடகங்கள்

அக்காலத்தில் சில அரிய நாடகங்களும் எழுதப்பட்டன. அவைகள் பெரும்பாலும் சமயக் கதைகளை ஒட்டியவை. ஆதாம், நோவா, முதலிய நாடகங்கள் தோன்றின. உரைநடையிலும் சில அரிய நூல்கள் எழுதப்பட்டன. மேலரி ( Malory ) என்பவன் எழுதிய 'ஆர்தர் மரணம்' என்பது சிறந்தது. அந்த நூலை ஆதரவாகக் கொண்டே டெனிசன் பிற்காலத்தில் தன் பெருங் காவியத்தை எழுதினான்.

இந்த வகையில் ஆங்கிலப் பாமகள் தன் கன்னிப் பருவத்தைக் கழித்தாள்.

## குறிப்புகள்

1. The Perse leanyde on his brande
    and sawe the Duglas de ;
He tooke the dede man be the hande,
    and sayd, Wo ys me for the !

To have savyde thy lyffe I would have
    partyd with my landes for years thre,
For a better man of hart, nare of hande,
    was not in all the north countre

2. Oh lord, what is this worldys blysse
    that changeth as the mone !
My somers day in lusty may
    is darked before the none
I here you say, farewell :
    Nay, nay we depart nat so sone
Why say ye so ? Wheder wyll ye go ?
    Alas ! What have ye done
All my welfare to sorrowe and care
    sholde chaunge, yf ye were gone ;
For in my mynde, of all mankynde
    I love but you alone.

# பூப்புப் பருவம்

1600-1650

# IV. பூப்புப் பருவம்
## (1500—1650)

ஆங்கிலப் பாமகள் கன்னிப் பருவம் நீங்கினதும் பூப்புப் பருவம் அடைகிருள். பூப்புப் பருவம் மிகவும் ஒளி சிறந்த பருவம். பாமகளுடைய பண்புகள் மிகவும் வளர்ச்சி பெற்றுப் பொலிவுடன் விளங்குகிற பருவம். இப் பருவம் நீண்டு பெருகி, ஓங்கியிருப்பது. ஆங்கில மொழியின் இலக்கியப் பெருமை முழுவதும் இப்பருவத்தில்தான் கால்கொண்டு எழுந்தது எனலாம். இயற்கையாகவே இப்பருவம் மூன்று உட்பிரிவுகள் பெற்றிருக்கின்றது. ஒன்றரை நூற்ருண்டு அளவு இது விளங்கினதால் அரை நூற்ருண்டுக்கு ஒரு பகுதியாக இதனைக் காணலாம்.

முதல் உட்பிரிவு மறுமலர்ச்சியின் தொடக்கம், இரண்டாம் உட்பிரிவு மறுமலர்ச்சிச் செறிவு, மூன்ரும் பிரிவு மறுமலர்ச்சியின் முதிர்ச்சி. இவைகள் பூப்பின் மூன்று அரிய நிலைகளை உணர்த்துகின்றன. ஒரு கன்னி, பூப்பு அடைந்தால் அவளுடைய உடலில் பொலிவும் உறுப்புக்களில் வளர்ச்சியும் ஏற்படும். பூப்பு அடைந்ததை வயது வந்தது எனக் கூறுவோம். அதன் காரணமாக உறுப்புக்கள் ஒருவகைச் சாந்தி பெற்று மிளிர்ந்து நிற்கும் பாமகளின் உறுப்புக்களாகிய பாவினத்து செம்மை, யாப்பினமைதி, இசையின் இனிமை, கருத்தின் பொலிவு, உணர்வின் பெற்றி, எழிலின் கவர்ச்சி, கதையின் போக்கு, வசீகர ஆற்றல், பண்பாட்டு முதிர்ச்சி முதலிய பெற்றிகள் முற்றும் இப்பருவத்தே ஓங்கி வளர்ந்து ஒளி செய்யும் என்க.

### 1. வரலாறு

இப்பூப்புப் பருவத்தின் செழிப்பை அறிவதற்கு அக்காலத்து நாட்டு வரலாறும் தெரிய வேண்டும். 15-ஆம் நூற்ருண்டின் இறுதியில் ட்யூடர் வம்சம் நாட்டை ஆளத் தொடங்கியது. 16-ஆம் நூற்ருண்டு முழுதும் அவ்வம்சமே ஆண்டது. அதனரசர்கள் மிகுந்த வலிமை பெற்றவர்கள். பிறர்க்குச் சிறிதும் இடம் கொடுக்காமல் மிக வலிமையோடு ஆண்டார்கள். நாட்டிலிருந்த தீமைகளை ஒழித்து நாடு ஒற்றுமைப்பாடு அடையச் செய்து உள்நாட்டு அமைதியை நிலைநிறுத்தினர்கள். எட்டாம் ஹென்றி [ 1509—1547 ] மிகவும் வல்லமை வாய்ந்தவன். போப்பையும் எதிர்த்துத் தன் பெருமையை நிலை நிறுத்தினன்.

சமயத்திலும், அரசியலிலும் பிறராதிக்கம் அணுகாமல் தடுத்து நின்றுன். எலிஜபெத்து ராணியின் நீண்ட ஆட்சியில் [1558—1603] ஆங்கில நாடு உலகிலேயே மிகுந்த சிறப்புப் பெற்று ஓங்கியது. அதுவரை உலகப் பெருமை பெற்றிருந்த ஸ்பெயின் சக்கரவர்த்தியை வென்று கடல் வாணிகத்தைத் தொலைவிலிருந்த தீவுகளுக்கும், புத்தம் புதிய கண்டங்களுக்கும் கொண்டு சென்றது. ட்யூடர் வம்சம் என்றுல் பிறர் நடுங்கும்படியான மேன்மை நிலைபெற்று நின்றது. சமயத்திலும், ஆங்கில சமய ஆட்சி தனி நிலை பெற்றுவிட்டது. ஆகவே அந்த நூற்றுண்டில் ஆங்கில நாடு தற்பெருமை, வல்லமை, வர்த்தகச் சிறப்பு, சமய உரிமை முதலிய எல்லா வகைகளிலும் மேன்மை பெற்று ஒப்பற்ற வெற்றி அடைந்தது. அப்படியானுல் பாமகளும் அந்த வெற்றிகளினுல் செழிப்படைவாள் அல்லவா ?

## ஐரோப்பிய மறுமலர்ச்சி

இங்கிலாந்தில் அரசியல் நிலைமை இவ்வாறு இருக்க ஐரோப்பாவில் ஒரு தீவிரமான மாறுதல் ஏற்பட்டது. பல நூற்றுண்டுகளாக உரோமானிய அரசு ஐரோப்பாவிற்குப் பண்பாட்டை ஊட்டி வந்தது. நடை, உடை, பாவனை, கல்வி, அரசு, வாணிபம், தொழில் முதலிய எல்லாச் செய்திகளிலும் உரோமானியரை மற்ற எல்லா ஐரோப்பியரும் தழுவி வந்தார்கள். அப்பொழுது உரோமானியத் தலைநகராக இருந்த கான்ஸ்டாண்டிநோபிள் எல்லாவற்றிற்கும் நடுநாயகமாயிருந்தது. அந்நகரோ ஐரோப்பாவின் கீழ்க் கோட்டில் இருந்தது. ஆகவே அப்பண்பாடு வெகு அரிதாக மேற்கே பரவிற்று. அப்படி இருக்க 1493-இல் கான்ஸ்டாண்டிநோபிளைத் துருக்கியர் பிடித்து உரோம அரசைத் தொலைத்தார்கள். அங்கிருந்த கலை வல்லோர்கள் தலைமை இழந்தவர்களாகி மேற்கு நாடுகளுக்குச் சென்றுர்கள். அவர்கள் மூலம் கிரேக்க—ரோமானிய மொழி வளர்ச்சி மேற்கே பரவியது. அதுவரை பரவியிருந்த பண்டை நாகரிகம், இப்போது தொலைந்து புது மொழிகளின் பரவலினுலே புது நாகரிகம் தொடங்கிற்று. இவ்விளைவை ஐரோப்பிய மறுமலர்ச்சி [Renaissance] எனக் கூறுவர். இந்த மறுமலர்ச்சியினுல் சமயத்தில் இருந்த அடிமைக் கொள்கைகளும் மாறிப் புத்துணர்ச்சியும், சுதந்திரக் கொள்கைகளும் எங்கும் புகுந்தன. கிரேக்க, உரோமானியக் கதைகள், கருத்துக்கள், கவிதைகள், முதலியவற்றை ஏனைய நாட்டார்கள் மிகுதியாகப் படிக்கத் தொடங்கினுர்கள். முதலில் இத்தாலி, பிரான்சு முதலிய நாடுகளில் மறுமலர்ச்சி

பரவிற்று. பிறகு மெதுவாக இங்கிலாந்திலும் பரவிற்று. அதற்கு ஏற்றபடி நாட்டு வலிமையும் ஆதரவு காட்டிற்று. கீழ் நாட்டு நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

## 2. எழுத்தாளர்கள்

அந்தக் காலத்தில் இருந்த பல்கலைக் கழகத்திலிருந்து சில அறிஞர்கள் கீழ் நாடுகளுக்குச் சென்று கிரேக்க உரோமானிய நூல்களைக் கற்று ஆக்ஸ்போர்டு கழகத்தில் கற்பித்தார்கள். தாமஸ் மோர் [Thomas More ; 1478—1535] என்ற அறிஞர் *உடோப்பியா* ( Utopia ) என்ற கற்பனைப் பனுவலை எழுதினார். அதில் மக்கள் சமுதாயம் எவ்வாறு மாறினால் யாவர்க்கும் இன்பம் ஏற்படும் என்று விளக்கினார். அந்நூல் ஒரு புரட்சி நூல். அது மக்களை நினைக்கும்படித் தூண்டிற்று. கல்விமான்களான எலியட் (Elyot ) முதலியோர் கல்வி, தத்துவம் முதலிய கலைகளைப் பற்றி எழுதினார்கள். இந்நூல்கள் மக்கட் சமுதாயம் மனிதத் தன்மை நோக்கில் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறின.

அப்போது வில்லியம் டின்டேல் [ William Tindale 1492?—1536 ] என்பவர் பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதனை இங்கிலாந்தில் அச்சடிக்க அரசன் அனுமதிக்கவில்லை. வெளிநாட்டில் அச்சாகி அது இங்கிலாந்துக்கு வந்தது. பிரார்த்தனை நூலும் எழுதப்பட்டது ; நாடெங்கும் பெரிய மடாலயங்கள் இருந்தன. அவைகளுக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. ஆனால் கணக்கற்ற அநீதிகள் நடைபெற்றன. அரசாங்கத்திற்குப் பெரும் குறைவும் மக்களுக்கு அவற்றின் மீது அதிருப்தியும் ஏற்பட்டன. அப்போது இருந்த எட்டாம் ஹென்றி மிக வல்லவன். தனக்குப் பெருமை வேண்டி எதையும் செய்வான். ஒரே மூச்சில் எல்லா மடாலயங்களையும் நசுக்கி விட்டான். அவற்றின் சொத்துக்களைத் தன் அரசுக்குச் சேர்த்துக் கொண்டான். அக்காலத்தில் லேடிமர் [Latimer—1485—1555] பாக்ஸ் [ John Foxe 1516—1587 ] என்ற ஆசிரியர்கள் சமயத்தைத் தூய்மையாக்கப் பல நூல்களை எழுதினார்கள். வடக்கே ஸ்காட்லாண்டில் டேவிட் லிண்ட்சே [ David Lyndsay 1490—1555 ] முடியரசு [The Monarchie] என்ற கவிதை எழுதினான். புக்கானன் [ George Buchanan 1506—1582 ] ‘ஜெப்தா’ [ Jephtha ] சந்த் யோவான் [ St. John ] ஆகியோர் சரிதங்களை எழுதினான். நாக்ஸ் [ Knox 1505—1572 ] ஸ்காட்லாண்

டின் சமய வரலாற்றைப் பற்றி எழுதினான். இந்நூல்களால் மதச் சீர்திருத்தம் மிக விரைவாக மக்களிடையே பரவலாயிற்று.

மதச் சீர்திருத்தத்தினாலேயே கவிதை பெருமை அடையவில்லை. வேறு இரண்டு இளங்கவிஞர்கள் தோன்றிக் கவிதையை உயிர்ப்பித்தனர். வையட் [ Sir Thomas Wyatt 1503—1542 ] ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வந்தவன். எனவே இத்தாலியக் கவிதை வடிவங்களில் ஈடுபட்டான். அவன் பல சிறு பாக்களையும், அங்கதங்களையும் பாடினான். சர்ரே பிரபு [ Surrey 1517—1547 ] பல இரங்கற்பாக்களை இயற்றினான். இருவரும் இளம் வயதில் உயிர் துறந்தார்கள். சாக்வில் [ Thomas Sackville 1536—1608 ] 'Induction' என்ற நூலை இயற்றினான். சாசரின் செல்வாக்கை இந்நூலில் காணலாம். அவலச்சுவையே மிகுதியாக இவன் பாட்டுக்களில் உண்டு.

மானுட வாழ்வில் எதிர்ப்படும் போர், பஞ்சம், வஞ்சனை, பழி தீர்த்தல் போன்ற பயங்கரமான தீக்குணங்களைப் பற்றி வருணித்து எச்சரிக்கை செய்திருக்கிறான்.

நாடகங்களும் சில எழுதப்பட்டன. அவைகளிலும் மனிதத் தன்மையே ( Humanism ) மிளிர்ந்தது. லிண்ட்சே [Lyndsay] பேல் [ John Bale ] போன்றவர்கள் நாடகத்தைச் சீர்திருத்தினார்கள்.

அப்போது காமெடி ( இன்ப நாடகம் ) வளர்ச்சி அடைந்தது. ட்ராஜெடி ( துன்ப நாடகம் ) கிரேக்க மொழியைத் தழுவி வளர்ந்தது. சுருக்கமாகச் சொன்னால் பின்வரும் வளமான இலக்கிய மலர்ச்சிக்கு இக்காலத்தில் தோன்றிய நூல்கள் அடிப்படையாக அமைந்தன எனலாம்.

## மறுமலர்ச்சித் தொடக்கம் (1500—1575)

ஆங்கில மறுமலர்ச்சிக்குக் காரணம் கிரேக்க உரோமானிய நூல்கள் என்று கூறப்பட்டது. 1603 க்குள்ளாகப் பண்டைக் காலக் கவிஞர்களின் நூல்கள் பெரும்பாலும் ஆங்கிலம் ஆக்கப்பட்டன. ஹலண்டு என்ற புலவன் மொழிபெயர்ப்பார் தலைவன் என்று கூறும்படி அத்தனை நூல்களை ஆங்கிலமாக்கினான். பல கவிதைகள் இரண்டு மூன்று அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டன. சேப்மன் ( Chapman ) மொழி பெயர்த்த ஹோமரின் இலியட் ( Iliad ), ஆங்கிலேயரின் கண்களைத் திறந்தன. இவற்றால் பல அறிஞர்கள் பலன் அடைந்தனர். மேலும் இத்

தாலியிலிருந்தும் பல அரிய நூல்கள் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டன. ஆங்கிலேயர் இவற்றின் மூலம் பெற்ற அறிவைக் கொண்டு புதிதாக இலக்கியம் படைக்கத் தொடங்கி ஞர்கள். கவிதை என்பதன் மேன்மை இன்னது என்று மக்கள் உணர்ந்து சிறந்த கவிதைகளையே போற்றுவது எனக் கொண் டார்கள். இதன் விளைவாக வெறும் யாப்பு விதிகளுக்குக் கட்டுப் பட்ட கவிதைகளைப் புலவர்கள் இகழ்ந்தனர். பொருளே கவி தையின் வடிவையும் அமைப்பையும் ஆள வேண்டுமே ஒழிய யாப்பு விதிகள் கவிதையமைப்பைக் கட்டுப்படுத்தலாகாது என்ற கொள்கை வலுப்பட்டது.

## முப்பெருங் கவிஞர்

இவ்விதப் புது மலர்ச்சியில் விளைந்தவர்களில் மூன்று கவி ஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஜான் லிலி [John Lily 1554—1606 என்றவன் தான் சொல்வதைத் தெளிவாக உரைத்தவன். நெஞ் சில் படிய வைத்தவன். அவனுடைய கவிதை "யூபியூஸ்" (Euphues) ஆகும். ஒழுக்கமின்மை, கல்வி, காதல் முதலியவற் றில் காட்டும் பகட்டார்வம் போன்ற சமூகக் குற்றங்களை இந் நூல் கவிதை மரபில் கண்டிக்கிறது.

*பிலிப் சிட்னி* [Sir Philip Sidney 1554—1586] ஒரு சீமானின் புதல்வன். சிறந்த போர்வீரன். உயிரைத் தியாகம் செய்ய எப்போதும் தயாராக இருந்தவன். அரசாங்க நிர்வாகக் கலையில் நிபுணன். அவன் எழுதிய 'ஆர்க்கேடிய' [Arcadia] ஒரு சிறந்த நூல். அது அக்காலத்து மக்களை மிகவும் கவர்ந்தது. அவனுடைய, மற்றொரு நூல் "ஆஸ்ட்ரோபெல்" [Astrophel] என்பது. இதுவும் காதற்பண்பை ஒட்டிக் கற்பனை நயம் சிறக்க எழுதப்பட்ட ஒரு கவிதை நூல்.

*ஸ்பென்ஸர்* [Edmund Spenser—1552—1599] மிகப் பெயர் பெற்ற கவிஞன். 'இடையன் பஞ்சாங்கம்' [Shepherd's Calender] அவனது முதல் நூல் 'கீதங்கள்' [The Hymns] இரண்டாம் நூல். அவைகளில் 'ஹப்பர்டு அன்னையின் கதை' [Mother Hubbard's Tale] அடங்கி உள்ளது. 'குறைகள்' [Complaints] மூன்ருவது நூல். ஆஸ்ட்ரொபெல்' [Astrophel] நான்காவது. ஐந்தாவது அமரோதி [Ameretti] ஆருவது கந்தருவ ராணி [Faerie Queen] ஆருவது மிகச் சிறந்தது ஆகும். அக்காலப் பேரரசியையே இந்தக் கந்தர்வ ராணியாக வைத்து எழுதினன் போலும். மனஎழுச்சி மிகவும் கண்ணியமானது. தன் மன எழுச்

சிக்குத் தக்க யாப்பையும் தேர்ந்து கொண்டான். இந்நூலே அக்காலத்து ஒப்பற்ற நூல் அந்த இராணி எலிஜபெத் ஆவாள். இன்னும் ராலி பிரபு [Sir Walter Raleigh] முதலிய இதர கவிஞர்களும் அரசைத் தழுவிக் கவிபாடி விளங்கினர்கள்.

### மறுமலர்ச்சியின் செறிவு (1575—1625)

பூப்படைந்த ஆங்கிலப் பாமகள் அழகில் சிறந்து விளங்கினள். மறுமலர்ச்சி தொடங்கி வளர்ந்து செறிவுற்றது. ஒரு மகளின், அதிலும், கலைமகளின் அழகு எப்போது ஒளி பெற்று விளங்கும்—அவள் நடந்து, ஒல்கி, ஆடிப்பாடும் போது தானே அதனுடைய பொலிவு பன்மடங்கு ஓங்கி நிற்கும்? ஆடல் பகுதியில்தான் அவளுடைய முழுத்தோற்றமும் பொலிந்து நிற்கும். ஆடல் பகுதி என்பது நாடகமாகும். எந்நாட்டிலும், எம்மொழியிலும் ஆடல் அல்லது கூத்திலேதான் கலைமுதிர்ச்சி காணப்படும். மக்களுடைய பண்பாடு முழுதும் தோன்றும். அவ்வாறு இங்கிலாந்திலும் ஆடல் பகுதி மிக வளர்ந்து உலகத்தையே மிக வியக்கச் செய்தது. எலிஜபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் தான் ஆங்கிலநாட்டு அரசியல், வாணிபம், இலக்கியம் முதலியன மிகச் செழிப்பாக விளங்கி உலகிலே சிறந்த அரசு எனப் பெயர் பெற்றது. ஆங்கில இலக்கியத்தின் பொற்காலம் என்று இக்காலத்தை அறிஞர் புகழ்வர். ஆங்கில அரசியும் அவளுடைய பிரபுக்களும், அமைச்சர்களும் கலையில் வல்லவர்களாகி, ரசிகர்களாக விளங்கினர்கள். அப்போது அவர்களை மகிழ்விக்க ஆடல் அரசியாக ஆங்கிலப் பாமகள் மாறினள். அவளுக்கு ஆடல் ஆசிரியனாக உலகப் புகழ்பெற்ற ஷேக்ஸ்பியர் என்ற கவிஞர் தோன்றினர். அவனே ஆடற்பகுதிக்கு ஒப்பற்ற தலைவன் ஆனன்.

### 1. உலகப்பெருங் கவிஞர்

ஷேக்ஸ்பியர் [William Shakespeare—1564—1616] பள்ளியிலோ கல்லூரியிலோ படித்தவனல்ல. செல்வந்தனின் மகனுமல்ல. நகரப் பண்பாட்டில் உதித்தவனுமல்ல. நாட்டுப்புறத்திலே 'ஸ்ட்ராட்போர்ட்' [Stratford-on--Avon] என்ற குக்கிராமத்திலே ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவன். அவன் இயற்கையிலேயே கவிஞன். பிறர் கற்றுக் கொடுத்துக் கவிஞன் ஆகவில்லை. வயிற்றுப் பாட்டுக்காகத் தலைநகர் சென்று ஆட்டக் கொட்டகையில் கூலிக்குச் சேர்ந்து தானும் ஆட்டம் ஆடிப் பிழைத்தவன். வறுமையால் பிணைக்கப்பட்டு அது கொண்டு

மக்களின் குணங்களை அறிந்தவன். அந்த அனுபவத்தைக் கொண்டு தானே ஆடியும், நாடகங்களை எழுதியும், பாடல்களைப் பாடியும் உயர்ந்தவன். நாட்டில் பிரதிபலித்து வந்த பண்பாட்டுப் பெருமை அவனை உயர்த்தியது. நாடகம் பார்த்து நடிகர்களைக் கேட்டு மகிழும் பொதுமக்களைக் களிப்புறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அக்காலப் பண்பாட்டை ஒத்து அரிய பாத்திரங்களை உண்டாக்கி, அழகிய கருத்துக்களை அமைத்து நாடகங்களை எழுதினான். அவனுடைய நாடகங்களில் அவனே ஆடினதால் [1] [நடித்ததால்] அதற்குரிய ஒப்பரிய அனுபவத்தைப் பெற முடிந்தது. எங்கே உள்ளம் உண்டோ அங்கே வழியும் பிறக்குமல்லவா ? ஷேக்ஸ்பியர் உயர்ந்த கொள்கைகளைத் தழுவியே கதைகளை அமைத்தமையால் உயர்ந்த நிலைமையை விரைவில் பெற்றான். நாடக ஆசிரியர்களில் மிக உன்னத நிலைமையையும் அடைந்தான்.

ஷேக்ஸ்பியர் முப்பத்தாறு நாடகங்களை எழுதினான். அவைகளில் மானுடம் காட்டும் அனைத்துக் குணங்களையும் படைத்துக் காட்டியுள்ளான். அவனுடைய பாத்திரங்கள் தெய்வச் சிருட்டி போல உண்மை வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் தன்மை உடையவர்கள். தீக்குணம், நற்குணம் இரண்டையும் வெகு உருக்கமாகக் காட்டினான். அரசன், பாமரன் இரண்டு பாலாரையும் சிருட்டித்தான். ஒரு பூச்சேலையை நெய்வது போல நாடகத்தையும் நெய்து வைத்தான். பாத்திரங்களின் வாய்மொழியிலே உலகப் பண்பாட்டை மிகச் செம்மையாகப் பொதிந்து வைத்திருக்கிறான். மானுட வாழ்க்கையின் காலமும், இடமும், பேச்சும், மூச்சும் எல்லாம் ஒன்றுசேரத் தத்தம் இடங்களில் அமைத்து வைத்திருக்கிறான். அவன் சிருட்டித்த ஆண், பெண் பாத்திரங்களின் எண்ணிக்கை பெருவாரியானது. ஒரு பாத்திரத்தின் குணம் மற்றொருவனுக்கு இல்லை. இது மிகை இது குறை என்று கூற முடியாது. இன்னதை இன்னபடி மாற்றினால் இதனினும் மேன்மையாக இருக்கும் என்றும் கூற முடியாது. இந்த வகைகளிலே சிறப்புப் பொருந்திய இத்தனை நாடகங்களையும் ஒரு சாமானிய நாட்டுப்புறத்தான் எழுத முடியுமோ என்று அறிஞர்கள் ஐயுற்றனர். சிலர் *பேகன்* [Francis Bacon] அல்லது *மார்லோ* [Christopher Marlowe] என்ற அறிஞர்கள் எழுதிவிட்டு இவன் பெயரிலே வெளியிட்டிருக்கலாம் என்றும் கூறத் தொடங்கினார்கள். அந்த விபரீத சந்தேகங்கள் எல்லாம் இப்போது கைவிடப்பட்டன. ஷேக்ஸ்பியரே இந்நாடகங்களை எழுதினான் என்று தற்போது நம்பப்படுகிறது.

2. பண்புகள்

ஷேக்ஸ்பியருக்கு முறையான படிப்பே இல்லையே ; இத்தனை நாடகங்களையும் எழுத எந்த நூல்களைப் பின்பற்றினன் என்று விவாதிப்பர். அல்லது தன் சுய அறிவிலேயே இவைகளை எல்லாம் படைத்தானே என்றும் கேட்பர். ஷேக்ஸ்பியர் புதிதாகக் கதைகளைப் படைக்கவில்லை. பழைய காலத்து நாட்டுப்புறக் கதைகளும், அரசியல் கதைகளும் எத்தனையோ வழக்கத்தில் இருந்தன. பல மொழிகளிலும் அவைகள் எழுதப்பட்டிருந்தன அவைகளைப் படிக்கும் வாய்ப்பும், பிறரிடம் கேட்கும் வாய்ப்பும் நாடகங்களில் காணும் வாய்ப்பும் அவனுக்கு ஏற்பட்டன அவைகளை எல்லாம் தனது மனதில் பதித்து வைத்துக் கொண்டான். அக்கதைகளை எவ்வாறு திருத்தி அமைத்தால் உண்மையான வாழ்க்கை நிலையைப் படைக்கலாம் என்று சிந்தித்தான். அவைகளை ஒழுங்காக ஒன்றுபடுத்தி உண்மையான அடிப்படை தந்து நாடகங்களாக அமைத்தான். ஷேக்ஸ்பியருடைய பெருமை, ஒப்பற்ற மதிநுட்பம் எல்லாம் அவனுடைய படைப்பின் அமைப்பில் அடங்கி இருக்கின்றன. வறுமையாலோ தேவையினலோ மக்களுடைய பண்புகளை அறிந்தவனுதலால் மானுட வாழ்க்கையைச் சித்திரித்து ஒரு படமாக்கும் படைப்பாற்றல் அவனுக்கு இயற்கையாகவே இருந்தது. அந்த ஆற்றலே அவனுடைய இணையில்லாத பெருமையென்க.

3. நாடகங்கள்

அவன் இயற்றிய 36 நாடகங்களையும் மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இன்பம், அவலம், சரிதம் என்பன. இன்ப நாடகங்களின் [Comedy] கதை பலவழிகளில் சென்றபோதிலும் இறுதியில் இன்பமாக முடிவது அவல நாடகங்களின் கதை பல வழிகளில் திரிந்து இறுதியில் துயரத்தில் முடிவது. சரித நாடகங்கள் சரித்திரத் தலைவர்களின் வாழ்க்கைச் சரிதைகளில் அருமையான பகுதிகளை எடுத்துக் கொண்டு புதுக்கருத்துக்களைச் சேர்த்து ஒரு கதைபோல் ஆக்குவது. இந்த மூன்று பிரிவுகளில் முதுவேனிற் கனவு [A Midsummer Night's Dream], கடும்புயல் [The Tempest] நீ விரும்பியபடியே [As you like it] என்ற நாடகங்கள் இன்பமாக முடிவன. ஹாம்லட் [Hamlet] ஒத்தெல்லோ [Othello] லியர் [King Lear] மேக்பெத் [Macbeth] என்பன துன்ப நாடகங்கள். சீசர் [Julius Caesar] இரண்டாம் ரிச்சர்டு [Richard II] நான்காம் ஹென்றி [Henry IV] முதலியன சரிதக் கதைகள். இவ்வாறு எல்லாச் சுவைகளும் பொருந்திய அரிய நாடகங்களை

இயற்றியுள்ளான். கதைப்போக்கு அழகுள்ளதாக ஒரு இரவில் மூன்று மணி நேரத்தில் நடிக்கும்வண்ணம் ஐந்து அங்கங்களில் அடங்கும்படி அமைத்திருக்கிறான். ஒரு கதைக்கு இரசிக்கும்படி அவசியமான பாத்திரங்களை மட்டும் வைத்துக் கொண்டு தேவையற்ற குட்டிக்கதைகளையும், பாத்திரங்களையும் விலக்கி வைத்து ஒரு புராணக் கதை ஆகும்படி எழுதியிருக்கிறான். பார்க்கிற மக்கள் சோர்வடையாதபடி இடையிடையே நகைச்சுவை நிரப்பிக் கதைகளைப் படைத்திருக்கிறான். ஆகவே நாடகக் கதைகளை அமைப்பதில் இவன் மிகச் சிறந்தவன் என அறியலாம்.

### 4. பிறர் ஆராய்ச்சிகள்

ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் பற்றியும் கவிதைகளைப் பற்றியும் ஆராய்ச்சி உரைகள் கணக்கின்றி எழுதப்பட்டுள்ளன. சென்ற நான்கு நூற்றாண்டுகளாக உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் அவனைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். எல்லா மொழி அறிஞர்களாலும் அவன் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எந்தெந்த வகையில் அவன் குணங்களை ஆராய வேண்டுமோ அந்தந்த வகைகளில் எல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள். அவன் எத்தனை சொற்களை ஆண்டிருக்கிறான். எத்தனை அணிகளை வழங்கியிருக்கிறான், என்ன விளையாட்டுக்களைச் சொல்லியிருக்கிறான், முதலிய சில்லறை விஷயங்களும் ஆராயப்பட்டுள்ளன. மானுட குணங்கள், தத்துவ ஆராய்ச்சி முதலிய ஆழ்ந்த செய்திகளும் ஆராயப்பட்டன. வேறு எந்தப் புலவரைப் பற்றியும் இத்தனை அறிஞர்கள் ஆராய்ச்சி உரை எழுதவில்லை. சென்ற நான்கு நூற்றாண்டுகளாகவும் அன்றி இன்றைக்கும் அவனைப் பற்றிப் புதிது புதிதாக எழுதிக் கொண்டேயிருக்கிறார்கள். அவனுடைய நூல்கள் எந்த எந்த சித்திர, விசித்திர முறைகளுண்டோ அவைகளிலும் அச்சடித்திருக்கிறார்கள். உலகிலேயே சிறந்த மக்களில் முதல்வன் என்ற பட்டம் அவனுக்குத் தந்திருக்கிறார்கள். பைபிளைத் தவிர இரண்டாவதாக ஷேக்ஸ்பியர் நூல்களே உலகில் மிகுந்த மதிப்பைப் பெற்றிருக்கின்றன, மிகுந்த மொழிகளில் ஆக்கப் பட்டிருக்கின்றன என்று கூறினால் அது மிகை அல்ல. இத்தனைச் சிறந்த கவிவாணரை உலக கவி என்றே சொல்ல வேண்டும். ஒரு நீதி நூலாசிரியனுக்கு மதிப்பு இருக்கலாம். ஒரு நாடக ஆசிரியனுக்கு இத்தனை மதிப்பு வந்தது ஆங்கிலத்தின் மேம்பாடு என்றே கருத வேண்டும்.[1]

அவனுடைய நாடகங்களிலே இன்ப நாடகங்களில் ''நீ-விரும்பியபடியே'', ''முதுவேனிற் கனவு'', ''வெனிஸ் வர்த்தகன்,"

[The Merchant of Venice] என்பன மிகச் சிறந்தவை. அவைகளை மாணவர்கள் மிகவும் விரும்புவார்கள். இவற்றின் இடையிடையே சிறு பகுதிகள் இரத்தினங்கள் போல மிளிர்கின்றன. காட்டாக, ''இரக்கம் அல்லது கருணையின் கனிவு'' போன்றன மிக அருமையானவை.[3] எல்லோராலும் மனப்பாடம் செய்யத்தக்கவை. துன்ப நாடகங்களில் ''ஹேம்லட்'' முதலிய நான்கும் சிறந்தவை. மாணவர்களும் அறிஞர்களும் இவற்றை இடைவிடாமல் படிப்பர், அவைகளில், 'இருக்கலாமா, இறக்கலாமா', 'தந்தை மதி' முதலியவை மிகச் சிறந்தவை. சரித நாடகங்களில் 'ஜூலியஸ் சீசர்', 'ஜான்', 'இரண்டாம் ரிச்சர்டு', 'நான்காம் ஹென்றி', 'கொரியாலனஸ்' போன்றன மிகச் சிறந்தவை. அந்தோனியின் பேச்சுக்கள், ஆர்தர் இளவரசன் ஹூபர்ட்டேன், உயிர்ப்பிச்சை கேட்டல் முதலியன ஒப்பற்ற பகுதிகள். இவைகளை மட்டும் கணக்கற்ற மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்கள். இன்றைக்கும் மாணவர்கள் மனப்பாடம் செய்துகொண்டே இருக்கிறார்கள். பாத்திரங்களில் 'ஷைலக்' [Shylock] என்ற வஞ்சகன், 'போர்ஷியோ'[Portio] என்ற நியாயவாதி, 'ஹேம்லட்' என்ற இளவரசன் 'இயாகோ' [Iago] என்ற கொடியோன், 'மடையன் [Fool] என்ற விதூஷகன், 'மக்பெத்' இராணி [Lady Macbeth] என்ற அரக்கி, 'மிராண்டா' [Miranda] என்ற இளவரசி, அந்தோணி [Antony] என்ற சொற்பொழிவாளன், கிளியோபாத்ரா [Cleopatra] என்ற ஆரணங்கு முதலியவர்கள் மிகப் புகழ்பெற்றவர்கள்.[4] இயற்கைக் குணங்கள் எவ்வெவ்வாறு உலகில் அமைந்துள்ளன என்று இப் பாத்திரங்களே அறிவிக்கும். மேலே கூறிய பாத்திரப் படைப்பின் சிறப்பிற்குச் சான்றாக ஒன்று கூறுவோம். ஹேம்லட் என்ற இளவரசன் தன் தந்தையின் இறப்பு, தாயின் மறுமணம், சிற்றப்பனின் வஞ்சனை ஆகிய சிக்கல்கள் நிறைந்த சூழல்களில் சிக்குகிறான்; இந்நிலையில் அவன் மனம் படும் வேதனையைக் கவிஞன் நமக்குக் காட்டுவதற்காகப் படைத்த தனிமொழி ஒன்றைக் காணலாம். மானுட உள்ளத்தின் பான்மையையும் பாங்கையும் கவிஞன் எவ்வளவு நுட்பமாக உணர்ந்து உணர்த்தியிருக்கிறான் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாக அமைந்துள்ளது :

### நெஞ்சறி புலம்பல்[5]

*இருக்கவா, இறக்கவா? இதுதான் கேள்வி*
*கொடுமைசெய் அதிட்டம் கொட்டும் குத்தலும்*
*சரம்செய் புண்களும் சகித்தல் சரியோ*

*துன்பக் கடல்மேல் தொடர்ந்து போர்விளைத்*
*தெதிர்ந்தே அவற்றிற் கிறுதி காண்பதோ*
*யாதோ கண்ணியம் இதயம் தனக்கே?*
*இறக்கவோ, தூங்கவோ? இல்லை வேண்டாம்*
*தூக்கம் என்றால் தொடர்தலை வலியுடன்*
*தசைதரும் ஆயிரம் இயற்கை அதிர்ச்சிகள்*
*தொலைந்திடும், விரும்புவம் தொடுத்தே அவ்வணம்.*
*இறக்கவோ, தூங்கவோ, இனிதே தூங்கலாம்*
*கனவும் காணலாம், காண்பயன் எதுவோ*
*இறப்பெனும் தூக்கத் தெவ்வகைச் சொப்பனம்*
*உண்டோ? சாவுறும் உடலை உதறிடின்*
*யாதுறும்? அதனையும் எண்ணி ஆய்வாய்*
*நீண்ட ஆயுள், நிரப்பிடின் மதிப்பை,*
*கொடுமையும் பயக்கும், ஏனெனில் அறிவாம்*
*காலம் கொட்டும் கசையடிப் பழிகள்*
*ஒறுப்பவன் தீங்கு, ஓய்வில்இறு மாப்பு,*
*கைக்கிளைத் துன்பம், சட்ட நிதானம்,*
*அலுவலன் கடுஞ்சொல் அடாப்பழி [பொறுமை]*
*சிறியது கொண்டு செழிப்பவன் கூடப்*
*பெரியதாய் எண்ணிப் பேணிடும் துடுக்கும்*
*இவை யெலாம் பொறுப்பது எவரே?*
*ஆயாச வாழ்வில், வேர்த்தலும் கடுத்தலும்*
*[ஆர்த்தலும் வேர்த்தலும்] யாரே படுவர்*
*இறந்தபின் யாதுறும் என்ற அச்சமோ*
*இயங்கிச் சென்றவன் திரும்பா தேயம்*
*திரும்பா தேயம் [மனத்தை மயக்கும்;]*
*[நன்னெஞ் சாயினும் நலிய வருத்தும்;*
*அறியா இடத்தை அவாவலின் அறிந்தஇவ்*
*இகத்துறும் கேடுகள் ஏற்பது நன்றே.]*

## 5. அவன் மேன்மை

எலிசபெத் காலத்தில் கணக்கற்ற புல்வர்களும், நாடக ஆசிரியர்களும் தோன்றியிருக்க, ஷேக்ஸ்பியர்க்கேன் இத்தனை பெருமை கொடுக்கப்பட்டது என்று கேட்கலாம். தனித்தன்மையில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு பெருமை அமைந்திருக்கலாம். ஆனால் பலவகைப்பட்ட குணங்களையும், குறைகளையும் ஒருங்கு சேர்த்துப் பார்த்தால் இத்தனையும் ஒரு ஆசிரியன் செய்துள்ளான் என்ற அற்புத நிலை ஷேக்ஸ்பியருக்கே உண்டு. ஆகவே அவனே மிகப் பெரிய மேதை என்று உலகம் பேசுகிறது. உலகப் பொதுப்

பண்புகளை [Universals] எடுத்தாண்ட அளவில் அவன் உலகப் பொதுக்கவி எனப் புகழப்படுகிருன்.

ஷேக்ஸ்பியருடைய யாப்பும் மிகப் பொருத்தமானது. வசன நடை மிகக் குறைவு "Blank Verse" என்ற ஆசிரியப் பாப் பண்பே மிகுதி. இடையிடையே வேண்டியபோது சின்னஞ்சிறு இசைக்கவிகளைப் புகுத்தியிருக்கிருன். இந்த வகையில் இயைபு, மோனை முதலியன உண்டு. மற்றப் பேச்சுக்களில் (உரையாடல் பகுதிகளில்) அந்தச் சொல்லணிகள் இல்லை. பொருளணி மிகுதி யாக உண்டு. பொதுவாக உவம உருவக அணிகள் மிகுதி. இந்த வகையிலும் அவனுடைய கவிதை போற்றப்படும் முறையில் உள்ளது. இவையே அவனை உலகின் தலைசிறந்த புலவனுக ஆக்குகின்றன.

## 6. அவன் காலத்துக் கவிஞர்கள்

ஷேக்ஸ்பியருக்குச் சமகாலத்தவராகவும், அவர்க்குப் பின்னரும் பல கவிஞர்கள் இருந்தனர். அவர்களும் சேர்ந்தே அக்காலத்தைப் பொற்காலம் ஆக்கினுர்கள். அவர்கள் கல்லூரிக் கல்வி பெற்றவர்கள். ஆகவே ஷேக்ஸ்பியரை எதிர்க்கும் தன்மை உள்ளவர்கள்; அவருடைய எதிர்ப்பே ஷேக்ஸ்பியருடைய மதிப்பை அதிகரித்தது. ஷேக்ஸ்பியரை விடப் புகழில் அவர்கள் ஓரளவு குறைந்தாலும், அவர்களும் இலக்கிய உலகில் குறிப்பிடத் தக்கவர்களே ஆவார்கள். அவர்களைப் பற்றி ஒன்றிரண்டு குறிப்புக்கள் கூற வேண்டுமல்லவா?

சாப்மன் [Chapman—1559—1634] என்பவன் ஹோமர் காவியங்களை மொழிபெயர்த்துப் புகழ் பெற்றவன். சில நாடகங் களையும் எழுதினுன். புஸ்ஸி [The Revenge of Bussy] பைரன் [The Tragedy of Charles, Duke of Biran] என்ற சரிதத் துன்ப நாடகங்கள் அவனுடைய நூல்கள். "எல்லாரும் மூடர்கள் [All Fools] என்பது அவனுடைய இன்ப நாடகம். அதுவும் படிக்கத் தக்கதுதான். பென் ஜான்சன் [Ben Jonson 1573—1637] நிரம்ப நாடகங்களை எழுதினுன். அவன் கல்லூரிக் கல்வி பெற்றவன். பல அங்கதக் கதைகளை எழுதினவன். அவனுடைய இன்ப நாடகங்களில் 'அவனவன் தன்மையில்' [Every Man in his Humour] என்பது முதலில் தோன்றியது. 'தத்தம் தன்மையில் தவறியோர்' [Every man out of his Humour] என்பதில் தன்னையே ஒரு பாத்திரமாக அமைத்துக் கொள்கிருன். 'இரசவேதி' [The Alchemist] 'பார்த்தலோமுயோ சந்தை' [Bartholomew

Fair] முதலிய நாடகங்கள் மிகவும் சிறந்தவை. அவனுடைய வால்போன் [Volpone] என்ற நாடகம் மிகவும் ஆற்றல் வாய்ந்தது.

இனி, பென் ஜான்சனுடைய துன்ப நாடகங்களில் சில ரோமன் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை. காட்டாக அவனுடைய சிஜானஸைக் [ Sejanus ] கூறலாம். சீசரைப் பின்பற்றி எழுதப்பட்டது. ஷேக்ஸ்பியரோ வெளிநாடு கண்டவனல்ல. உரோமர்களைப் பற்றி எழுதும் போது இலண்டன் காட்சிகளைக் காண்கிறான். ஆனால் பென் ஜான்சன் அசல் உரோமபுரியையே வருணிக்கிறான். ஆகவே ஜான்சன் ஷேக்ஸ்பியரைக் கேலி செய்கிறான். ஷேக்ஸ்பியர் சரித்திர உண்மையை ஆராயவில்லை. பென் ஜான்சன் சரித்திர உண்மையை ஆராய்ந்து எழுதினான். [எனினும்], நாடகக் கலையின் உச்சத்தை ஷேக்ஸ்பியர் எட்டியது போன்று பென் ஜான்சனால் எட்ட முடியவில்லை. மேலும், மார்ஸ்டன் ( Marston ), டெக்கர் ( Dekker ), ஹேவுட் ( Heywood ), மிடில்டன் ( Middleton ), பிளெச்சர் ( Fletcher ,) போமான் ( Beaumont ) போன்ற ஷேக்ஸ்பியர் காலக் கவிஞர்கள் நிரம்ப எழுதினார்கள். அவர்களுடைய நாடகங்கள் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் முன் மறைந்து ஒடுங்கின. மக்களும் மறக்கத் தொடங்கினார்கள். [6]

ஷேக்ஸ்பியருக்குப் பின்னர் வந்த பல கவிஞர்களும் அவனால் மறைக்கப்பட்டதில் வியப்பு இல்லை. மாசிங்கர் [ Massinger-1584—1639]—பன்னிரண்டு நாடகங்களை எழுதினான். போர்டு [John Ford 1586—1639] ஐந்து நாடகங்களை எழுதினான். ஷர்லி [Shirley-1596—1666 ] இரண்டு அரிய துன்ப நாடகங்களை எழுதினான் ; ஐந்து இன்ப நாடகங்கள் எழுதினான். இவர்களே அன்றி முதலாம் சார்லஸ் காலத்தில் இன்னும் பல சில்லறை நாடக ஆசிரியர்களும் தோன்றி நாடகங்களை எழுதினர்.

### *மறுமலர்ச்சியின் முதிர்ச்சி* (1625—1650)

ஆங்கிலப் பாமகள் பூப்பு அடைந்து முதிர்ச்சி அடையத் தொடங்கினாள். அது ஏற்பட்டது *ஸ்டுவர்டு* ( Stuart ) என்ற ஸ்காட்லாண்டு வம்சத்தார் காலத்திலே. ட்யூடர் வம்சம் எலிஜபெத்துடன் முடிவடைந்தது. எலிஜபெத் திருமணம் இன்றிக் கன்னியாகவே காலம் கழித்தாள். 1603-இல் முதலாம் ஜேம்ஸ் [ James I—1603—25 ] பட்டத்திற்கு வந்தான். அவனுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் சார்லஸ் [ Charles I—1625—49 ]

1625-இல் பட்டத்திற்கு வந்தான். அவன் ஏதேச்சதிகாரம் கொண்டு ஆளத் தொடங்கினன். நாட்டில் கலகம் ஏற்பட்டது. 1642-இல் ஏற்பட்ட கலகத்தில் மக்கள் பக்கம் வெற்றி ஏற்பட்டது. 1649-இல் சார்லஸ் சிறைப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்டான். பிறகு பதினேராண்டுகளாகக் குடியரசு ஆட்சி நிலவியது. ஆலிவர் கிராம்வெல் [ Oliver Cromwell ] மக்களின் காவலன் [ Protector ] என்ற பெயரில் ஆண்டான். ஆகவே அப்போது குடியரசும் ஏதேச்சதிகாரமும் தொலைந்து சுதந்திர தாகம் ஏற்பட்டு மக்களின் தலைவன் ஆட்சி புரிந்தான். இந்தப் புரட்சிக் காலத்தில் இயற்கையாகவே மக்களிடையே வீரம், சுதந்திரம், முதலியவைகள் தோன்றும் அல்லவா ? அவைகளுக்கேற்றபடி மனேபாவங்களும் கவிதைகளும் எழுந்தன. அக்காலத்தில்தான் மறுமலர்ச்சியின் தீவிர முதிர்ச்சி நாட்டில் ஏற்பட்டது. பல புலவர்கள் அரிய நூல்களை எழுதினர்கள். அவர்களின் இறுதியில் தலைசிறந்து நின்றவன் கவிச்சக்ரவர்த்தி எனப் புகழ் பெற்ற ' மில்டன் ' என்பவன். அவன் காலத்தில் பாமகளின் பூப்பும் முதிர்ந்து நிறைவு பெற்று விளங்கியது.

### 1. எழுத்தாளர்கள்

முன் தலைமுறையில் இருந்த ஸ்பென்ஸர் நாளில் தொடங்கிய கவிதை மலர்ச்சி மில்டனேடு முடிவடைகிறது. இடையில் வந்த பென்ஜான்ஸனும் பிறரும் தொடர்ந்து கவிதையில் நுழைந்தார்கள். அவர்களோடு கணக்கற்ற புலவர்கள் தோன்றிச் சிறு கவிதைகளையும் பெருங் கவிதைகளையும் எழுதினர்கள். பெருங் கவிதைகள் பல தோன்றின. கௌலி [ Abraham Cowley—1618—1667] முதலான பல கவிகள் அப்பெருங்கவிதைகளை எழுதியும் ஒன்ருவது வெற்றியடையவில்லை. அவைகள் படிப்பார் அற்று மறைந்தன.

பிறகு சில புலவர்கள் சற்று விளங்கக் கூடிய கவிகளை இயற்றினர்கள். அவர்களில் கேரு [ Thomas Carew – 1598?—1639? ] "என்னைக் கேட்காதே" [ Ask me no more ] என்ற கவிதை புனைந்தான். "லவ்லேசு" [ Richard Lovelace—1618 —1658 ] என்றவன் கேரு போல அரசவையில் திகழ்ந்தான். சிறையில் அடைக்கப்பட்டு இருந்த போது சிறையின் சிறுமை பற்றி ஒரு கவி எழுதினன்.

கிளிவ்லண்டு [John Cleveland—1613—58] 'ஸ்காட்லாந்து புரட்சி' [The Rebel scot] என்ற அங்கதக் கவிதையை எழுதினன். ஹெரிக் [Robert Herrick—1591—1674] என்பவன்

'ஹெஸ்பெரிடீஸ்' [Hesperides] என்ற கவிதை எழுதினுன். க்ராஷா [Richard Crashaw 1612?—49,] வான் (Henry Waughn 1622—95) மார்வெல் [Andrew Marvell 1621—78] வாலர் [Edmond Waller 1606—1687] முதலியவர்கள் தேசீயக் கவிதைகள் எழுதினுர்கள். இந்தப் புலவர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களைக் கொண்ட பலவிதமான காவியங்களை எழுதிய போதிலும் அப்போது தோன்றிய மில்டன் என்ற பெருஞ்சுடர் முன்னர் ஒளி மழுங்கிய மின்மினியைப் போல ஆனுர்கள். ஆகவே அவர்களைப் பற்றி விரிவாக எழுதாமல் மில்டனைப் பற்றி எழுதுவோம்.

## 2. கவியரசு மில்டன் (1608—1674)

முதலாம் சார்லஸ் அரசனுடைய முடி போயிற்று. அப்போது இங்கிலாந்து நாட்டுச் சமயத்துறையில் ஊழலும் மூடக் கொள்கையும் நிரம்பியிருந்தன. அவற்றை நீக்கித் தூய்மையாக்கச் சில சமய ஆர்வலர் தோன்றினர். அத்தகைய தொண்டில் ஈடுபட்ட பெரும் கவிஞன் *மில்டன்* ஆவன். மற்றவர்கள் இடையில் விலகிப் போயும் மில்டன் மட்டும் தொடர்ந்து கொள்கையைக் கடைப்பிடித்து நின்றுன். தூய்மைக் கொள்கையோடு உயர்ந்த நெஞ்சமும் கொண்டவன். அசைக்க முடியாத உணர்ச்சி, ஊக்கம், தைரியம், முதலிய அரும் பண்புகள் கொண்டவன். அக் காலத்துப் புலவர் மக்களில் தலைநிமிர்ந்த இடம்பெற்று விளங்கினுன். ஆகவே பின்வந்த வேர்ட்ஸ்வர்த்து என்ற பெரும்புலவன் மில்டனை,

*"[நின்னுளம் விண்ணின்] தாரகை போன்றது*
*தன்னந்தனியே உயர்ந்தொளி உமிழ்ந்தது"*

என்று கூறினுன்.[7] அது உண்மை. அவன் நாளில் அவன் கவிச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான்.

மில்டன் லண்டனில் பிறந்தவன். தகப்பன் இன்னிசை வல்லவன். கல்வி நிறைந்ததும் சமயத்தொண்டு செய்ய எண்ணினுன். அப்போது இருந்த ஊழல் நிலையைக் கருதி அதை விட்டுக் கவிஞன் ஆனுன்.

இளம் வயதில் "கிறிஸ்துவின் பிறப்பு" [Christ's Nativity] "உல்லாச உள்ளம்" [L'Allegro] சீரிய சிந்தனை

[Il Penseroso] என்ற கவிதைகளை எழுதினான். பின்னர் ஆர்கேடிஸ் [Arcades] கோமஸ் [Comus] என்ற பாட்டிடை வைத்த நாடகங்களை இயற்றினான். ஓரளவு வாழ்க்கை அனுபவம் பெற்ற பின்னர் இயற்றிய லிசிடஸ் [Lycidas] என்பது ஒரு நண்பன் காலமானதைக் குறித்து எழுதிய இரங்கற்பாடல் ஆகும். இதனை ஒரு இரத்தினம் என்று கூறலாம்.

இவை எல்லாம் இளமையில் இயற்றப்பட்டவை. இதற்கிடையில் அரசியல் தொல்லையில் சிக்கிக் கொண்டான். அப்போது பெரும்பாலும் சானெட் [Sonnet] என்ற சிறு கவிகளை எழுதி வந்தான். அவை மனவெழுச்சிகளைப் பிரதிபலிக்கக் கூடியவை.

மில்டன் 1652-இல் கண்களை இழந்தான். 6 ஆண்டுகளுக்குப் பின் மறு மணம் செய்து கொண்டான். அப்பெண் மணியை அவன் தன் கண்களால் எப்படிப் பார்த்திருக்கக் கூடும்? மணம் நடந்த 15 மாதங்களில் அவள் பிரசவ வேதனையில் இறந்தாள். அப்போது அவள் பிரிவைப் பற்றி கனுக் கண்டது போல் பாடுகிறான்.

நாட்டில் குடியரசு போய் மீண்டும் முடியரசு வந்தது. கி. பி. 1660-இல் இரண்டாம் சார்லஸ் பட்டத்துக்கு வந்தான். மில்டன் அரசியலை விட்டு விட்டு மீண்டும் இலக்கியத்திற்குத் திரும்பினான். அது உலகு செய்த தவம் என்று கூற வேண்டும். வயது முதிர்ந்தது; மன அமைதியும் வந்தது. அப்போது எழுதிய பெருநூல்களாவன: 1. துறக்க நீக்கம் [Paradise Lost], 2. துறக்க மீட்சி [Paradise Regained], 3 சாம்சன் ஆகநிஸ்டீஸ் [Samson Agonistes] என்பன. இவை கிறிஸ்துவ சமய சரிதங்களில் கண்ட செய்திகளின் படைப்பு, அமரர் வீழ்ச்சி, மானுட வீழ்ச்சி, சாத்தானின் வீழ்ச்சி இவைகளைத் திரட்டிக் கொண்டு பெருங்காவியங்களாக இயற்றினான். இக்காவியங்களைப் போல ஆங்கில மொழியில் முந்தியும், பிந்தியும் எந்த நூலும் இல்லை. கற்பனைகள், அணிகள், மொழியின் திறம், கம்பீரம் இவைகள் வேறு எந்த நூலிலும் இல்லை என்றால் அது மிகையல்ல.

***நூல்கள் (1) துறக்க நீக்கம்***

இளம் வயதில் இயைபுத் தொடை, மோனை முதலிய

அணிகள் நிறைந்த பாடல்கள் இயற்றிய இக் கவிஞன் வயது ஏற ஏற அவற்றை ஒழித்து இயைபுத்தொடை இல்லாத வெறும் ஆசிரியத்தில் (Blank Verse) கவிதை பாடினன். இளவயதில் காதல், மெய்ப்பாடு முதலியவைகளில் பொழுதுபோக்கிய கவிஞன் தற்போது சமய அன்பில் ஆறுதல் பெற்ருன். பைபிளை [Bible] வெகு நன்ருக ஊன்றிப் படித்தான். அவைகள் [பைபிள் வாசகங்கள்] உண்மை என்று எண்ணினன் [நம்பினன்]. ஆகவே அன்பர்கள், இவனுக்குக் கண் தெரியாத நேரத்தை [காலத்தை] மெய்ப் பொருள் மீது பாடிக்களிக்கும்படி வேண்டினர்கள். ஆனல் இரண்டு மாறுபட்ட கொள்கைகளை எவ்வாறு இணைப்பது என்ற முரண்பாடு தோன்றிற்று. அக்கால ஆலய வழிபாட்டு முறை அவனுக்குப் பிடிக்கவில்லை. அரசியல் எதேச்சதிகாரமும் பிடிக்க வில்லை. இவைகள் கூடாதென்று போராடினன். அப்படியிருக்க சுவர்க்கத்தில் மட்டும் கடவுள் பெயரால் எதேச்சதிகாரம் இருக் கலாமா? கடவுளை எதிர்த்துப் போராடிய சாத்தானின் கொள் கையில் என்ன குற்றம் உண்டு என்ற முரண் தோன்றிற்று. இந்த முரண்களிடையே தன் காவியத்தைப் பாடத் தொடங்கினன். ஒரு குருடன் பாடிய அற்புதக் காவியத்தைப் படியுங்கள். இந்தப் போராட்டங்கள் அதிலே தென்படுகின்றன. வல்லமையுள்ள தேவன் எதேச்சதிகாரிதான். வீழ்ச்சியடைந்து துன்புறுத்தப்பட்ட சாத்தான் [Satan] இரக்கம் காட்டத் தக்கவன்தான் என்ற கொள்கை மில்டன் அமைத்த பேச்சுவாதத்தில் மிளிர்கின்றது. தான் வேறு விதமாக அதாவது பைபிள் கதை உண்மை என்று நினைத்தாலும் இவனு டைய அரசியல் சுதந்திரக் கொள்கை இவனை அறியாமலேயே இவனை மருட்டி விட்டது.[8] ஆதாமும் ஏவாளும் ஆதி மக்கள், பண் பாடடையாத காட்டு மக்கள். என்ருலும், காவியத்தில் மிகுந்த நாக ரிகம் பெற்றவர்களைப் போலப் பேசுகிருர்கள். மில்டனுடைய நாடகம் எப்பேறப்பட்டது? கடவுள் எப்பேறப்பட்டவர்? அவர் ஒரு ராஜ்யத்தின் அரசனுகவே காட்டப்படுகிருர். மில்டன் சுதந்திர மகன். ஆனல் இவனே பெண் ஆணிலும் கீழ்ப்பட்டவள் என்ற கருத்துடையவனுக இருந்தான். இவனுடைய பல மணங்கள் இவனுக்குச் சிறப்பைத் தரவில்லையல்லவா?

## 2. துறக்க வெற்றி

இந்நூலில் 'இழந்த சொர்க்கம்' திரும்பப் பெறப்படுகிறது. அது பைபிளில் லூகா [St. Luke] எழுதியதை ஒட்டிக் கூறப்படு கிறது. சாத்தானல் 40 நாட்களாகத் தூண்டப்பட்டும் கிறிஸ்து

வெற்றியடைகிருர். அதுதான் இக்கவிதையின் கதை. இந்நூலைப் படித்த உடனே முதல் பகுதியைப் போல அத்தனைச் சிறப்பாக அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரியும். கம்பீரமும் தோரணையும் மிகக் குறைவு. முதல் நூலில் கண்ட சாத்தானின் கம்பீரம் இந்நூலில் குறைந்து விடுகிறது. அவனுடைய முந்திய ஆற்றலுக்குப் பதில் வஞ்சகமும், திருட்டுத்தனமும் இதில் காணப் படுகின்றன. கிறிஸ்துவும், தேவகுமாரன் என்று மரியாதைக்குக் கூப்பிடப்படுகிருரே ஒழிய உண்மையில் மனிதனுகவே காட்டப்படு கிருர். மற்றப் பண்புகளையும் சேர்த்து ஆராய்ந்தால் இப்பகுதி முதல் பகுதியைவிட மிகத் தாழ்ந்தது என்று கூற வேண்டும்.

3. *சாம்சன் சரிதை*

இந்நூல் மிகக் கம்பீரமானது. மேல்நூலில் கிரேக்கர்களை வெறுத்த மில்டன் இதில் அவர்களைத் தழுவிப் போகிருன். சோபக்லிசு [Sophocles] என்ற கிரேக்கக் கவிஞனுக்குப் பிறகு தோன்றிய அவல நாடகங்களில் இதனைச் சிறந்தது என்று கூறுவர். இந்நூல் துன்பத்தின் சிகரம் என்று கூற வேண்டும். ஒரு பெண்ணினுடைய வஞ்சனையான ஏமாற்றம் இதில் முழுவது மாகக் காட்டப்பட்டுள்ளது. மில்டனுடைய இல்லற வாழ்க்கை அத்தனை துயரம் தந்தது போலும்!

மில்டனேடு பண்டை ஆங்கில உலகம் முடிவடைகிறது. பிறகு தோன்றுவது தற்கால உலகம்.

ஆங்கிலப் பாமகளும் பூப்படைந்து வளர்ந்த பெண் ஆகிருள். இதுவரை பிறரால் தொடப்படாத அல்லது முகரப்படாத பூப்புப் பருவம் அடைந்திருக்கிருள். இனிமேல் உலக அனுபவங்கள் பல வற்றைத் துய்க்க நிற்கிருள். மில்டன் கவிதைகளில் அவளின் [அவளுடைய] இயற்கைப் பேரழகைக் காண்கிருேம்.

## குறிப்புகள்

1. 'As you Like it' நாடகத்தில் வரும் ஆடம் [Adam], 'King Lear' நாடகத்தில் வரும் கோமாளி [Fool] ஆகிய இரு பாத்திரங்களில் மட்டுமே ஷேக்ஸ் பியர் நடித்ததாக அறிகிருேம். அவர் தம் நாடகங்களின் பிற பாத்திரங் களில் நடித்ததாகக் குறிப்பெதுவும் இல்லை.

2. இந் நூலாசிரியரின் (ஆங்கிலப் பாமகள்) மனப்பாங்கு இந்திய இலக்கியப் பாங் கினை ஒட்டி அமைந்துள்ளது. சமுதாயத்துக்குத் தேவையான அறிவுரைகளையும்

நீதிகளையும் நீதிநூல் வடிவத்திலே [Ethics] தருவதே சிறந்தது என்பது இந்திய இலக்கிய வரலாறு காட்டும் போக்கு. மேலைநாடுகளில் இது மிகவும் அருகியே காணப்படுகிறது. இலக்கிய வடிவம் அல்லது இலக்கியத் தன்மை பெறாதனவற்றை அவர்கள் இலக்கியமாகவே கருதுவதில்லை. ' ஆங்கிலத்தின் மேம்பாடு ' என்று ஆசிரியர் இங்குக் குறிப்பிடுவது ஆங்கில மொழியின் ' ஆதிக்க மேம்பாடு ' என்று கொள்ளலாம். ஷேக்ஸ்பியரின் ஒப்பற்ற பெருமைக்கு இதனை ஒரு துணைக்காரணமாக மட்டுமே கொள்ளலாம்.

3. இப்பகுதி ' வெனிஸ் வர்த்தகன் ' என்னும் இன்பியல் நாடகத்தில் அமைந்துள்ளது. ஒரு நாட்டின் சட்டங்களால் பெறப்படும் நீதியைக் காட்டிலும் இறைவனின் ' நீதி 'யாகிய கருணையே மேம்பாடுடையது ; பின்பற்றத்தக்கது என்ற கருத்து இங்குப் பேசப்படுகிறது. காண்க : Merchant of Venice : IV, 1, 178—191.

4. இங்கு விதந்து சுட்டப் பெறும் பாத்திரங்கள் கீழ்க்கண்ட நாடகங்களில் தோன்றுகின்றனர்:

| | | |
|---|---|---|
| ஷைலக் | — | வெனிஸ் வர்த்தகன் |
| போர்ஷியோ | — | வெனிஸ் வர்த்தகன் |
| ஹேம்லட் | — | ஹேம்லட் |
| இயாகோ | — | ஒதெல்லோ |
| மடையன் (கோமாளி) | — | லியர் அரசன் |
| மேக்பத் இராணி | — | மேக்பெத் |
| மிராண்டா | — | ( கடும் ) புயல் |
| அந்தோணி | — | ஜூலியஸ் சீசர் |
| கிளியோபாத்ரா | — | அந்தோணியும் கிளியோபாத்ராவும். |

5. ஹேம்லட் : III, 1, 56—82

6. ஷேக்ஸ்பியரின் சமகாலத்தவராகக் குறிக்கப்பட்டுள்ள நாடகக் கவிஞர்களின் பட்டியலில் சிறந்த இரு கவிஞர்களின் பெயர்கள் விடுபட்டிருப்பது வியப்புக்குரியது. மார்லோ [Christopher Marlowe 1564—1593] , வெப்ஸ்டர் [John Webster 1580 ?—1625 ?] ஆகிய இருவரும் அவல நாடகக் கலையைப் பொறுத்தவரையில் மிக இன்றியமையாத கவிஞர்கள். ஷேக்ஸ்பியருக்கு முன்னர் நாடகத் துறையில் இலக்கியம் படைத்த மார்லோவின் சிறப்புக்களாக இரண்டைக் கூறலாம். ஒன்று வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அவல நாடகங்களைப் படைத்தது [இரண்டாம் எட்வர்ட், Edward II ]; இரண்டாவது, நாடக இலக்கியத்திற்கு ஏற்ற வண்ணம் ' Blank Verse ' என்ற யாப்பைச் செம்மைப் படுத்தியது. ஷேக்ஸ்பியரின் நாடக முன்னோடியாக இவரைக் கருதுவதும், சில ஷேக்ஸ்பியரின் நாடகங்களே மார்லோவால் இயற்றப்பட்டிருக்கலாம் எனச் சில அறிஞர்கள் யூகிப்பதும் மார்லோவின் இலக்கியச் சிறப்பைக் காட்டும். வெப்ஸ்டர் ஷேக்ஸ்பியருக்குச் சற்றுப் பின்னர்ப் புகழ் பெற்றவர். சமகாலத்தவராயினும் இவருடைய படைப்புகள் அக்காலத்தே சிறப்புடையனவாகக் கருதப்படவில்லை. எனினும் இவருடைய படைப்புக்களில், மால்பி கோமகள் [The Duchess of Malfi ], வெள்ளைப் பேய் [ The White Devil ] என்னும் இரண்டு அவல நாடகங்களும் பிற்காலத்தே பெரும் புகழ் பெற்றன. ' பழிக்குப் பழி ' என்னும் மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகங்களில் [ The Revenge Plays ]

வெப்ஸ்டரின் நாடகங்கள் ஒரு தனியிடத்தைப் பெறுவன. அவல நாடக வரலாறு அவரை நீக்கி முற்றுப் பெருது.

7. " Milton...
Thy Soul was like a Star, and dwelt apart ".
( Sonnet on Milton )

8. மில்டனுடைய சமய, அரசியல் கொள்கைகள் அவனுக்குப் பைபிளின் மீது இருந்த நம்பிக்கையை ' மருட்டி விட்டன ' என்னும் இவ் ஆசிரிய ரின் கூற்று பொருத்தமாகத் தோன்றவில்லே. சாத்தானின் பாத்திரப் படைப்பில் எதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் புரட்சிப் பண்பு அமைந்துள்ளது உண்மைதான் ; ஆனல் கடவுளின் ( ஆபிரகாம் ) ஒறுத்தலுக்கு ஆளான சாத்தான் இரக்கப்பட வேண்டியவனுகக் காட்டப்பட்டிருப்பதாக ஆசிரியர் கூறுவதும் சரியன்று. காப்பியத்தின் முதலிரண்டு காதைகளே மட்டும் படித்தால் இந்த உணர்வுதான் தோன்றும். சாத்தான் காட்டும் புரட்சித் தன்மையும் வீரமும் புகழத்தகுவன போல் மில்டன் முதலில் காட்டிப் பின் னர் இவ்வீரமும் தன்மான உணர்ச்சியும் அழுக்காறடியாகத் தோன்றிச் செருக்காக வெளிப்படுதலின் கண்டிக்கத் தக்கன என்பதுதான் மில்டனின் கருத்து. ' அறமாவது அழுக்காறின்மை ' யாகலின் அறஞ்சாராத சாத்தா னின் வீரப்பண்புகள் மறத்தின்பாற் பட்டன என்று காட்டுவதே மில்ட னின் நோக்கம். ' இழந்த சுவர்க்கம் ' என்னுமிக் காவியத்தின் பாவிகம் இதுதான். வீரம், போர்க்கலே, தலேவனுதற்குரிய ஆளுமைத் திறம், தன் குடிமக்கள் மாட்டுக் கொள்ளும் பரிவு, இன்னல்கள் இடையருது வரினும் இடுக்கண் அழியாமை போன்ற பண்புகள் தம்மளவில் மட்டுமே புகழத் தக்கன அல்ல ; இவை பயன்படுத்தப் பெறும் நோக்கமும் கொண்ட குறிக்கோளுமே இப்பண்புகளேப் போற்றத் தக்கனவாகவோ இகழத் தக்கனவாகவோ காட்டும் வழிகாட்டிகளாம்.

இவ் ஆசிரியரே கீழ்வரும் ' சாம்சன் சரிதை ' என்ற தலேப்பில், " மேல் நூலில் கிரேக்கர்களே வெறுத்த மில்டன் இதில் அவர்களேத் தழுவிப் போகிருன் " என்று கூறுமிடத்து, மில்டனின் உள்ளத்தை நன்கு உணர்ந்துள்ளார் எனத் தெரிகிறது. இடுக்கணழியாமை ( Stoicism ), போராற்றல், போர்த் தலேமை, நாவன்மை, மேலுலகை ( விதியை ) எதிர்த்து நிற்றல் ஆகியன கிரேக்க வீரத்தின் சிறப்புக் கூறுகள். இக் கூறுகளேச் சாத்தான் பெற்றிருப்பதாகக் காட்டிக் கிரேக்கப் பண்பினே இகழ்வதுதான் மில்டனின் கருத்து. இதனேக் கவிஞனே ஒன்பதாம் காதை யில் ( 13—43 ) விரிவாகக் கூறுவதைக் காணலாம். எனவே சாத்தானேக் கவர்ச்சியாகவும் பரிவுபடவும் படைத்தது கொள்கை மருட்சியினுலன்று ; தம் கொள்கையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற கவிஞனின் அருள் உள்ளத்தினுல்தான் என அறிகிருேம்.

# திருமணப் பருவம்

1650 - 1750

# V. திருமணப் பருவம்

## காதல் பருவம் (1650—1700)

ஆங்கிலப் பாமகள் பூப்பு முதிர்ந்து திருமணப் பருவம் அடைந்து நிற்கிருள். மில்டன் கவிதைகளால் பெற்ற அவளுடைய வனப்பு ஆங்கில நாடு மட்டும் அன்றி நாகரிக உலகம் முற்றும் ஒளிசெய்கின்றது. காதல் தோன்றின் அதனை ஒட்டித் திருமணம் நடைபெற வேண்டியதுதானே? திருமணம் நேர்ந்தவுடனே கற்பியல் தொடங்குமல்லவா? அந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்ததே மணப்பருவம் ஆகும். அது நடைபெற்றது ஒரு நூற்ருண்டளவில். அந்த நூற்ருண்டு பதினேழாம் நூற்ருண்டு என்க. அந்த நூற்ருண்டில் ஆங்கிலப் பாமகளின் வாழ்விற்கேற்ப நாட்டு நிலைமை என்னவாக இருந்ததென்பதையும் ஒரு சிறிது அறியலாம். அந்த முறையில் நாட்டு வரலாற்றை ஒருவாறு கூறுவோம்.

### *1. வரலாறு*

நாட்டில் தோன்றிய சமயப் புரட்சியும் குடியரசுப் புரட்சியும் ஒருவாறு ஓய்ந்தன. 1650-இல் தோன்றிய குடியரசுத் திட்டம் பத்து ஆண்டுங்கூட நிலைத்திருக்கவில்லை. ஏனெனில் ஆங்கில மக்களின் மனப்பான்மை அத்தகையது முடியரசையே விடாமல் காப்பதும் பழமையில் வேட்கை வைப்பதுமே ஆங்கிலப் பண்பின் சாரமாகும். அதை ஒட்டி ஆங்கிலப் பொதுமக்கள் முடியரசை மீண்டும் ஏற்றுத் தழுவினர்.

1660-இல் இரண்டாம் சார்லஸ் பட்டம் பெற்ருன். அது முதல் இன்றுவரை முடியரசே நிலைபெற்றிருக்கிறது. அக்கம் பக்கத்து நாடுகளில் குடியரசுக் கொள்கை எத்தனை காலமாக நின்று நிலவியபோதும், குதித்தபோதும், தலைவிரித்தாடியபோதும் ஆங்கில நாட்டில் முடியரசே நிலையாக இருந்தது. அரசன் கொடுங்கோலன் ஆகிலும், பொம்மையாகிலும் அவனைத் துரத்தி விடாமல் தக்க அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து, தக்க பண்பாட்டோடு அரசாட்சி நடத்துவதே ஆங்கிலேயரின் கொள்கை. அதனை முன்னிட்டு 1660-இல் முடியரசு ஏற்படுத்தப்பட்டது.

1660-இல் பட்டத்துக்கு வந்த சார்லஸ் ஒருவாறு மக்களின் அன்பைப் பெற்ருன். 1685-இல் வந்த இரண்டாம் ஜேம்ஸ் [James II 1685-1689] ஒரு கொடியவன். அவனை மூன்று

ஆண்டுகளுக்குள் துரத்திவிட்டு மேரி வில்லியம் [Queen Mary 1689-1694] என்ற அரசியை ஏற்றுக் கொண்டனர். இதுவும் ஒரு புரட்சிதான். ஆனால் இது சமயத்தை ஒட்டின புரட்சியேயன்றி அரசியல் மாறுதலைப் பற்றியதல்ல. 1702-இல் ஆன் [Queen Anne] என்ற அரசி பட்டத்திற்கு வந்து 1714 வரை ஆண்டாள். அவளோடு சந்ததி அற்றுப்போக ஸ்டூவர்ட்டுகள் [Stuarts] தொலைந்தனர். பிறகு ஹானோவர் (Hanaover) வம்சத்து ஜெர்மானியர் பட்டம் பெற்றார்கள். ஆகவே இந்த நூற்றாண்டில் சிறப்பாக யாதொன்றும் நடைபெறவில்லை. தங்கள் ஆங்கில சமயத்தை நிலைநிறுத்த வேண்டிய ஆசை இருந்தும், மக்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் மொழியின் வளர்ச்சி கவனிக்கப்படவில்லை. மொழி தாழ்ச்சியும் அடையவில்லை.

2. கவிஞர்கள்

ட்ரைடன் [John Dryden 1631-1700]: முடியரசு மீண்டும் தோன்றியவுடன் அதற்குரிய ஆடம்பரங்களும் வந்தன. அந்தச் சமயத்தில் சமயத் தூயிகளின் [The Puritans] வற்புறுத்தல்கள் குறைந்தன. பிரபுக்களின் உறவினர்கள் தலைநிமிர்ந்தார்கள். அவர்களில் ஒருவன் ட்ரைடன் என்ற கவி. இவன் பிரபுக்களுக்கு உறவினன். கல்லூரிப் படிப்பு பெற்றவன். இவன் செய்யுள் இயற்றத் தொடங்கவே ஆஸ்தானப் புலவனாக நியமிக்கப்பட்டான். ஆகவே அரசனுடைய ஆதரவு இவனுக்குக் கிடைத்தது. உயிரோடு இருக்கையிலேயே இவன் புகழ் பரந்தது. இவனுடைய மரணத்திற்குப் பிறகு 'வெஸ்ட் மினிஸ்டர் ஆபி' [Westminister Abbey] என்ற இடத்தில் உள்ள புலவர் சமாதி யில் புதைக்கப்பட்டான். இவனுடைய நாளிலே பழமைக்கும் புதுமைக்கும் புகைச்சல் ஏற்பட்டுக் குழப்பமே எங்கும் தோன்றியது. அந்தச் சீர்கேட்டு நிலைமையை இவனுடைய பாடல்களிலே காணலாம்.

ஆகவே இவன் உன்னத நிலைமை அடையவில்லை. மில்டனுக்குப் பின்னர் வந்ததனாலும் வேர்ட்ஸ்வர்த், ஷெல்லி என்ற குயிலினத்திற்கு முன்னர் வந்ததனாலும் இவனுடைய கவிதை மக்களைக் கவரவில்லை. ஆகவே இந்தக்காலம் உள்ளத்தை வெளியிட முடியாது வெறும் காதல் இச்சை பூண்டவர்களின் காலம் என்று கூற வேண்டும்.

இளவயதில் சின்னஞ்சிறு கவிதைகளை எழுதினான். ஆலிவர் கிராம்வெல் என்ற குடியரசின் தலைவன் இறந்தபோது எழுதிய

இவன் கையே பின்னர் சார்லஸ் மன்னன் மீதும் எழுதிற்று. இலண்டனில் பெருந்தீப் புகைந்த ஆண்டை 'அற்புத ஆண்டு' [Annus Mirabilis] என்ற கவிதையில் தீட்டியிருக்கிருன் [1666]. 'ஆப்ஸலம் அகிடோபில்' [Absalom and Achitopel] ''மானும் சிறுத்தையும்'' [The Hind and the Panther] என்பன இவனுடைய பிற கவிதைகள். உரோமானியக் கவிகளின் நூல்கள் பலவற்றையும் ஆங்கிலப்படுத்திஞன். இறக்கு மட்டும் பல கவிதைகளை எழுதிக்கொண்டேயிருந்தான். சிறு இசைக்கவிதைகளும் அங்கதங்களும் இவனுக்குப் பெருமை தந்தன. கவிதைத் தன்மையை மிகவும் ஆராய்ந்து அதனைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதி அவைகளைத் தான் போற்றியிருக்கிருன். மில்டனைப் போல இயைபுத்தொடையை [Ryhme] விட்டொழித்து விடாமல் அதனை ஏற்றுப் போற்றிஞன். ஈனீட் [Aeneid] என்ற உரோமானியக் காவியத்தை ஆங்கிலப் படுத்தியதில் அது மிகச் சிறந்த நூலாக விளங்கியது. மானுடத்தன்மை இலக்கியத்தில் மிகுதியாக இருக்க வேண்டும் என்பது அவன் கொள்கை, அதனையே தன் நூல்களில் புகுத்திஞன். ட்ரைடனேடு பல சில்லறைப் புலவர்களும் எழுதிஞர்கள். எல்லாரும் முடியரசுக் கொள்கையினரே. ஆனல் அவர்களுடைய கவிதைகள் சிறப்புடையன அல்ல.

3. அங்கதங்கள்

இக்காலத்தில் அங்கத நூல்கள் [Satires] தோன்றிப் படர்ந்தன. ட்ரைடனே சில கவிதைகளை எழுதிஞன். ஆனல் மிகச் சிறந்த அங்கதக் கவி சாமுவேல் பட்லர் [Samuel Butler 1612—1680] என்பவன். இவன் பள்ளிப் படிப்போடு நின்று விட்டான். கலாசாலை புகவில்லை. இவனுக்குச் சட்டஞானமும் உலக அனுபவமும் உண்டு. ஆகவே பிறரைக் குறைகூறும் பண்பை மிகுதியாய்க் கொண்டிருந்தான். இவனுடைய சிறந்த நூல் ஹ்யூடிப்ராஸ் [Hudibras] என்பது. அதனை மக்கள் பெரிதும் விரும்பிப் படித்தனர். இந்நூல் 'செர்வென்டிஸ்' [Cervantes 1547—1616] எழுதிய டான் குவிக்ஸ்டாட் [Don Quxote] டைப் போன்றது. ஆனல் அதைப் போல் அத்தனை சிறந்தது அல்ல— அக்காலத்து மக்களின் போக்கைக் கண்டித்து வசை புராணமாகப் பாடப்பட்ட ஒரு நூல் இது; சமுதாயச் சீர்திருத்தம் செய்ய எழுந்தது. இந்த நாளில் அரசியல் அங்கத நூல்களும் தோன்றின. மார்வெல் [Andrew Marvell] ஓல்ட்ஹாம் [John Oldham] என்ற புலவர்கள் இத்தகைய நூல்கள் எழுதிஞர்கள். உதாரணமாக 'பிரிட்டானியாவும் ரேலியும்' [Brittannia and Raleigh] 'இரண்டு குதிரைகளின் வாக்குவாதம்' [Dialogue

between Two Horses] என்ற நூல்களைச் சொல்லலாம். அங்கதத்தின் இலக்கணங்கள் என்ன என்ற தர்க்கமும் தோன்றி அதனைப் பற்றிச் சில நூல்களும் எழுதப்பட்டன.

### 4. நாடகங்கள்

இந்தக் காலத்தில் கணக்கற்ற நாடகங்கள் தோன்றின. ஆனால் அவைகள் நிலைத்து நின்றதாகத் தெரியவில்லை. அரசாங்க மாறுதல்களினால் பல பிரபுக்கள் பிரான்சு நாட்டில் அடைக்கலம் புகுந்தார்கள். காலம் மாறின பிறகு திரும்பி விடலாம் என்று எண்ணி அந்த நாட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். அவர்களில் சிலர் புலமை வாய்ந்தவர்கள். அவர்களில் ஒருவன் டாவினான்ட் [D' Avenant 1606—1668] என்பவன். அவன் 'ரோட்ஸ் முற்றுகை' [The Seige of Rhodes] என்ற நாடகத்தை எழுதினான். அந்த நாடகம் சற்றுப் புகழ் பெற்று நின்றது. அவனைப் போலவே வாலர் [Edmund Waller], டென்ஹாம் [John Denham 1615—1669] என்ற கவிஞர்களும் நாடகங்களை எழுதினார்கள். துன்ப நாடகங்களை ட்ரைடனும் அவன் மைத்துனன் ஹோவார்டும் எழுதினார்கள். இந்திய அரசி [The Indian Queen] கன்னி இராணி [The Maiden Queen] இந்திய சக்கரவர்த்தினி [The Indian Empress], ஔரங்கஜீப் [Aurengzebe] என்ற நாடகங்களை 1662 முதல் 1975க்குள் ட்ரைடன் எழுதினான். இன்ப நாடகங்களை, எதிரேஜ் [George Etherege 1634 ?—1691] விச்சர்லி [William Wycherley 1640—1716] ஷேட்வெல் [Thomas Shadwell 1642 ?—1692] ஆகியோர் எழுதியுள்ளனர். அந்நாளில் நாடகத்தின் இலக்கணங்களைப் பற்றிப் பல ஆராய்ச்சி உரைகளும் தோன்றின. அவற்றின் காரணமாகச் சிறிது மாறுதல் ஏற்பட்டது. ட்ரைடன், லீ [Nathaniel Lee 1653—92] ஆட்வே [Thomas Otway 1652—1685] என்பவர்கள் அம்மாறுதலில் ஈடுபட்டார்கள். அப்போது நிரம்ப நாடகங்கள் தோன்றின. ஆனால் அவைகள் நடிக்கப்படுகின்றனவா ? இல்லை என்றுதான் கூற வேண்டும். படிக்கப்படுகின்றனவா என்றால் அதுவும் ஐயம்தான்.

### 5. பகுத்தறிவின் எழுச்சி

இக் காலகட்டத்தின் இறுதியில் பகுத்தறிவும் தத்துவ ஆராய்ச்சியும் தோன்றின. மக்கள் தாங்கள் செய்வதும் நினைப்பதும் சரியா என்று எண்ணத் தலைப்பட்டார்கள். இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு எழுதியவர்கள் ஹேப்ஸ் [Thomas Heffes 1588—

1678] நியூட்டன் [Isaac Newton 1642—1727] என்ற அறிஞர்கள். பழைய கொள்கைகள் கண்டிக்கப்பட்டன. புதியவை எழுந்தன. சமயத்திலும் இந்தப் புரட்சி தோன்றிற்று. பாரோ [Isaac Barrow 1630—77] சௌத் [Robert South 1634—1716 தில்லட்சன் [John Tillotson 1630—94] போன்ற அறிஞர்கள் இத்துறையில் எழுதினூர்கள். குருமார்களின் நடத்தைகளும் தைரியமாகக் கண்டனம் செய்யப்பட்டன. சரித்திரத்திலும் மாறுதல்களும் ஆராய்ச்சியும் தொடர்ந்தன. க்லேரண்டன் [Clarendon 1608—1674] பர்னிட் [Gilbert Burnet 1643—1715] எவெலின் [John Evelyn 1620—1706] பெபிஸ் [Samuel Pepys 1632—1704] முதலிய அறிஞர்கள் ஆராய்ச்சி புரிந்தார்கள். சரிதம் என்ருல் கதைகளைச் சொல்வதல்ல. நிகழ்ச்சிகளின் ஓர் ஒழுங்கைக் காட்டக் கூடியது வரலாறு ஆகும். அதிலும் வளர்ச்சித் தத்துவம் உண்டு என்று காட்டப்பட்டது.

இவ்வாறு அறிஞர்கள் ஆராய்ந்து எழுதியபோது வேறு சில புலவர்கள் மிகவும் உருக்கமாக எழுதத் தொடங்கினூர்கள். அவர்களில் பன்யன் [John Bunyan 1628—1688] சிறந்தவன். அவனுடைய ரட்சணிய யாத்திரிகம்' [Pilgrim's Progress] மிகச் சிறந்த நூல். அது மக்களின் வாழ்க்கையை மிகவும் மாற்றி விட்டது. அந்நூலை அந்நாளில் மட்டும் அல்ல இந்நாளிலும் மக்கள் படித்துக் கொண்டேயிருக்கிருர்கள். மற்றும் சிலரும் இத் தன்மையான நூல்களை எழுதினூர்கள். இவைகளால் மக்களின் நினைவுகள் மாறி ஒரு புது யுகம் தோன்றத் தொடங்கியது. இந்த மாறுதல் மூன்ரும் வில்லியம் (1688—1702) காலத்தில் ஏற்பட்டது. லாக் [John Locke 1623—1704] ஹாலிபாக்ஸ் Halifax 1633—95] கான்க்ரேவ் [William Congrave 1670—1729] முதலியோர் புது யுகத்திற்கு அடிக்கல் போட்டார்கள். ஆகவே புது உடைகளை அணியப் பாமகள் முன்வந்தாள்.

## கற்புக் காலம் (1700—1750)

ஆங்கிலப் பாமகள் காதல் கொண்டு அதன் விளைவாக மணம் செய்து கொள்கிருள். மணம் ஏற்பட்டவுடனே கற்பு ஏற்படுகிறது. அப்போது கற்புக்கரசியாக விளங்குகிருள். இது தமிழ் நாட்டு முறை. இம்முறை ஆங்கில நாட்டிலும் நடைபெறுமா என்று கேட்கலாம். ஏன் நடைபெருது ? உலகம் முழுதும் மானுட இயற்கை ஒன்றே அன்ரே ? காதல் முதிர்ந்தால் மணம் நடைபெற வேண்டியதுதானே ? இடை தவிர்ந்தால் மட்டும்

நடைபெருது. இங்கே தவிரவில்லே. ஏனெனில் பண்பாடு நிறைந்வர்களிடம் தவறு நடைபெருது அல்லவா ? அப்போது காதல் முதிரும். முதிர்ந்தால் மணமும் கற்பு வாழ்வும் நடைபெறும். ஆங்கிலப் பாமகளுக்கும் அவ்வாறே நடைபெற்றது. காதல் மன எழுச்சியைத் தரலாம். ஆனல் மணமும் கற்பும் மனஎழுச்சிக்கு இடந்தராது. வெறும் நடைமுறை நிகழ்ச்சியாக இருக்கும். ஆகவேதான் இந்தப் பருவத்தில் மிகச் சிறந்த கவிதைகளேயோ, எழுச்சிகளேயோ காண முடிவதில்லே. ஆனல் மணப்பென் தன்னே அழகுபடுத்திக் கொள்ளுவாள் அல்லவா ? அதற்கு ஏற்ற அணிகளாகிய கவிதைகளேப் பெற்றிருக்கிருள். அவைகளே ஒரு சிறிது விளக்குவோமாக.

## 1. வரலாறு

நாட்டு வரலாறும் இந்த நிலேமைக்கு ஏற்றதாகச் சென்றிருக்கின்றது. மக்களுடன் போராடிய ஸ்டூவர்ட் வம்சம் தொலேந்தது. ஜெர்மனியில் ஹானேவர் நாட்டில் ஆங்கில நாட்டு விதை விழுந்திருந்தது. அதில் மூளேத்த ஜார்ஜ் என்ற கோமகனுக்கு அரசியல் திருமகள் போய்ச் சேர்ந்தாள். கோமகனுக இருந்த ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசுக் கட்டில் ஏறினுன். அவனுக்கோ தாய்மொழி ஜெர்மன் மொழி என்ருலும் இங்கிலாந்து வந்ததும் ஆங்கிலம் கற்றுக் கொண்டான். ஆங்கிலேயனுகவும் ஆகி விட்டான். அவன் மகனும் பேரனும் சுத்த ஆங்கிலேயராகி விட்டனர். ஜெர்மனியிலிருந்து வந்ததனல் அமைச்சர்களும், பாராளுமன்றமும் வலிமை பெற்ருர்கள். முடியரசு பெயருக்கு மட்டும் இருந்தது. உண்மையில் நாட்டில் குடியரசே விளங்கியது. இந்த நிலேமையில் மொழிக்கு ஏற்றம் மிகும் அல்லவா ? 1714-இல் முதலாம் ஜார்ஜ் ஆட்சிக்கு வந்தான். 1727-இல் அவன் மகன் இரண்டாம் ஜார்ஜ் பட்டம் பெற்ருன். அவன் 1760 வரை ஆண்டான். மூன்ரும் ஜார்ஜ் 1760-இல் பட்டம் பெற்றுப் பல ஆண்டுகள் ஆண்டான். இந்த முறையில் ஆங்கில அரசு வல்லமையுடன் ஆண்டது. வாணிபமும், குடியேற்றமும் அவற்ருல் மிக்க செல்வாக்கும் நிரம்பியது. ஆங்கிலப் பேரரசு இந்தியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தூர நாடுகளுக்குப் பரந்து சென்றது. மொழியும் அங்கு எல்லாம் பரந்து சென்றது.

ஆங்கிலப் பாமகள் காதல் கொண்டு திருமணம் செய்து கொண்டாள் என்று அணிவகையில் அமைத்துக் கூறினேம் அல்லவா ? யாரை மணந்து கொண்டாள் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா ?

"கற்ருேரைக் கற்ருேரே காமுறுவர்" என்றபடி கலை மகள், கலைமகளைத்தான் காமுற முடியும், கிழக்கே கிரேக்க, ரோமானியக் கலைகள் பல நூற்ருண்டுகளாகச் சிறப்புற்று விளங்கின. அக்கலைகளே ஐரோப்பாவிலிருந்த எல்லா மொழிகளுக்கும் செழிப்பு ஊட்டின. எல்லா மொழிகளும் அக்கலைகளால் வளப்பமும் கருப்பமும் உற்றன. அது போல அந்தக் கீழைக் கலையே ஆங்கில மாதுக்கும் கணவனுக அமைந்தது. 18 ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் [1700—1750] ஆங்கிலக் கவிஞர்கள் ரோம், கிரீஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று அக் கலைகளில் தேர்ந்து அவர்களுடைய பண்பாடுகளை முற்றும் கவர்ந்து கொண்டார்கள். அவ்வாறு ஆங்கிலம் இலக்கியச் செழிப்படைந்த பண்பாடே 'க்லாசிசிசம்' [ Classicism ] என்ற தனிப் பெயர் பெற்றது. நாடெங்கும் ஐம்பது ஆண்டுகள் இப்பேர்ப்பட்ட புலமைகளாலேயே நாட்டு இயக்கம் பரிணமித்தது. இவ்வாருன மாறுபாடு திருமணச் செயலினுல்தான் ஏற்பட்டது. அது எப்படி ஏற்பட்டது என்று ஒரு சிறிது விவரிப்போம்.

## 2. கவிஞர்கள்

அலெக்ஸாண்டர் போப் [ Alexander Pope 1683—1744 ] என்பவன் இலண்டனில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தான். அவனுடைய தகப்பன் ஒரு துணி தைப்பவன். அவன் கத்தோலிக்க சமயத்தான். ஆகையால் கல்லூரிப் படிப்பு கிடைக்கவில்லை. ஆகவே படிப்பதிலேயே காலம் கழித்தான். இளம் வயதிலிருந்தே கவிதைகள் எழுதத் தொடங்கினுன். அது இயற்கையாகவே அமைந்திருந்தது. 'ஒரு முடியின் இழிவு' [ The Rape of the Lock ], 'வின்ட்சர் கானல்' [ Windsor Forest ] என்ற கவிதைகளை முதலில் எழுதி வெளியிட்டான். புதுக் கவிஞர்களில் முதன்மையிடம் பெற்ருன். பிறகு, 1720-இல் இலியடையும் [ Iliad ], 1725-இல் ஆடிசியையும் [ Odyssey ] மொழிபெயர்த்தான். ஆகவே ஹோமர் காப்பியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இவன் பெயர் நாடெங்கும் பரவியது. 1733—36-இல் "மானுடன்" [ Essay on Man ] என்ற கட்டுரையை எழுதினுன். பல அங்கதங்களையும், கட்டுரைகளையும் பதிப்பித்தான். அவனுடைய புகழ் அவனை இலக்கிய உலகின் முன்னணியில் நிறுத்திற்று.

உடனே அவனை ஆதாரமாக வைத்துக் கொண்டு பல இளங்கவிகள் தோன்றினுர்கள். அவர்கள் எல்லாரும் கீழைக் கலைகளிலே பலவற்றையும் பருகி விட்டு அந்த நூல்களின்

சாரங்களையே கக்கினார்கள். நாடெங்கும் கீழ்க் கலைகள் என்ற பேச்சே இருந்தது. பல்கலைக் கழகங்களிலும் கீழைக் கலைகளுக்கு மதிப்பு தரப்பட்டது. அக்கலைகளில் தேர்ச்சி பெறுவிட்டால் பல்கலைக்கழகத்திற்குள் புகுவதற்கு அனுமதியில்லை. இந்த முறையில் போப் என்ற ஒரு கவிஞன் ஆங்கில எண்ணப் போக்கையே மாற்றி விட்டான்.

போப்பினுடைய சிறந்த நூல் ஆயர் பாட்டு [Pastorals] என்பது. அது லத்தீனில் உள்ள வர்ஜிலை [Virgil] ஒட்டி எழுதியது. அதற்கு ஆங்கில நிறம் கொடுக்கப்பட்டது. அதிலே போப்பினுடைய உன்னத உணர்ச்சி தோன்றுகிறது. அதன் செய்யுட் போக்கு மிக நளினமாக அமைந்திருக்கிறது. "விண்ட்சர் கானல்" என்பதும் அதைப் போலவே அமைந்தது. உண்மை உணர்ச்சி கொண்டதானாலும் சில குற்றங்களையும் கொண்டது. "The Rape of the Lock" என்பது ஒரு சிறு காப்பியம். அங்கதப் பொருளது; எனினும் முதலில் எழுந்த ஆர்வம் இறுதி வரை இந்நூலில் இல்லை.

போப்பின் 'ஹோமர்' மொழிபெயர்ப்பு மிகச் சிறந்தது. பல பேர் இதனை முயன்றிருக்கிறார்கள். ஆனால் போப்புதான் முழுவதையும் முடித்தான். அவனுடைய நண்பர்கள் அதனை இயற்றும்படி அவனை மிகவும் தூண்டினார்கள். மிக அரிய பெரிய வேலையை எடுத்து முடித்து விட்டான். இந்நூலை அக்காலத்து மக்கள் எல்லாரும் புகழ்ந்து விரும்பிப் படித்தார்கள். எடுத்தாண்ட சொற்கள் மிகத் தகுதி வாய்ந்தவை. நடையும் மிக உருக்கமானது. இந்நூலில் போப் ஆண்ட செய்யுள் நடை மற்ற புலவர்களால் தங்கள் செய்யுளாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

நீதி நூல்களும், அங்கதச் செய்யுள்களும் கூட போப் எழுதினான். அதில் 'மனிதன்' என்ற கட்டுரை சிறந்தது என முன்பே கூறினோம்.

### 3. ஏனையோர்

போப்புடன் வாழ்ந்த கவிஞர்களில் ஸ்விப்ட், ப்ரயர், கே, பார்னல் முதலியோர் சாதாரணமான கவிதைகளை எழுதினார்கள். அவர்களில் ஸ்விப்ட் [Jonanthan Swift 1667—1745] சற்று மேம்பட்டவன். அவன் எழுதிய கலிவர் யாத்திரை (Gulliver's Travels) என்ற உரைநூல் அவனுக்குப் பெரும் புகழைத் தந்தது. ப்ரயர் [Matthew Prior 1664—1721] சிறைக்கும் சென்

றவன். சில அற்புதச் செய்யுள்களை எழுதியுள்ளான். கே [John Gay 1685—1732] தற்கால மாணவர்களுக்கு நன்கு தெரிந்தவன். அவனுடைய Fables என்ற கட்டுக் கதைகள் மிகப் புகழ் வாய்ந்தவை. மிக லலிதமாக எழுதப்பட்டிருப்பன. அவைகள் பள்ளிப் பிள்ளைகளுக்கு எப்போதும் பாடமாக வைக்கப்படுகின்றன. பிச்சைக்காரர்களின் நாடகசாலை (Beggars' opera) என்பது மிகவும் மதிக்கப்பட்டது.

இனி பார்னல் [Thomas Parnell 1679—1718] என்ற கவி 'துறவி' (The Hermit) என்ற அழகிய கவிதை ஒன்றை எழுதினன். இது மிகுதியாகப் பயிலப்பட்டது. தற்போதும் மாணவர்கள் இதனைப் பயில்கின்றனர். இவன் போப்பின் மாணவன்.

ஸ்காட்லாண்டில் ராம்சே [Allan Ramsay 1686—1758] அந் நாட்டுக் கவிதைகளை நன்கு எழுதினன். கண்ணியமான இடையன் [Gentle Shepherd] என்னும் அவனுடைய கவிதை மிகவும் சிறந்தது. இந்தக் கவிஞர்கள் 'Classicism' என்ற பண்பினைத் தழுவிச் சில காலம் ஆங்கிலப் பாமகளுக்குச் சேவை செய்தார்கள்.

*4. எதிர்ப்புக் கட்சிகள்*

கீழைக்கலை மேம்பாடு அடைந்து புலமையைத் தழுவிக் கொண்டிருக்க அதனைக் கண்டு பொறுக்காமல் ஒரு எதிர்ப்புக் கட்சி நாட்டில் தோன்றிற்று. அதைத் தார்க்கீகக் [D istic Quarrel] கட்சி எனலாம். இவ்வெதிர்ப்பு பலவகையிலும் தோன்றிற்று. பாக்களின் போக்கைப் பற்றி மட்டுமல்ல. உரை நடை, சமயப் போக்கு, மக்கள் நடத்தை முதலியவைகளிலும் புகுந்தது. அடிசன், ஸ்விப்ட் முதலிய அறிஞர்கள் மிக மும்முரமாகக் கண்டித்தார்கள். பழைய கொள்கைகளைத் தகர்த்தெறியத் தொடங்கினார்கள்.

சமயப் போக்குகளைக் கண்டித்து எழுதினவன் ஜோஸப் பட்லர் [Joseph Butler 1692—1752] என்பவன். இவன் 'அனலஜி' [Analogy] என்ற நூலில் ஆங்கிலக் கொள்கைகளை மிகுதியாகப் பாராட்டியுள்ளான்.

அரசியல் போக்கைக் கண்டித்து எழுதியவர்கள் போலிங்ப்ரோக் [Bolingbroke] மாண்டெவில் [Mandevelle] என்போர். முடியரசு தற்காலத்திற்கு ஏற்றபடி பண்பாடு அடைய வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்தினார்கள்.

படிப்புக் கலையைப் பற்றிப் பல நூல்கள் வெளி வந்தன. பெண்ட்லி [ Bentley ], டெனிங்கு [ Denning ] என்பவர்கள் இதில் உழைத்தார்கள். ஆங்கில நாடு படிப்பில் இன்னும் முன்னேற வில்லை என்றாலும், மெய்யறிவு மிகுதியும் பரவ வேண்டும் என்று வாதித்தார்கள்.

மக்கள் நடத்தைகளைப் பற்றிப் பல நூல்கள் வெளி வந்தன. யங்கு [ Young ], ஸ்மாலட் [ Smollett ] முதலியோர் இவ்வகையில் ஈடுபட்டார்கள். மாண்டேகு என்ற பெண்மணியின் கடிதங்கள் இந்த வகையில் சிறந்தவை.

### 5. தர்க்கம்

இக்காலத்தே தர்க்கம் ஓங்கி எழுந்தது. அர்புத் நாட் [ John Arbuthnot 1667—1735 ], ஸ்விப்ட் என்ற அறிஞர்கள் இதில் பாடுபட்டவர்கள். ஸ்விப்ட் எழுதிய "கலிவர் யாத்திரைகள்" மிக உயர்ந்த அங்கத நூல். கதைப் போக்கில் இதுவரை அப்படிப்பட்ட கற்பனையை எவரும் எழுதவில்லை. இதுகாறும் மாணவர்களால் பள்ளிகளில் போற்றப்படுவது அந்த நூல் ஆகும். அவனே மக்கட் சமுதாயத்தைக் கேலி செய்யும் பொருட்டு ஆறு அங்குல உயரமுள்ள மக்களையும், 60 அடி உயரமுள்ள மக்களையும் உண்டாக்கி மானுட சமுதாயத்தில் உள்ள எல்லாக் கேடுகளையும் மிக உருக்கமாகக் கதையின் வாயிலாகக் கற்பித்து எழுதினான். அந்த நூல் மக்கள் சமுதாயத்தை மிகவும் சீர்திருத்தியது. சமயத்தையும், அரசியலையும் ஒருங்கே சீர்திருத்தவும் இவன் முயன்றான்.

### 6. நடுத்தர மக்களின் இலக்கியம்

ஆங்கிலப் பாமகள் செல்வர் மாளிகைகளிலே இதுவரை இன்புற்றிருந்தாள். நடுத்தர மக்கள், தாழ்ந்த மக்கள் இவர்களின் வீடுகளையே அறியாமலிருந்தாள். எப்போது திருமணமும், கற்பு வாய்ந்த இல்லறமும் அவளுக்கு ஏற்பட்டதோ அவள் மற்ற மக்களையும் மதிக்கத் தொடங்கினாள். நாட்டில் பல்கலைக்கழகப் படிப்பும், உயர்ந்த பள்ளிப்படிப்பும் மாணவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டினாலும் பொதுமக்களுக்கு அங்கே இடம் இருக்கவில்லை. அரசியலாரும் சரி, பிறரும் சரி படித்தே தீர வேண்டும் என்ற எண்ணம் இல்லாது இருந்தார்கள். நாட்டில் நாகரிகம் பெருகவே எல்லா மக்களும் படிக்க வேண்டுமென்ற இயக்கமும் தோன்றிற்று. கிராமந்தோறும் பள்ளிகள் திறக்கப் பட்டன. சாமானியர்களும் படிக்க முயன்றார்கள். கல்வி நிரம்ப

நிரம்பச் சாமானியர்களும் எழுதத் தொடங்கினார்கள். அவ்விதம் எழுத்தாளர்கள் தோன்றவே நாட்டில் கல்வி நிலை பெருகிற்று. அவ்வாறு தோன்றிய அறிஞர்களில் டீபோ, ஸ்டீல், அடிசன் என்பவர்கள் தம் எழுத்தின் மூலம் நாட்டின் நிலைமையை உணர்த்தியதை ஒரு சிறிது உரைப்போம்.

டீபோ [Daniel Defoe 1660—1731]

சாமானிய குடும்பத்தில் பிறந்து சிறிது கல்வி பெற்று ஐரோப்பிய நாடுகளில் சுற்றி வியாபாரம் செய்து அதில் கெட்டுத் தொலைந்து எழுத்தாளன் ஆனான். பல முறை சிறை சென்று இறுதியில் இறந்தான். அநேக நூல்களை எழுதியிருக்கிறான். பெரும்பாலும் ஆங்கில சமுதாயத்தைக் குறித்தே எழுதினான். அவற்றுள் சிறந்த நூல் ராபின்-ஸன்-க்ரூஸோ [Robinson Crusoe]. அது பள்ளிப் பிள்ளைகளுக்கு உகந்தது. அது ஆச்சரியமான கதைக் கருவைக் கொண்டிருந்தாலும் ஒரு நடந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டது. பயண நூல்களில் சிறந்தது. மனிதன் இயற்கையுடன் வாதாடி வெல்லும் பண்பை அது விளக்குகிறது. படிக்கப் படிக்கச் சுவைதரத்தக்க கதை.

ஸ்டீல் [Richard Steele 1672—1729]

ஒரு சாமானிய குடும்பத்தில் பிறந்தவன். சிறிது காலம் படையில் சேர்ந்து உழைத்த பின் எழுத்தாளன் ஆனான். அவனோடு அடிசன் ஒத்துழைத்தான். டாட்லர் [Tatler], ஸ்பெக்டேடர் [Spectator] என்ற பத்திரிக்கைகளில் ஈடுபட்டு அருமையான கட்டுரைகளை எழுதினான். கிறித்துவ வீரன் [Christian Hero] என்ற இவனுடைய நூல் மிக இன்றியமையாதது; புரட்சிகரமானது. டாட்லரில் இவனுடைய கட்டுரைகள் தெளிவாகவும், கம்பீரமாகவும் உள்ளன.

அடிசன் [Joseph Addison 1672—1719]

ஸ்டீலோடு பத்திரிக்கைத் துறையில் உழைத்தவன். இவனும் ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறான். தன் கட்டுரைகளில் [Sir-Roger de Coverly] என்ற ஒரு நாட்டிப்புறத்துக் கனவானைப் படைத்து மக்களுடைய நடத்தையை நகைச்சுவை மிளிர வருணித்திருக்கிறான். குற்றங்களின் கண்டனம் மிகவும் இலேசாக இருக்கும். ஆனால் நெஞ்சில் ஊடுருவிப் பாயும். அவனுடைய உரைநடை மிகக் கம்பீரமாக இருக்கும். இலக்கிய மாணவர்களுக்கு இவ்விரு ஆசிரியர்களும் இன்றும் விருந்து அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 7. நேர்த்தி உணர்ச்சிக் கொள்கை [Sentimentalism]

சில புலவர்கள் நேர்த்தியை [Sentiment] அடிப்படையாகக் கொண்ட உணர்ச்சியைப் போற்றி அதனையே குறிக்கோளாகக் கொண்டு எழுதத் தொடங்கினர். மானுட வாழ்க்கை அவ்விதக் கொள்கைகளிலேதான் சீர்பெறும் என்பது அவர்கள் நோக்கம். அவர்கள் வாழ்க்கைத் தத்துவம்; ஆன்ம தத்துவம் முதலிய கருத்துக்களைப் போற்றினர். பார்க்லி (Berkley), ஷாப்ட்ஸ்பெரி, லா (Law) முதலிய அறிஞர்கள் இந்தக் கொள்கை உடையவர்கள். இவர்கள் உரைநூல்களை எழுதிய அதே சமயத்தில் லேடி விஞ்சல்சி (Winchelsea), வாட்ஸ் (Watts) என்ற கவிஞர்கள் கவிதைகளை இயற்றினார்கள்.

வாட்ஸ் (Watts) குழந்தைகளுக்குத் தெய்வீகப் பாடல்கள் என்ற நூலை இயற்றினன். பிறகு சிப்பா (Cibbea) ஸ்டீல் (Steele) என்பவர்கள் இன்ப நாடகங்களையும், இந்த நோக்கத்துடனே எழுதினார்கள். இவ்வித நாடகங்கள் நிரம்ப எழுதப்பட்டன. இவை கள் மிகவும் வெற்றியடையவில்லை. ஆனால் பின்வரும் உயர்ந்த கவிதைப் போக்குக்கு மிகவும் உதவி புரிந்தன.

# வாழ்க்கைப் பருவம்

1750-1900

# VI. வாழ்க்கைப் பருவம்

## ( 1750—1900 )

ஆங்கிலப் பாமகள் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்துகிருள். இல்லற வாழ்க்கை எப்போதும் இரண்டு பகுதிகளாக அமையும் அல்லவா ? முதலில் இன்ப நுகர்ச்சி பெரிதும் ஏற்படும். இடையில் சிற்சில ஊடல்களும் ஏற்படலாம். அவ்வூடல்களால் நுகரும் இன்பம் பெரிதும் மேம் படும். ஊடல் இல்லாத வாழ்க்கை விரைவில் தெவிட்டி விடும் அல்லவா ? சில ஆண்டு மிக மகிழ்ச்சியோடு வாழ்க்கை செல் லும். பிறகு அம் மகிழ்ச்சி சாதாரணமாகி விடும். தலைவி வாழ்க் கையின் யதார்த்த பயன்களை அனுபவிப்பாள். அப்போது வாழ்க்கை உலக மயமாகி விடும். சில தொல்லைகளும் வரலாம். கற்பனைகள் குறைந்து யதார்த்த நிலை புலப்படும். இந்த இரண்டு நிலைகளையும் ஆங்கிலப் பாமகளும் அனுபவித்தாள்.

### இன்பப் பருவம் (1750—1825)

இனி இன்பம் துய்த்த பருவத்தை முதலில் கூறுகிறோம். இது நீண்டதொரு காலம். சுமார் 75 ஆண்டுகள் இன்பம் துய்த்தாள். அப்போது பலவித இன்பங்கள் ஏற்பட்டன. அவை களைப் பலவிதமான கவிஞர்கள் தோன்றி ஊட்டினர்கள். அவை களை முற்றும் அறிவதற்கு அக்கால நிலைமையையும் அறிய வேண்டும்.

### வரலாறு

இங்கிலாந்தில் மூன்ரும் ஜார்ஜ் 1760-இல் பட்டத்திற்கு வந்து நீண்ட காலம் ஆண்டான். 60 ஆண்டுகள் அவனது ஆட்சி நீடித்தது. நாட்டில் பலவித மாறுதல்கள் ஏற்பட்டன. அவனுக்குப் பிறகு நான்காம் ஜார்ஜ மூன்ரும் வில்லியம் இருவ ரும் சிறிது காலமே ஆண்டார்கள், இம் மூவரசர் காலமும் இன்பம் துய்த்த பருவமாகும். இடையில் வந்த துன்பங்களோ ஊடல் என்ற வகையில் சேர்த்து விடலாம். மிகச் சிறந்து பெருகி வந்த ஆங்கிலப் பேரரசிற்கு 1783-இல் ஒரு இழுக்கு ஏற்பட்டது.

அமெரிக்கா என்ற பெருமகள் தாயோடு கலகமிட்டுக்

கொண்டு பிரிந்து போனுள். அவள் சென்ற பின்னர் தாயோ மற்ற நாடுகளை ஏற்கத் தொடங்கிளுள் 1789-இல் அயலில் இருந்த பிரஞ்சு நாட்டில் பெரும் புரட்சி ஏற்பட்டது. முடியரசு கவிழ்ந்தது. ஜனநாயகம் தோன்றியது. ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக் கலகக்காரருக்கும் போர் மூண்டது. நாடெங்கும் ஒரே குழப்பமாக இருந்தது. பிரஞ்சு ஜனுதிபதி நெப்போலியன் ஏதேச் சதிகாரம் பூண்டு எல்லா மக்களையும் துன்புறுத்தினுன். ஆங்கி லேயரும் ஜெர்மானியரும் அவனை எதிர்த்தார்கள். இறுதியில் வாட்டர் லூ போரில் நெப்போலியன் தோல்வியுற்ருன். ஆங்கி லேயர் பெரும் புகழ் பெற்ருர்கள். இந்தப் பெருஞ் செயல்களி ஞல் ஆங்கிலப் பாமகளும் பெரும் சிறப்புற்ருள். இந்த வர லாற்றைப் பின்பற்றி அவளுடைய இன்பப் பொலிவை இனி எழுதுவோம்.

### (i) அறிவுப் படலம் (1750—1770)

தொடக்கத்தில் சில ஆண்டுகள் பழமையோடு புதுமை விரவிய காலம். இந்தக் காலத்தின் பண்புகளை நிறுத்தி அளவிடல் மிக அரிது. பல திறப்பட்ட மன எழுச்சிகள் தலை விரித்தாடிய காலம். அந்த நிலைமையில் தலைசிறந்து விளங்கிய அறிஞன் ஜான்சன் என்பவன் [Samuel Johnson 1709—1784] அவன் ஒரு புத்தக கடைக்காரன் வயிற்றில் பிறந்து தொடக்கத்தில் பள்ளி ஆசிரியஞகி அத் தொழிலை விட்டு எழுத்தாளஞக விளங்கினுன். முதலில் பத்திரிக்கைகளுக்குக் கட்டுரை வழங்கி, பிறகு அரசியல் மன்றச் செய்திகளைச் செய்தித்தாள்களுக்கு அனுப்பி வந்தான். வறுமை மிகுதியால் சில நூல்களை எழுதிப் பொருள் சம்பாதித் தான். அப்போது எழுதியவை லண்டன் [London] மானுட விழைவு [The vanity of Human wishes] போன்ற கவிதைகள். மற்றும் சில தாள்களுக்கு எழுதிப் பிறகு அகராதி எழுதினுன். அதுவே அவனது பெருமையை வெளிப்படுத்தியது. ராசிலஸ் Rasselas] என்ற கதையும் எழுதினுன். அப்போது அவனுக்கு அரசியல் உபகாரச் சம்பளம் கிடைத்தது. அவனுடன் உறைந்த பாஸ்வல் [James Boswell 1740—95] என்ற நண்பன் அவனுடைய வாழ்க்கை நூலை [The Life of Samuel Johnson] எழுதினுன். அது உலகிலேயே சிறந்த வாழ்க்கை நூலாக விளங்குகிறது. அக்கால எழுத்தாளர்களிடையே இவன் ஒரு மன்னன் போல விளங்கினுன். அவனுடைய கடைசி நூல் [கவிஞர்கள் சரிதம் [The Lives of the Poets] என்பது இவனே முதன்முதலாக அகராதியும், கவி சரிதமும் இயற்றியவன் எனலாம்.

ஜான்சன் தன் எழுத்தால் பெருமையடையவில்லை[1]. ஆனால் அவனுடைய குணத்தினால் பெருமை அடைந்தான். அவனைச் சுற்றியிருந்தவர்கள் அவனை ஒரு உதாரணமாகப் பாவித்துக் கொண்டாடினார்கள். அவனாலேயே நடுத்தர மக்கள் பெருமை அடைந்தார்கள். முதலில் பாடல்களை எழுதினான். ஆனால் அவைகள் போதுமான மதிப்புப் பெறவில்லை. ஆகவே அவைகளை விட்டுக் கட்டுரைகளை எழுதினான். ரேம்லர் [Rambler] என்ற தாளிகை அவனை உயர்த்திற்று. அவனுடைய அகராதி ஒரு நூற்றாண்டு வரை மக்கள் கையில் இருந்தது அது வெறும் அகராதி மட்டும் அல்ல. இலக்கியக் களஞ்சியமாகவும் அது இருந்தது. சொற்களுக்கு முடிவான பொருள் அது கூறிற்று. 'ராசிலஸ்' என்ற புதின நூல் சிறந்த படிப்பினையைத் தருகிறது. அது ஒரு கீழ்நாட்டுக் கதை. அவனுடைய புலவர் சரிதங்கள் அற்புதமான ஆராய்ச்சி சித்திரங்கள் இலக்கிய உலகில் மட்டும் ஜான்சன் வாழவில்லை. சமூகப் போக்கிலும் ஒழுக்க நெறியிலும் அவன் மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தான். ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டுமென்று அவன் தன் வாழ்க்கை மூல மாய்க் காட்டினான். அவனை நடுநாயகமாக வைத்துக் கொண்டு சில புலவர்கள் அறிவுரைகளை எழுதினார்கள். அவர்களை நல் வழிக்குச் சேர்ப்பித்தவன் ஜான்சனே ஆவான்.

## அறிவுக் கவிதைகள்

கீழைக்கலை ஆர்வம் மெல்ல மெல்லக் குறையத் தொடங் கிற்று. மனோநிலைக்கவிதை (Sentimental Poetry) வளரத் தொடங்கிற்று. இவ்விதக் கவிதைகள் நாட்டுமக்கள் உள்ளத் திலிருந்து தோன்றின. இக்காலக் கவிஞர்கள் உள்ளத்திலிருந்து எழுந்த உணர்ச்சிகளைக் கவிதைகளாக வெளியிட் டார்கள். *கரும்பு*, [The Sugarcane] *ஏகாந்த நினைவுகள்* [Ode on Solitude] முதலிய கவிதைகள்[2] எழுந்தன. இயற்கையைப் போற்றித் தாம்சன், டயர் முதலிய கவிஞர்கள் பாடினார்கள். அவர்களில் தாம்சன் [James Thomson 1700—1748] பருவங்கள் என்பதைப் பற்றி எழுதினான். உலக அனுபவம் நிறைந்த செய்திகளை அதில் தழுவியிருக்கிறான். டயர் [John Dyer 1700—1758] தாம்சனின் எதிரி எனலாம் 'ரோமன் அழிவு' [The Ruins of Rome] தோல் [The Fleece] என்பன அவனது நூல்கள். இரவு, மரணம் என்ற செய்திகளைப் பற்றிப் பல கவிதைகள் தோன்றின. மக்களின் மனோநிலை அந்த எண்ணங்களை நினைப் பூட்டின. யங்கு [Edward Young 1683—1765] புகழில் அவா,

வாழ்க்கை, சாவு. சாவின்மை என்பனவற்றையும், இரவு, நினைவுகள் என்பதைப் பற்றியும் எழுதினான். காலின்ஸ் [William Collins 1721—1759] மூடக் கொள்கைகளைப் பற்றி எழுதினான். இரக்கம், சுதந்திரம், என்பவற்றைக் குறித்து எழுதிய பாடல்கள் பல விதமாகவும், நீதிநெறியை அடிப்படையாகக் கொண்டவை யாகவும் முறையே உள்ளன.

தாமஸ் கிரே [Thomas Gray 1716—1771] ஒரு சிறந்த **கவி.** அழுத்தந்திருத்தமாக எழுதுகிறவன். அவனுடைய இரங்கற் பாடல் (Elegy) உலகப் புகழ் பெற்றது. அதனைப் படியாத மாணவன் இல்லை. அக்கவிதை எல்லா வகையிலும் சிறப்புற வேண்டி எட்டு ஆண்டுகள் திரும்பத் திரும்பத் திருத்திப் பின்பே வெளியிட்டான். அப்பாடலை கீழ்வருமாறு தமிழ்ப் படுத்தலாம்.

## இரங்கற்பா

*பகல்கழிய மணியோசை பகர்கிறதே துயர்விடுத்துப்*
*படர்வெளியில் நிரையினமும் பையவொலித் தேகிறதே*
*நுகத்தடியோன் அகம்வேட்டு நொந்தனனாய் நடக்கின்றான்*
*நுண்ணுலக நள்ளிருட்டு நின்றதுவால் என்றனக்கே.*

*நிலப்பரப்பின் தோற்றமுமே நீங்கிற்றே சிற்றொளியில்*
*நீள்விசும்பும் நி(ச்)சப்தமுமே நிறைந்துளதால் எவ்விடமும்*
*குலவண்டு பணியின்றி குவலயத்தே பறக்குமொலி*
*குடிநிலத்துப் பட்டியிலே கிண்கிணியின் ஒலி தவிர.*

*கொடிபடரும் ஆங்கமர்ந்த கோபுரத்தின் உச்சியிலே*
*[குறைகழறும்] தனி ஆந்தை குளிர்மதிக்கே குறையிடுமோல்*
*அடிபடரும் மக்களினம் அருகணைந்து தந்தனிமை*
*அரும்பழமை அரசியலை அலைக்கழிக்கும் வகைகூறி.*

*கரடுகளாய்க் கவைவிட்ட காட்டகத்து மரநிழலில்*
*கவிழ்ந்திருக்கும் புற்றரையின் குவியலிலே பற்பலவாய்*
*முரடுகளாய் முன்வாழ்ந்த மூதூரின் தாதையர்கள்*
*[தாழிகளாம்] குழிகளிடைத் தூங்குவரால் எஞ்ஞான்றும்.*

*மணம்கூர்ந்த வைகறையின் மருத் தென்றல் அதன்விளியும்*
*வைக்கோலின் கூரையின்வாய் வான்குருவி கத்துதலும்*
*குணம்கூர்ந்த கோழியுடன் கொம்பிஞெலி இவையெல்லாம்*
*கொஞ்சமுமே அன்னாரை அமளியினின் றெழுப்பாதால்.*

அன்னூர்க்கோ எஞ்ஞான்றும் அடுப்பெரிக்க முட்டாரால்
அகத்தினுமே மணக்கிழத்தி அரும்பணியும் தொடராளால்
அன்னாரை வரவேற்க அருஞ்சிறார்கள் முந்தோடி
அருமுத்தம் பெறவேண்டி அவர்மேலே தொத்தாரால்.

பயிரெல்லாம் கொடுவாளில் பட்டுவிடும் அன்னூரால்
படுநிலமும் அவர்ஏரில் படிந்துவிடும் எப்பொழுதும்
உயிரெல்லாம் மகிழ்வுறவே உழுதேரை முட்டுவரால்
உறுதியிலே அடிக்கவுமே உறுமடவி பொடியாமாம்.

பயன் கொடுக்கும் உழைப்பிணையும் பாராட்டும் மணவிழவும்
பருங்குறிக்கோள் இலாவகையில் பேராசை ஏய்க்காதே
இயன் கொடுக்கும் ஏழ்மையின் ஈறில்லாச் செயல்களையே
இடாம்பீகம் புன்சிரிப்போ டிகழ்தலுமே வேண்டுவதில்.

கனந்தங்கும் தற்புகழும் கண்கவரும் இடாம்பீகம்
களிவனப்பும் பொருட்செல்வம் காண்பிக்கும் இவையெல்லாம்
இனந்தங்கும் இறுதியினை எதிர்நோக்கி இருப்பாரே
இரும்புகழின் விழியும்தான் இடுகுழிக்குச் சென்றிடுமால்.

நெடுஞ்சுவரும் சித்திரமும் நிறைந்தெழுந்த சமாதியிலே
நேர்ந்துளதாம் கல்லெழுத்தோ நிகழ்புகழை எடுத்துரைக்கா
இடுங்குழிமேல் நினைப்பூட்ட யாதொன்றும் இழைத்திலரேல்
இவருடைய பிழையன்றோ எனநினைப்பீர் செல்வர்காள்!

அருஞ்சமாதிக் கட்டடமும் அழகியதோர் உருச்சிலையும்
அடக்கியுறும் உயிரினையே அழைத்துவரும் எனலாமோ?
தரும்தானோ கௌரவமும் தண்சாம்பற் குயிரையுமே
தற்புகழ்ச்சி எமன்காதில் ஏறிடுமோ தப்புவிக்க?

[ஒருகாலத் திருந்தாருள் ஓங்குபுகழ் விளங்கியுயர்]
உண்மையருள் சுடர்திகழ்ந்த உள்ளமுடைப் பெரியோனும்;
இருமுலகின் செங்கோலை ஏற்கவல்ல கைகளுடன்
[ஏழிசையும்] திருத்தமுற இயங்கவல கரங்களுமே.

இனவெழுச்சி ஞானமுடை எண்ணறிய நூலேனும்
இயற்காலப் பொருளேனும் இவர்மாட்டுப் புகவில்லை
மனவெழுச்சிக் கண்ணியத்தை மடக்கிவிடும் நல்குரவு
மலிந்தோடும் உயிர்எழுச்சி மங்காமல் உறைந்திடுமால்.

கடலடியிற் புகவொண்ணு கடுங்குகையில் நிறைந்துளவாம்
 கணக்கில்லாத் தெளிநீர்மைக் களங்கமிலா மணிவகைகள்;
மடலடியிற் பூவினமும் மணமெவரும் [முகரவொண்ணு]
 மறைவினிலே விரயமுமாய் மணல்வெளியே உதித்திடுமால்.

சிற்றூரில் [சிறப்பெய்தித்] திடவுறுதி நெஞ்சினனுய்ச்
 சிறுநிலத்தின் இராக்கதனை சிறப்புடனே எதிர்த்திடுவான்
கற்றூர்ந்தும் [புகழ்சிறவா மில்டனுமே] அமர்ந்திருப்பான்
 [கலகமிலா கிராம்வெல்லும் குருதியிணைச் சிந்தானுல்.]

அரசியலார் அவைக்களமோ அகமகிழ ஆளுவதும்
 அகத் துன்பத்தொடுபாழும் ஆர்நிலைமை வெறுத்ததுமே
சரசமுமாய் செழுநிலத்தே சகலபொருள் தருதலுமே
 சரிதத்தைப் புதிதாக்கல் சார்ந்திலதாம் இவர் விதியில்.

நற்குணமும் மேலடைய துற்குணமும் கீழடைய
 நாற்றிசையும் புகழுவன நாடாதே இருந்தனவால்;
துர்க்கொலையால் அரசியலைத் தொலைத்திடவே தாமடைதல்
 தொல்லுலகில் இரக்கமதைத் தொலைத்தலுடன் தாமறியார்.

மனதறிந்த மெய்விளக்கும் வேதனைகள் மறைத்திடலும்
 மலியுக்தி நாணம்அதன் மல்குகுறி அமிழ்த்திடலும்
தனதறிவின் கவித்திறத்தால் தற்பெருமை உல்லாசம்
 தகுவோர்க்கு முகமனிடல் தாமெதுவும் அறியாரால்.

குறிக்கோள்ஒன் றில்லாத குழுவினர்தாம் கண்ணியமில்
 குடிவாழ்வின் சச்சரவைக் கொஞ்சமுமே விட்டகலார்
நெறிகோட்டுக் குளிர்வாய்ந்த நேர்வாழ்க்கைச் சார்பினிலே
 நெறிதனிலே அரவமிலா நீள்வாழ்வு கொள்பவரால்.

எனினும்இந் நீத்தோரை எவரேனும் அவமதிக்கா
 வண்ணமுமே சிற்சின்னம் ஏழ்மையிலே வைத்துள்ளார்;
இனியதிலே புன்கவியோ டிழிச்சிற்பம் வரைந்துளதால்
 எதிர்வருவோர் நெஞ்சிலொரு இரக்கமொழி பெறுவதுவால்.

கல்லாத கவியொருவன் கண்டெழுதும் பேர்ஆயுள்
 கடைநாளில் நல்லிசையும் கவிச்சுவையும் தருவனவாம்
சொல்லாரும் புனிதமுமாம் சுருதிமொழி வரைந்திருத்தல்
 சுயநாட்டுப் பெரியாற்குத் துறக்கவழி கற்பிக்கும்.

எதிர்நோக்கி உளமிசையும் எவனொருவன் கீழ்ப்படிந்தே
எழின்மகிழ்ச்சி உறுநாளின் இயல்பினையே விட்டவனாய்க்
கதிர்நோக்கி முன்சென்ற காலமதை நினையானாய்
கவிபேசா மறதியின்பால் கட்டுண்ட தென்கொல்லோ.

போமுயிர்தான் பின்னின்ற பொன்னெஞ்சு தானொன்றில்
புனிதமுமாம கண்துளிகள் பூத்துவர எதிர்நோக்கும்
ஈமமதன் உள்நின்றும் இயற்கையொலி கூவிடுமேல்
எம்நீறு தனிலேயும் எரிகனலும் உயிர்த்திடுமால்.

மதித்திரா இறந்தவரை மதித்திட்டே இப்பாக்கள்
மகிமையிலாச் சரிதமதை மலிந்திடலும் கேட்பீரேல்
விதித்திருந்து ஒருவேளை வினைவிட்டுத் தனியிருப்பின்
விளித்திடுவான் ஓரன்பன் விதிதனையே விரிப்பவனாய்.

நறைதிரண்ட குடியண்ணல் நனிஇவையே சொல்லுவனால்
நனிநாமும் அவன்றனையே நாள்உதிக்கக் கண்டிருப்போம்
உறைபனியை உளத்தெரிந்தே உதித்துவரும் ஞாயிற்றை
உயர்நிலத்தே கண்காண ஊக்கமுடன் செல்வானே.

அதோகாணும் தொன்மையதாய் அடிவேர்கள் விசித்திரமாய்
அமைந்திருக்க அசைவாடும் அம்மரத்தின் அடியினிலே
எதோகாணும் குறிப்பிலா இயல்பினிலே, பகல்வேளை
உடல்நீட்டிக் கொப்பளிக்கும் ஓடையினை நோக்கிடுவான்

நிந்தனைபோய் முறுவலிக்கும் நீள்அடவி அருகினிலே
நினைவேகும் வழியெல்லாம் பிதற்றிட்டுத் திரிந்திடுவான்
சிந்தனையால் பித்துற்றோ சீரழிந்தோ துயருற்றோ
சிற்காதல் அலைப்பட்டோ சிரசிரங்க அலைந்திடுவான்.

ஓரொருநாள் வழக்கம்போல் உயர்நிலத்தும் அவனோதான்
உலந்திட்ட மரத்தருகும் புற்றரையும் காண்கிலனால்
வேறொருநாள் வந்ததுவே, வீழருவி அருகிலுமே
வெறுந்தரையும் அடவியிலும் அவன்தன்னைக் காண்கிலனே.

துயருற்ற கோலத்தே தூக்கிச்செல் பாடையிலே
துறந்தஉயிர் அவனையுமே தொல்மயானப் பாங்கரிலே
அயிருற்று மெதுவாக அணுகுவதைக் கண்டனனால்
அருகுற்றுக் கன்மீதே அமைத்துளதை ஓதுவையே.

## சமாதிக் கல்வெட்டு

நிலமடைந்தைத் தொடைமீது நிலைத்துளதே அவன் தலையும்
நிலைபுகழின் அதிட்டத்தின் நிலைஅறியான் வாலிபனும்
கலைமடந்தை ஏழையனைக் கண்டறியாள் துக்கமுமே
கணந்தோறும் அவள்நெஞ்சைக் கடித்திழுத்துக்
கொண்டழுத்தும்.

ஈகையெனில் அவன்தனதே இன்னுயிரும் மெய்ம்மையதே
ஈசனுமே அருளிலனல் இவன்றனக்கு உதவியுமே
ஈகையிலே வறியோர்க்கு கண்ணீரொன்று குப்புவனல்
ஈசனிடம் அவன்வேட்ட இனியநட்புப் பெற்றனனல்.

அவன்திறத்தை, இனிமேலும் அறியஇச்சை உறவேண்டாம்
அஞ்சுமவர் நிலையினிலே அவன்குறைகள் சொல வேண்டாம்
அவன்தந்தை அருள்ஈசன் அருள்மார்பை உற்றவனய்
அருமந்த நம்பிக்கை அமைந்துளனய் அமர்ந்துள்ளான்.

இவன் காலத்தே வாழ்ந்த கோல்ட்ஸ்மித் [Oliver Goldsmith 1728-1774] பல அறிவார்ந்த கட்டுரைகளையும் கதைகளையும் எழுதினன். அவைகளில் 'விக்கர் ஆப் வேக்பீல்ட்' [Vicar of Wakefield] மிகச் சிறந்த கதை. இனிய ஒழுகிசை நடையில் மனதைக் கவரும் செய்திகளை எவரும் மகிழும்படி எழுதியிருக்கிருன். சாதாரண இல்லறச் செய்திகளை இத்தனை நளினமாக எவரும் எழுத முடியாது. கோல்ட்ஸ்மித்தினுடைய பாடல்களும் மிக இனிமையானவை. இவன் எழுதிய 'பாழடைந்த ஊர்' [The Deserted Village] 'வழி நடப்போன்' [ The Traveller ]' வெற்றி அடையக் குனிகிருள்' [She stoops to Conquer] என்பன மிகப் புகழ் பெற்றவை. இவைகளை மாணவர்கள் படித்துப்படித்து மகிழ்வார்கள். கோல்ட் ஸ்மித் ஒரு சிறந்த கலைஞன். ஆனல் மிக ஏழை. எப்போதும் வறுமையால் பீடிக்கப்பட்டு வாழ்வில் மிகவும் சங்கடப்பட்டான். பொறுக்க ஒண்ணுத வறுமையிலேயே உயிர் துறந்தான். அவனைப்போல் அழகான கருத்துக்களைச் சுவையான கதைகளாகவும், நாடகங்களாகவும் எழுதக்கூடிய எழுத்தாளர் மிகச் சிலரே எனலாம்.

யதார்த்தவாத முறையைப் பின்பற்றிப் பல நவீனங்கள் எழுதப்பட்டன. பீல்டிங்கு [Henry Fielding 1707-1754] ஸ்மாலெட் [Smollette 1721-1771] என்போர் புதுக் கதைகளை எழுதினர்கள். அரசியல் நூல்களை வில்க்கீஸ் [John Wilkies 1727-1797] சாதம் [ Chatham 1708-1778 ] முதலியோர் எழுதினர். இக்காலத்தில்

நாடகம் சீர் குலையத் தொடங்கிற்று. புது நாடகங்களைக் கவனிப்பார் இல்லை. பகுத்தறிவு எண்ணங்களை ஹ்யூம் [David Hume 1711-1776] ராபெட்ஸன் [William Robertson 1721-1793] வால்போல் [Horace Walpole 1717—1797] முதலியோர் எழுதினுர்கள். அவர்களோடு ஒரு இலக்கியப் பகுதி முடிந்தது.

## (ii) *மனேபாவ எழுச்சி* (1770—1800)

இந்த முப்பது வருடக் காலத்தில் ஒரு முக்கிய மாறுதல் விளைந்தது. சாமானிய மக்கள் தாங்களும் மனிதர்கள் என்று உணரத் தொடங்கினுர்கள். இவ்வுணர்ச்சி ஐரோப்பாவில் மிகுதியாக இருந்தது. செல்வந்தர்களும், பிரபுக்களும் சாமானிய மக்களை மனிதர்களாகவே பாவிக்கவில்லை. மிருகங்களைப்போல் நடத்தி வந்தார்கள். சாமானிய மக்களிலும் கற்றவர் தொகை பெருகத் தொடங்கியது. அவர்களும் தங்கள் எண்ணங்களை எழுதத் தொடங்கினுர்கள். அவர்கள் ஊக்கம் பிறந்து எல்லா இடங்களிலும் முன்னேற்றம் பெற வேண்டிப் பிரசாரம் நடைபெற்றது. இங்கிலாந்திலும் இந்த இயக்கம் ஓரளவு தோன்றிற்று. மேக்பர்சன் [James Macperson 1736—1796] ஸ்காத்லாண்டிலும், பெர்சி [Thomas Percy 1729-1811] இங்கிலாந்திலும் பண்டைப் பாமரக் கவிதைகளைத் தொகுக்கவும் எழுதவும் தொடங்கினர். சாட்டர்டன் [Chatterton 1752-1770] என்ற வாலிபன் வறுமையிலே பிறந்து வறுமையால் மிக்க துன்புற்றுத் தற்கொலை புரிந்து கொண்டான். பண்டைக் கவிதைகளைப் போலப் புனைபெயர் இட்டுக் கொண்டு கணக்கற்ற கவிதைகளை எழுதினுன். பாவம், அவனைக் காப்பாற்றுவோர் இன்றித் தன் உயிரை மாய்த்துக் கொண்டான் அவனுடைய [பாமரக் கவிதைகளே யன்றி] தற்காலக் கவிதைகளும் மிகவும் சுவையானவை.

அப்போது நாட்டில் சமயச் சீர்திருத்தம் தோன்றியது. வெஸ்லி [John Wesley 1703-1791] என்பவரால் மெதடிஸம் [Methodism] என்ற சமயக் கொள்கைகள் தோற்றுவிக்கப்பட்டன. மிகுந்த ஊக்கத்துடன் உபதேசங்கள் செய்து புதுச் சங்கங்களை ஏற்படுத்தித் தன் கொள்கைகளை நிறுவினுன். புதுக் கொள்கைகளுக்கு எதிராகவும் பலர் தோன்றி எழுதினுர்கள். முரண்பட்ட இந்தப் பிரசங்கங்களினுல் நாட்டு மக்களின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டன. இந்தக் கிளர்ச்சியின் காரணமாகக் கூபர் [William Cowper 1731-1800] என்ற கவிஞர் முன்னணிக்கு வந்தார். அவர் புதுமுறைக் கவிதைகளை எழுதினுர். அவற்றுள் ,உழைப்பு' [The Task] என்ற கவிதை மிகச் சிறந்தது.

மக்களிடையே புதிதாக எழுந்த உணர்ச்சிகளை அது மேலும் தீவிரப்படுத்தியது.

அப்போது பகுத்தறிவை ஒட்டியும் சில நூல்கள் எழுதப் பட்டன. டக்கர், பர்க், ஆடம் ஸ்மித், டங்க், ரிப்பன் முதலியோர் வெகு மும்முரமாக எழுதினார்கள். பர்க் [Edmund Burke 1729-1797] ஒரு சிறந்த பிரசங்கி [சொற்பொழிவாளன்] குற்றம் செய்த ஆங்கிலத் தலைவர்களை நடுங்கச் செய்தான். அவனுடைய பேச்சுகள் குற்ற வாளிகளைத் திணறச் செய்தன. கண்ணோட்டமின்றிக் கடிந்து பேசி நாட்டில் குற்றம் களைவான்.

ஆடம் ஸ்மித் [Adam Smith 1723-1790] என்ற அறிஞர் அரசியல் பொருளாதாரம் முதலிய கொள்கைகளை வெகு தெளிவாக வற்புறுத்தினார். கிப்பன் [Edward Gibbon 1737-1794] என்ற சரித்திர ஆசிரியர் ரோம் சாம்ராச்சியத்தின் அழிவுச் சரித்திரத்தைத் தக்க சான்றுகளோடு எழுதினார். அவருடைய நடை, கருத்து ஆகியவை மிக மேன்மையானவை.

பெண்மணிகளும் புதுக்கவிதைகளை இயற்றினார்கள். நாட்டு நடத்தைகளை அனுசரித்து இக்கதைகள் புனையப்பட்டன. அவர் களில் பர்னி [Fanny Burney 1753-1840], ஜேன் ஆஸ்டின் [Jane Austen 1775-1817] என்ற இருவரும் பல அரிய புதினங்களை இயற்றினார்கள்.

மெய்ம்மையறிவு கொண்ட கவிதைகள் எழுதப்பட்டன. கிராப் [George Crabbe 1754—1832] ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவன். சுதந்திரம், கிராமம், ஊர், செய்யுட் கதை முத லியவைகளை இயற்றினன்.

### (iii) பிரஞ்சுப் புரட்சி

பூகம்பம் வெடித்தாற் போல் பிரஞ்சு நாட்டில் புரட்சி தோன்றிற்று. அரசன் பலவீனன். அமைச்சர்களும், பிரபுக்களும் மக்களைக் கொள்ளையடித்துப் பிழைத்தார்கள். பொது மக்கள் வறுமையாலும், இலஞ்சப் பேயாலும் அலைக்கப்பட்டுப் பொறுமை இழந்தார்கள். விசாரணையின்றிக் கணக்கற்ற பேர் சிறையில் வாடி வதங்கினார்கள். அப்போது கிளம்பியது பெரும் புயல். 1789-இல் மக்கள் கிளம்பி அரசைக் கைப்பற்றி அரச வம்சத் தினரைக் கொன்று பிரபுக்களைக் கில்லட்டின் என்ற எந்திரத்தால் கொன்று குவித்தார்கள்.

குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குத் தூபம் போட்டார்கள் பல அறிஞர்களும், எழுத்தாளர்களும். சுதந்திரத்தைப் பற்றிக் கணக்கற்ற நூல்கள் எழுதப்பட்டன. 1789 முதல் 1815 வரை ஐரோப்பிய இலக்கியம் முழுதும் பிரஞ்சு நாட்டுப் போக்கில் ஈடுபட்டது. புரட்சிக் கொள்கைகள் சுற்று நாடுகளில் புகுந்து பரவின.

ஆங்கில நாட்டின் நிலை வேறு விதம். 1730 முதற் கொண்டே இலக்கியம், தத்துவம், அரசியல் அறிவு போன்ற துறைகளைப் பற்றிய எண்ணங்கள் பிரஞ்சிலிருந்து வந்ததை விட ஆங்கில நாடுதான் பிரான்சுக்குப் பெரிதும் வழங்கி வந்தது புரட்சியாலே இந்த நிலை ஒருவாறு மாறிற்று. பல அறிஞர்கள் அரசியலைப் பற்றி எழுதினார்கள். அவர்களில் பெயின் [ Thomas Paine 1737—1809 ] பகுத்தறிவைப் பற்றி எழுதினன். மேரி உல்ஸ்டன் கிராப்ட் [ Mary Wollstone Craft 1759—1797 ] பெண்கள் உரிமைகளைப் பற்றி எழுதினள். பர்க் புரட்சிக்கெதிராக எழுதினன். இவன்தான் இந்தியாவில் கவர்னல் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது குற்றம் சாட்டியவன். பாக்ஸ் [ Charles James Fox 1749—1806 ] என்றவன் மற்றெரு பேச்சாளி இவர்களால் ஆங்கில அரசியல் கொள்கைகளில் பல மாறுதல்களும் முன்னேற்றக் கருத்துக்களும் தோன்றின.

## (iv) மனோபாவத் தொடக்கம்

மன எழுச்சியால் உந்தப்பட்ட அரிய கவிதைகள் இப்போது தோன்றத் தொடங்கின. மேசன், பியட்டி, பௌல்ஸ், பர்ன்ஸ் என்ற புலவர்கள் கவிதைகளை எழுதினர்கள். அவர்களில் பர்ன்ஸ் என்ற கவிஞன் [ Robert Burns 1759—1796 ] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவன். தன் கவிதைகளைப் பெரும்பாலும் தன்நாட்டு உச்சரிப்பிலேயே எழுதினன். நாட்டு மக்களுடைய கொச்சைப் பேச்சில் எளிய கொள்கைகளை வெகு உருக்கமாக எழுதினன். வெகு தீவிரமாக அவன் மக்கள் நெஞ்சைக் கவர்ந்தான்.

வில்லியம் ப்ளேக் [ William Blake 1757—1827 ] அருமையான கொள்கைகளைக் கனவு கண்டு எழுதினவன். செய்யுள் நடை வெகு இலகுவாக இருக்கும்.

## (v) பேரின்ப உள்ளத்து நிலை (1800 - 1825)

### 1. பெருங் கவிஞர் முதல்தலைமுறை

பிறநாட்டுக் கவிதைகளை வியந்து தம் நாட்டில் அவற்றைப் [ அம்முறையைப் ] புகுத்தின காலம் போய் விட்டது. நமக்கும் ஊக்கமும், உள்ளப் பெருக்கமும் உண்டு என்று கவிஞர்கள் கண்டனர். அந்த உள்ளப் பெருக்கினால் பேரின்பம் அடைந்தார்கள். அந்த இன்பப் பொலிவைக் கொண்டு ஆங்கிலப் பாமகட்குக் கவிதையாகிய மலர்மாலைகள் அணிவித்தார்கள். அவ்வாறு அணிவித்து அத்திருமகளின் செவ்விய அழகை நுகர்ந்த புலவர்கள் 19 ஆவது நூற்றாண்டில் இறுதி முப்பது ஆண்டுகளில் தோன்றினார்கள். அவர்களுடைய தோற்றம் இளவேனிற் காலத்து இரவில் நீல நிற வானில் ஒளி பெருக்கி மின்னிக் களிப்புச் செய்யும் சிரியஸ் முதலிய தாரகைகளைப் போன்ற சோதிப்பாக்களை உமிழ்ந்தார்கள். அவர்களிலே சிறந்த கவிஞர்களாக வேட்ஸ்வர்த்து, கோல்ரிஜ், சதி, ஸ்காட் என்ற நாவலர்களைக் கூறலாம். இவர்கள் தங்கள் புனிதக் கவிதைகளால் ஆங்கில மொழியையே பல படிகள் உயர்த்தி விட்டார்கள். அவர்களை எந்த இலக்கிய மாணவனும் மறக்கவே மாட்டான்.

இந்த முப்பது ஆண்டுகளின் முதற்பகுதியில் ஆங்கில அரசி வெற்றி மேல் வெற்றி பெற்றாள். முதலில் கடற்படையிலும், பிறகு நிலப்படையிலும் பிரஞ்சுப் பேரரசன் நெப்போலியனை முறியடைத்தாள். பிரமிக்கத் தக்க சாகசச் செயல்களைச் செய்து நெப்போலியனை வென்று சிறை பிடித்து நெடுந் தொலைவில் ஒரு தீவில் வைத்தாள். பிறகு அடுத்த பதினைந்து ஆண்டுகள் மிக முதிய அரசனான நான்காம் ஜார்ஜ், மூன்றாம் வில்லியம் ஆகியோர் பட்டத்திற்கு வந்து ஆண் சந்ததியின்றி மறைந்தார்கள். அவர்கள் வெறும் பொம்மையரசர்களாக இருந்தார்கள். ஆனால் உண்மையாகத் திறமையுடன் ஆட்சி புரிந்தோர் ஆங்கில அரசியல் நிபுணர்களான அமைச்சர்களே. அந்த நிலைமையிலே கவிதைகள் மேம்பாடு பெற்றது உரிய செயலே ஆகும் அல்லவா ?

#### வேட்ஸ்வர்த்து [William Wordsworth 1770—1850)

வடமேற்கு ஏரிப் பிராந்தியத்தில் சாமானியக் குடும்பத்தில் பிறந்தவேட்ஸ்வர்த்து இளமையில் வருந்திப் பிறகு கேம்பிரிட்ஜில் படித்து ஐரோப்பாவில் பல மாதங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து

விட்டு இங்கிலாந்து திரும்பினன். அங்குப் புரட்சிச் செயல்களைக் கண்டு மனம் புழுங்கி ஒரு பிரஞ்சுப் பெண்ணின் காதலில் அகப் பட்டு மனம் வெறுத்துத் துயருற்றிருந்தான். பிறகு தனது உடன் பிறந்தாளாகிய டோரதியால் [Dorothy Wordsworth 1771—1855] தேற்றப்பட்டுக் கவிதைகள் எழுதத் தொடங்கினன். இயற்கையையே தனது கற்பனைக் கதைகளாகக் கொண்டு கவிதை களைத் தீட்டினன். சின்னஞ்சிறு கவிதைகளும், சின்னஞ்சிறு வாழ்க்கைச் சித்திரங்களுமே அவனைக் கவிஞர் தலைவனுக்கின. Lyrical Ballads, The Prelude, The Recluse என்பன அவனு டைய பெருங்கவிதைகள். நாட்டுப்புறத்து வாழ்க்கைகளைக் கிரா மக் குயில்கள் போல் பாடியிருக்கிருன். சின்னஞ்சிறு குழந்தை களைப் பற்றிய பாடல்கள் மிகச் சிறந்தவை. அவைகளைப் படித் தால் மழலைச் சொல் போல இருக்கும். ''நாங்கள் எழுவர், ''பிரியமுள்ள ஆட்டுக்குட்டி'' 'லூசி கிரே' முதலியவைகளை அறியாத மாணவர்கள் உண்டோ? குழவியுள்ளத்தை நன்கு அறிந்து பாராட்டுவதில் வேட்ஸ்வர்த்தைப் போன்ற காவிய ஓவியர்கள் உலகில் இல்லை; நாட்டுப்புறத்துப் படங்களைத் தீட் டும் சிற்பிகளில் அவனை மீறினவர்கள் எவரும் இல்லை என்ருல் அது மிகையன்று.

## கோல்ட்ரிஜ் [Samuel Taylor Coleridge 1772—1834)

தென் மேற்கே டெவன்ஷையரில் பிறந்து கல்லூரிப் படிப்புப் பெற்ருன். சதியினுடைய [Southey] நட்பால் புரட்சிக் கொள்கை பூண்டான். நரம்புக் கோளாறு காரணமாக அபினி சாப்பிடப் பழகிக் கொண்டான். வேர்ட்ஸ்வர்த்தைப் போல் சின்னஞ்சிறு கவிதைகள் இயற்றுவதில் வல்லவன். 'பண்டை நாவிகன் பாட்டு' [Rhyme of the Ancient Mariner] அவனுடைய சிறந்த கவிதை. கிரிஸ்டபெல் [Christabel] மற்ருெரு அரிய கவிதை. குப்ளாகான் [Kubla Khan] என்பது கனவில் எழுதிய கவின் மிக்க கவிதை. உள்ளத்திலிருந்து எழும் உணர்ச்சிகள் இவன் நூல்களில் பிரதிபலிக்கின்றன. உணர்ச்சிக்கேற்ற சொற் களும் ஓசையும் இவன் கவிதைகளில் உண்டு. படிக்கப் படிக்கப் பழம் போல உள்ளத்தை கவர்ந்து இனிப்பூட்டும் தன்மை இவன் கவிதைகளுக்கு உண்டு. அவன் செர்மனி நாட்டில் தங்கிச் செர்மாலிய தத்துவங்களைப் பயின்ருன். அதனல் இவனுடைய கட்டுரைகளும் கவிதைகளும் செர்மானியத் தத்துவக் கோட் பாடுகளைத் தழுவியனவாக இருக்கக் காண்கிருேம்.

**சதி** [Robert Southey 1774—1843]

பிரிஸ்டலில் பிறந்தவன் ; ஆக்ஸ்போர்ட் படிப்பு பெற்றவன். இளவயதிலேயே கோல்ட்ரிஜ்ஜோடு பழகிப் புரட்சிக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டான். அவனுடைய முதல் நாடகம் 'வாட் டெயிலர்' [Wat Taylor] பிறகு காவிய அமைப்பில் ஜோன் அப்-ஆர்க் [Joan of Arc] என்பதை இயற்றினன். மணமான பிறகு போர்ச்சுகல் சென்ருன். 1813-இல் ஆஸ்தானப் புலவனுன். 'நெல்சன் வாழ்க்கை [Life of Nelson] பிரஜில் சரிதம் [History of Brazil] முதலியன எழுதினன். கவிதைகளும் நிரம்ப எழுதினன். மற்றவை சாதாரணமானவை.

**ஸ்காட்** [Sir Walter Scott 1771 – 1832]

நாட்டன்பு மிகுந்தவன். ஜெர்மன் படித்து, 'கதே' பாடல்களை மொழி பெயர்த்தான். ஸ்காட்லந்தின் நாட்டுப்புறக் கதைகளையும் மற்ற கவிதைகளையும் தொகுத்து அச்சேற்றினன். 'Lady of the Lake, Marmian', 'Rakeby' முதலிய பல கவிதைகளை எழுதினன். 'நாட்டுப்பற்றைப் பற்றிய அவன் பாடல் உலகப் பிரசித்தி பெற்றது. அதனைக் கீழ்வருமாறு தமிழ்ப்படுத்தலாம்.

**நாட்டுப் பற்று**

*அன்னிய நாடுகள் அலைந்து திரிந்தபின்*
*தன்னுடை நாட்டினில் தாளை வைக்கையில்*
*இதயம் பொங்கி கொழுந்து விட்டெழும்ப*
*"இதுவென் நாடு, ஈதென் தாய்நாடு"*
*எனவே தன்னுள் இயம்பா திருக்கும்*
*உணர்விலா மனிதனும் உளனே உலகினில் ?*
*அத்திறத் தவனும் அகப்படில் குறிப்பாய்*
*எத்திறப் புலவனும் இமிஅவற் புகழான் ;*
*பேரும் பட்டமும் பெரிதாய்ப் பெற்றும்,*
*ஆளும் பொருளும் அளவின்றிப் படைத்தும்*
*பெயரும் பட்டமும் பிரிதும் பயன்தரா*
*சுயநலத் தாழ்ந்ததைச் சுமந்திடும் நீசன்.*
*உயிருடன் உளநாள் உயர்இசை இகழ்ந்தே*
*அயற்பிணம் [போலுயிர் இருந்தும்அலைவான்]*
*இறக்கையில் இரண்டாம் இறப்பும் இறந்து*
*துறப்பான் மண்ணில் தூசியோ டொன்ருய்*
*அழுவா ரின்றி அணைவார் இன்றிப்*
*புழுதியே அடைவான், புகழ்வார் இன்றியே.*

## 2. பெருங் கவிஞர்கள் 2-ஆம் தலைமுறை

இது போன்ற பாடல்களைத் தவிர புதினங்களும் பல எழுதினான். இவனுடைய கவிதைகள் பெரும்பாலும் நாட்டுச் சரிதங்களை ஒட்டியே எழுதப்பட்டன. வருணனைகளில் மிகச் சிறந்தவன். எத்தனை எழுதியும் பணமுடையினால் வாழ்க்கையில் மிகவும் வருந்தினான். இவனுடைய புதினங்கள் இவன் கவிதைகளை விடச் சிறந்தன. இவனைப் புதினங்களின் தந்தை என்று சொல்ல வேண்டும். 'ஐவன் ஹோ' [Ivanhoe] 'டாலிஸ்மன் [Talisman] என்பன மிகவும் புகழ் பெற்றவை. இவன் காலத்தில் வேறு சிலரும் நவீனங்களை எழுதினார்கள்.

ஏரிப் பிராந்தியத்தை நடுநாயகமாகக் கொண்டு கவிதைகளைப் பொழிந்த முதல்தலை முறைக் கவிஞர் குழுவிலிருந்து சிறிது மாறிய நோக்கத்துடன் இரண்டாம் தலைமுறைக் கவிஞர்கள் தோன்றினார்கள். பைரன், கீட்ஸ், ஷெல்லி என்ற இம்மூன்று சிறந்த கவிஞர்களும் இத்தாலியை நடுநாயகமாகக் கொண்டு கவிதைகளைப் பொழிந்தார்கள். அவர்களுடைய புரட்சிக்கொள்கைகள் அவர்களை ஆங்கில நாட்டில் இருக்கவிடவில்லை. மூவரும் இளவயதிலேயே உலகை நீத்துச் சென்றார்கள். நெடுநாள் வாழ்ந்திருந்தால் அவர்கள் இத்தாலியின் நடுப்பகுதியை மற்றொரு ஏரிப் பிராந்தியமாக்கிவிட்டிருப்பார்கள்.

அவர்கள் ஒருங்கு சேர்ந்து ஒரு தனிக்குறிக்கோள் வைத்துக் கொண்டு ஒரு பொது இயக்கத்தை உண்டு பண்ணினார்கள் அல்லர். ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கினார்கள் ; என்றாலும் அவர்களுடைய உள்ளப்பெருக்கு ஒரே ஒரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அக்காலத்தில் அரசியற் புரட்சிகள் தோன்றியது போல மக்கள் எண்ணங்களிலும் புரட்சி தோன்றியது. சமுதாய வாழ்க்கையிலும் பழைய கொள்கைகளை குறித்துப் புரட்சி எண்ணங்கள் தோன்றின. அப்புரட்சிக் கொள்கைகளை மிக உருக்கமாகவும் ஆற்றலோடும் பிரதிபலித்தவர்கள் மேலே சொன்ன மூன்றுகவிஞர்களே. அவர்களுடைய கவிதைகள் எக்காலத்தும் அழியாத கவிதை மொழிகளால் போர்த்தப் பெற்றிருக்கின்றன.

### பைரன் [Lord Byron 1788—1824]

ஒரு பிரபுவின் மகனாகப் பிறந்து பிரபுப் பட்டமும் சொத்தும் பெற்றவன். கேம்பிரிட்ஜில் படித்தவன். இளம் வயதிலேயே

பாடல்கள் எழுதிப் பத்திரிக்கைகளால் கண்டிக்கப் பெற்று அவர் களை மறுத்துக் கண்டனம் எழுதினவன். பல இடங்களிலும் சுற்றி வந்து அதன் பலனாக ''சைல்டு ஹெரல்'டின் யாத்திரை'' [Childe Harold] என்ற அரிய காவியம் ஒன்றை எழுதினான். அவனுடைய இல்லற வாழ்க்கை இனிமை தரவில்லை. இன்னல்கள் பல உற்று இறுதியில் நாட்டை விட்டே வெளியேறினான். இத்தாலியில் குடியிருந்தான். 'மான்பிரட்' [Manfred] பெப்போ [Beppo] 'டான்ஜுவான் [Don Juan] என்ற பெருங்கவிதைகளை எழுதினான். பிறகு கிரீக் விடுதலைக்காகப் பாடுபட்டான். அக் காலத்துச் சமூகத்தையும் சமுதாய சட்டத்தையும் அவன் ஒத்துக் கொள்ளவில்லை. அவனுடைய நடைமுறை மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவனுடைய கவிதைகளைப் படித்தால் எவரும் வியக்க வேண்டி வரும். மனிதன் எல்லா வகைகளிலும் சுதந்திரம் உள்ளவனாக இருக்க வேண்டும் என்று அவன் உள்ளம் மன்றாடியது. ஆனால் நடைமுறை உலகம் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஷெல்லி [P. B. Shelly 1792—1822]

நாட்டுப் புறத்துப் பிரபு ஒருவன் குடும்பத்தில் பிறந்தவன். பட்டம் பெறவில்லை, ஆக்ஸ்போர்டில் படித்தான். சமயத்தைக் கண்டித்து எழுதினான். அதனால் கழகத்திலிருந்து வெளியேற்றப் பட்டான். காட்வின் [Godwin] தத்துவத்தை அனுசரித்து மணம் செய்து கொண்டு பல நூல்களை எழுதினான். 'மாப் அரசி' [Queen Mob] என்ற கவிதை எழுதினான். மனைவியைத் துறந்து காட்வின் மகளைக் கூட்டிக் கொண்டு வெளிநாடுகள் சென்றான். 'அலாஸ்டர்' [Alaster] என்ற கவிதை எழுதினான். குடும்பத்தில் தொந்தரவுகளும் வழக்குகளும் ஏற்பட்டன; இத்தாலிக்கு ஓடி விட்டான். சென்சை [The Cenci] பிராமிதியூஸ் விடுதலை [Prometheus Unbound] 'அடோனெய்ஸ்' [Adonais] முதலிய நல்ல கவிதைகளையும் நாடகங்களையும் எழுதினான். படகில் செல்லும் போது அது கவிழ்ந்து கடலில் இறந்தான்.

இவனும் சமுதாயச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத ஒரு புரட்சிக்கவி. அறிவினைப் போற்றி வாழ்ந்த ஒரு கவிதை மணி. பெரிய கவிதைகளை விட அவனுடைய சிறுகவிதைகளே அவனுக்கு ஏற்றம் தந்தன. 'வானம்பாடி' [To a Sky Lark] 'ஒழிமண்டைஸ்'

[Ozymandias] 'காதல் தத்துவம்' [Love's Philosophy] முதலிய கவிதைகள் மிகச் சிறந்தவை. எந்த மாணவனும் இவைகளைப் படியாதிரான். இவற்றுள் ஷெல்லியின் 'காதல் தத்துவத்தின்' தமிழாக்கம் பின்வருமாறு :

### காதல் தத்துவம்

*அருவிநீரும் ஆற்றில் [விழும்]*
*ஆறும்கடலோ டணைந்துவிழும்*
*ஆகாயத்தின் அசைவுகளோ*
*அகத்தின் உணர்ச்சிக் கணுகிவரும்.*

*இருநிலத்தின் பொருள்எதுவும்*
*இருப்பதில்லை தனந்தனியே*
*இறைவன்விதியா லெவ்வெதுவும்*
*இணையும்அதுதான் எமக்கிலையே.*

*மருவிப்புரளும் அலைகளெல்லாம்*
*மலைமால்விண்ணை முத்தமிடும்*
*மலர்கள்தம்தம் இனத்துடனே*
*மருவாதிருந்தால் மணந்தருமோ?*

*அருணன்கதிரோ அவனிதொடும்*
*அம்புலிநகையோ அலையிழுக்கும்*
*அன்பேமுத்தம் அருளாயேல்*
*அறைந்த [இவற்றின் பொருளென்னே?]*

**கீட்ஸ்** [John Keats 1795–1821]

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். 15ஆம் ஆண்டில் அனாதை ஆனான். முதலில் வைத்தியத்துக்காகப் படித்துப் பிறகு கவிதைகள் எழுதத் தொடங்கினான். 'எண்டிமியான்' [Endymion] 'இஸபெல்லா' [Isabella] 'ஹைபீரியன்' [Hyperion] முதலிய நெடுங்கவிதைகள் எழுதினான். மிகவும் இளம்வயதிலேயே மிகச் சிறந்த இக்கவிதைகளைப் பொழிந்தான். ஆனால் விரைவில் உடல் நலங்குன்றி உருக்கி நோயால் இறந்தான். அவனைச் சுற்றிலுமிருந்த சூழல் அத்தனை சிறந்ததல்ல. நோயும் வறுமையும் அவனை வாட்டின. ஆனால் சலியா நெஞ்சுரத்தைப் பெற்றுக் கவிதைகளைப் பொழிந்தான். கீட்ஸ் உணர்ச்சிப் பிழம்பான ஒரு கவிஞன்.

அரிய மனக் கோட்டைகளைக் கட்டி அவைகளில் வாழ்ந்தவன். ஹைபீரியான் என்னும் இவனுடைய காவியம் மில்டனின் துறக்க நீக்கம் போன்றது. மிகத் தைரியமாகவும் புரட்சிகரமாகவும் கருத்துக்களை வெளியிட்டான். சிறப்பாக அவனுடைய சிறு கவிதைகள் [Odes] அவனுக்கு மிகுந்த ஏற்றத்தைத் தந்தன. அக்காலத்தில் பிற கவிஞர்களைக் காட்டிலும் மிகச் சிறந்த தன்னுணர்ச்சிக் கவிஞன் என்று மக்கள் கருதும்போது திடீரென்று இறந்து விட்டான். தன் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு இன்னும் சிறிது காலம் அவன் பிழைத்திருந்தால் ஆங்கிலப் பாமகளின் கவிதை வளம் இன்னும் பெருகியிருக்கும். பேரின்பக் கவிஞர்களுள் இம் மூவரே இளம் தலைமுறையின் மிகப் பெரிய புலவர் மணிகளாகப் போற்றத் தக்கவர் எனலாம்.

## தொடர்ந்த கவிதைகள்

பெரிய தாரகைகள் ஒளிசெய்தால் அவைகளைச் சுற்றிச் சிறிய விண்மீன்கள் இருந்தால்தானே வானின் பரப்புப் பெருமை காட்டும்? பெரிய தாரகைகள் மூன்று நான்கு மட்டும் இருந்து மற்ற பகுதிகள் ஒரே இருட்டாக இருந்தால் அந்த ஆகாயவீதி முழுதும் நன்கு விளக்கமுறுது. அல்லவா? அதுபோல் இலக்கிய உலகத்திலும் பைரன், ஷெல்லி, கீட்ஸ் மட்டும் இருந்து மறைந்தால் அந்தக் கவிதைவானும் தனிச் சிறப்பைப் பெற இயலாது. ஆனால் அவைகளைச் சுற்றி அவர்களுடைய கொள்கைகளைத் தத்தம் கவிதைகளால் பல கவிஞர்கள் தோன்றிப் பரப்பியதன்றி அவர்களுக்குப் பிறகும் தொடர்ந்து எழுதினார்கள். அவர்களே அந்தச் சீரிய கொள்கைகளுக்கு ஆதரவு காட்டினவர்கள் ஆனார்கள். அவர்களில் கவிதை உலகில் சிறந்த புலவர்கள் — ரோஜர்மூர், காம்ப், லீஹண்ட், ஹஸ்லிட், டீகுவென்ஸி, லேண்டர் முதலியோர் ஆவர். இவர்களாலே உள்ளம் பெருகி இன்ப இயக்கம் நாட்டில் ஒளி பெற்றது. இவர்கள் எழுதிய கவிதைகள் கணக்கற்றன. கருத்துக்களும் மிகச் சிறப்பானவை பெரிய தாரகைகள் இல்லாமல் இருந்தால் இவர்களுடைய கவிதைகளும் முதற் படியில் நின்றிருக்கும் என்று அறிய வேண்டும்.

## ரோஜர்ஸ் [Samuel Rogers 1763—1855]

இவன் ஒரு தனவந்தன்; கவிஞர்களை ஆதரித்தவன்.

தரனும் கவிஞனுகவும் இருந்தான். இப்படிப்பட்ட ஆட்கள் இந்தியாவில் மட்டும் கண்டிருக்கிறோம். ஆங்கில நாட்டில் இவன் ஒருவனே இருந்தான். அவன் எழுதிய நூல்கள் "நினைவின் இன்பங்கள்" [Pleasures of memory] மனித வாழ்க்கை [Human life] முதலியன.

தாமஸ்மூர் [Thomas Moore 1779—1852]

அனக்ரியான் [Anacreon] என்ற கீழைக் காவியத்தை முதலில் மொழி பெயர்த்தவன். 'லாலா ருக்' [Lalla Rookh] என்பது அவனுடைய சிறந்த கவிதை. 'டெல்லி பாதுசாவின் மகள்' நடு ஆசியா இளவரசனைத் திருமணம் செய்து கொள்ள அனுப்பப்படுகிருள். ஒரு முதிய அமைச்சனுடைய மேற்பார்வையின் கீழ் அவள் போகும்போது ஒரு அழகிய வாலிபன் அவளுக்குப் பொழுது போக்குவதற்காக இன்னிசை விருந்து அளித்துக் கொண்டு செல்கிருன். அவன் பல கீழ்நாட்டுக் கவிதைகளும் பாடுகிருன். இன்னிசையைக் கேட்ட இளவரசி அவன்மேல் காதல் கொள்கிருள். இறுதியில் மணமகன் ஊருக்குச் சென்று திருமணம் நடக்கையில் அவள் பிரமித்துப் போகிருள். மாறுவேடத்தில் அவள் நெஞ்சைக் கவர்ந்த அவனே பிறகு உண்மை நாயகன் ஆகிருன். இதுதான் இக்கதை. வெகு அழகாக மூர் இதனைக் கற்பித்துப் பாடியுள்ளார்.

லேண்டர் [Savage Lander 1775—1864]

பிறரோடு நட்புப் பூணுமல் தன்னந்தனியே இருந்த கவிஞன். குடியரசுக் கொள்கைகளின் நிமித்தம் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். 'கௌண்ட் ஜூலியன்' [Count Julian] முதலிய கவிதைகளை எழுதினுன். "கற்பனை உரையாடல்கள்" [Imaginary Conversations] என்ற நூல் மிக நுட்பமான அறிவு நூல். இவன் எழுதிய "இபிஜெனையாவும் ஆகமெம்நானும்" [Iphegenia and Agamemnon] என்ற கவிதை மிகப் புகழ் பெற்றது.

பீகாக் [Thomas Love Peacock 1785—1866]

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து தானே படித்துக் கிழக்கிந்தியக் கம்பனியில் வேலை பார்த்து வந்தான். பல கவிதைகளும்

கதைகளும் எழுதினன். இவன் ஷெல்லியை விரும்பி ஏரிக் கவிஞர்களை (Lake Poets) வெறுத்தான். இவனுடைய செய்யுட்களில் சில நல்ல பண்புகள் உண்டு.

## *கட்டுரைப் புலவர்கள்*

அறிவுரைகளைக் கட்டுரைகளில் அமைத்து மொழியை மேம்படுத்திய அறிஞர்கள் பல இக்காலத்தில் தோன்றினர்கள். அவர்களில் லாம் [Charles Lamb 1775—1834] சிறந்தவன். எலியா கட்டுரைகள் [ Essays of Elia] மிகச் சிறந்தன. மனிதனுடைய மனம் எவ்வாறு எல்லாம் ஓடும் என்பதை இக்கட்டுரைகள் நன்கு காட்டுகின்றன. புன்னகை எவ்வாறு உண்டு என்றும் இதில் காணலாம். ஷேக்ஸ்பியர் கதைகளை மிக இனிய உரைநடையில் எழுதினவன் இவனே. லீஹண்ட் [Leigh Hunt 1784—1859] என்பவன் மற்ருெரு கட்டுரையாளன். கவிதைகளும் எழுதியிருக்கிருன். அஞ்சாத நெஞ்சன். அதற்காகச் சிறையும் சென்ருன். டீசிவுன்சி அபினி உண்பவன். அதைப் பற்றியே ஒரு நூல் எழுதினன்.

இவர்கள் எல்லாம் கட்டுரைகளே எழுதினலும் அவைகள் கவிதைகளுக்குச் சமமான நடை இனிமையினையும் கருத்துக் கருவூலங்களையும் கொண்டவை. இவற்றில் இழையும் மனோவேகம் மிக்க சுவையுடையதாக இருக்கும். இவர்கள் எல்லாம் இளைய தாரகைகள். இவர்களிலே பெரிய தாரகைகளின் சாயல் ஒளியைப் பெற்று இருந்தவர்களும் உண்டு.

## இல்வாழ்க்கை (1825—1900)

இன்ப வாழ்க்கை வாழ்ந்த ஆங்கிலப் பாமகள் இனி இல்வாழ்க்கை நடத்துகிருள். இல்லறத்தில் மிகுந்த ஆடம்பரம் கிடையாது. தன்னுடைய குடும்பம் நன்ருக நடப்பதற்கு வேண்டிய பொருளீட்டம் பெற்றுச் சிக்கனம் எய்தி வாழ்க்கையைப் பிறர் மதிக்க நடப்பாள். அதற்கு இன்றியமையாத நாட்டங்களைக் கொள்வாள். வீண் ஆடம்பரங்களைக் கழித்து தூய நல்லுடைகள் உடுத்தி நற்குணங்களே தன் அமைச்சர்களாகக் கொண்டு இல்லத்தரசியாக வாழ்வாள். அப்போது அவள் பெறும் மதிப்பு மிகவும் பெருமையோடு விளங்கும். குடும்பக் கௌரவத்தையே சிறந்த குறிக்கோளாக அவள் எண்ணிக் குடும்பத்தை நடத்துவதால் அவளுடைய மதிப்பு உலகெங்கும் பரவுகிறது.

இவ்விதச் சிறந்த குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற தாக அக்காலத்து நாட்டு நிலைமையும் இருந்தது. ஆங்கில நாட்டில் அக்காலம் முழுதும் விக்டோரியா அரசியே பேரரசியாக இருந்தாள். அவ்வரசியும் முந்திய ஆங்கில அரசிகளைப் போல் கன்னிகையாக இராமல் குடும்ப வாழ்க்கை ஏற்றுக்கொண்டு இல்வாழ்க்கை வாழ்வார்க்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கினுள். நாட்டு விவகாரங்களை நன்கு அறிந்த அமைச்சர்களை வைத்துக் கொண்டு நாட்டை முன்னுக்குக் கொண்டு வந்தாள். ஆங்கிலப் பேரரசோ உலகம் முழுதும் பரவி எல்லா அரசுகளுக்கும் தலைமை நிலை ஏற்றுக் கொண்டு விளங்கிற்று. மிக நீதியோடும் கருணை யோடும் மக்களை ஆண்டவகையில் சிறந்த கம்பீரத்தைப் பெற்று உலகிலேயே இதைப்போல் வேறரசு எக்காலத்திலும் இருந்ததில்லை என்று சொல்லும் வண்ணம் திகழ்ந்தாள். அந்தக் காலத்தில் ஆங்கிலப் பாமகளும் ஒப்பற்ற இல்லறத்தை நடத்துவாள் அன்ருே ?

விக்டோரியா அரசி நீண்ட காலம் (1837—1901) ஆண்டாள். நாடெங்கும் அமைதி ஏற்பட்டது. ஆங்கிலேயர் சென்ற இட மெல்லாம் அமைதியை நிலை நிறுத்திஞர்கள். மக்கள் தங்கள் முன்னேற்றத்தை ஆராயப் போதுமான ஓய்வும் இருந்தது. வெறும் கவிதைப் பெருக்கில் பயன் இல்லை ; கற்பனை செய்வதில் பயன் இல்லை. மக்களுக்கு அவைகளால் பேரின்பம் எப்போதும் கிடை யாது. விஞ்ஞான அறிவு பெருக வேண்டும். அவைகளால் வாழ்க்கைக்கு இன்பம் தரும் பொருள் வருவாய் பெருக்க வேண்டும். சில அறிஞர்களே இன்பம் துய்த்தால் போதாது. எல்லா மக்களும் இன்பம் துய்க்க வேண்டும் என்ற கொள்கை எங்கும் பரவியது. விஞ்ஞானம் வளர்ந்தது. புதுக் கருவிகள் ஆக்கப்பட்டன. விரை வில் சென்று பொருளை ஈட்டும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. புகைவண்டி, புகைக்கப்பல் போல்வன தோன்றின. வருமானமும் வாணிபமும் மிகப் பெருகின. அவைகளுக்கு ஏற்றவாறு அரசியல் அரணும் வலிமை பெற்றது. பாமர மக்களுக்குக் கைத்தொழிலின் சிறப்பு நடைமுறை வகையால் உணர்த்தப்பட்டது. அவர்களுடைய நிலைமை ஏற்றம் அடைந்தது. கூலியாளர்களுக்கும் நன்மதிப்புத் தரப்பட்டது. அவர்களும் சில உரிமைகளைப் பெற்று மகிழ்ந் தார்கள். இந்த வகையில் நாட்டு வளர்ச்சி சிறப்புற்றிருந்தது.

இவ்வித வளர்ச்சிக்கேற்ப அறிஞர்களும் நூல்களை எழுதி ஞர்கள். கவிதையும் ஒருவாறு ஒரு உறுதிப்பாடான நிலை அடைந்தது. இது வரையில் பல நூற்ருண்டுகளாகப் பாமகள்

கீழ்நாடு மேல் நாடு சென்று இன்பம் துய்த்தாள். ஒருமுறை கீழைக்கலை ஒருமுறை மேலைக்கலை, ஒருமுறை பண்டைக்கலை, ஒருமுறை சண்டைக்கலை [Satires] ஒருமுறை வெளிக்கலை, ஒரு முறை உள்நாட்டுக்கலை எனப் பலவாருக அலைமோதிக் கிடந்த பாமகள் இப்போது ஒரு அமைதிநிலை அடைய விரும்பினுள். அவளை ஆதரித்த கவிஞர்கள் எந்த நிலை அது என்று ஆராய்ந் தார்கள். அமைதியிலேயே விடுதலை உண்டு என்று கண்டு கொண்டார்கள். ஒரு சமரச நிலை அப்போது தோன்றிற்று. அந்த நிலையிலே பல பலன்கள் தோன்றின. அப்பலன்களை உயர் நிலை மக்களேயன்றிப் பாமர மக்களும் நுகர்ந்தார்கள். ஆங்கிலத் தீவுகள் மட்டுமன்றி வெளிநாடுகளாகிய அமெரிக்கா, கானடா, ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் அப்பலன்களைப் பெற்றன. அங்கும் இக்கவிதை உலகம் பரவிற்று.

### பலன் தருபவை

பலன் தரும் படிப்பு வேண்டும் என்று ஜான் ஸ்டூவர்ட்மில் [John Stuart Mill-1806—1858] என்ற அறிஞர் எழுதினுர். அவரைப் பின்பற்றி மெக்காலே, பிக்கில், லெக்கி என்ற சரித ஆசிரியர்கள் புதுமுறைகளைப் போற்றினுர்கள். மெக்காலே [Thomas Babington Macaulay 1800—1859] இந்தியாவில் அலுவல் ஏற்றுக் கொண்டு கீழ்நாட்டுக் கலைகளையும் அறிந்து கொண்டு அரிய கவிதைகளையும் இயற்றினுன். அவைகளிலே 'ரோமாபுரிப் பாடல்கள்' [Lays of Ancient Rome] மிகப் புகழ் பெற்றவை. கவிதைகளைக் காட்டிலும் கட்டுரைகள், சரிதம் இவைகளிலே அவன் சிறப்புப் பெற்ருன். ப்ரூட் [James Anthony Broude 1818—1894] என்ற சரித ஆசான் வெகு இலகுவாக சரித்திர ஞானத்தை எல்லா மக்களிடத்தும் பரப்பினுன். ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர், டார்வின் முதலிய அறிஞர்கள் விஞ்ஞானத்தின் மூல மாக மக்கள் பெறக்கூடிய பலன்களை வற்புறுத்திஞர்கள். இந்த முறையில் வாழ்க்கைக்குப் பலன் தரும் படிப்பே வேண்டப் பட்டது. வெறும் உள்ளத்தெழுச்சியும் உருவெளித் தோற்றமும் பயனில்லை என்று போதிக்கப்பட்டது. இந்தக் கொள்கையே இல் வாழ்க்கைக்குச் சிறப்புடையதல்லவா ?

### குறிக்கோள் கொள்கை

அப்படிப் பலன்தரும் படிப்பே வேண்டும் என்று பெரும் பான்மையோர் ஆராய்ச்சி செய்து போற்றவும், சில கவிஞர்கள்

குறிக்கோள் அல்லது இலட்சியத்தையே சிறந்ததாக எண்ணியும் பாடினார்கள். அவர்களில் சிறந்தவர் கார்லைல் [Thomas Carlyle 1795—1881] என்ற அறிஞன். அவன் பள்ளியாசிரியனாக இருந்து தானே படித்து ஜெர்மானிய நூல்கள் பலவற்றை மொழி பெயர்த்தான். அவற்றுள் "Heroes and Heroworship" என்ற நூல் மிகச் சிறந்தது. அவருடைய உரைநடை கரடுமுரடாக இருக்கும். ஆனால் மிக உருக்கமானது. பல சரிதப் பகுதிகளையும் எழுதினான். சார்டர் ரிசார்டஸ் [Sarter Resartus] என்ற நூல் பல அரிய கருத்துக்களை வெளியிட்டது.

டிக்கன்சு [Charles Dickens 1812—1870]

மிகச் சிறந்த கதையாசிரியன். உலக மக்களை நன்கு ஆராய்ந்து அற்புதமாகப் பாத்திரங்களைப் படைத்தான். 'பிக்விக் கடிதங்கள்', ஆலிவர்ட்விஸ்ட், டேவிட்காப்பர் பீல்ட், கிறிஸ்து தினக்கதைகள் போன்றன இவனுடைய அற்புதமான படைப்புகள். இவனுடைய நூல்கள் மக்கள் சமூகத்தை மிகவும் சீர்திருத்தம் செய்தன. தாழ்ந்த மக்களைச் சிறப்பாகத் தொழிலாளர் நிலையைச் சீர்திருத்தும் செயலில் அவனைப் போல் சேவை செய்தவர்கள் இல்லை. இவனுடைய நூல்கள் எக்காலத்தும் அழியா உரை நூல்களாக மட்டுமின்றி நாடகங்களாக நடிக்கவும் தகுதி பெற்றவை. ஏழை விடுதிகள், ஏழைகளைப் பற்றிய சட்டங்கள், ஆகிய இவைகள் மிகக் கொடூரமாக நடத்தப்படுவதைக் குறித்து மிக வருந்திக் கண்டித்தான். இவனால், இவன் எழுத்தால் விளைந்த சமுதாய நன்மைகள் பல.

டிஸ்ரலி [Benjamin Disraeli 1804—1881]

அரசியல்வாதியாக இருந்தும், கதையாசிரியனாகவும் புகழ் பெற்றான். இனி காஸ்கல் அம்மை, கிங்க்ஸ்லி, பிராண்டிஸ் சகோதரிகள் ஆகியோர் மற்ற அறிஞர்கள் ஆவர். காஸ்கல் அம்மையின் [Gaskall 1810-1866] 'கிரான்போர்டு' [Cranford] மிகப் புகழ் பெற்ற நூல். நாட்டுப்புறத்துச் சீமாட்டிகளின் அகந்தை நிலைமையை மிக நன்கு விவரிக்கின்றது. கிங்கஸ்லியின் கிரேக்கச் சரிதைகள் மாணவர்களுக்கு மிகுந்த இன்பம் தருவன. ப்ராண்டிஸ் சகோதரிகள் அரிய கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். அவைகளில் சின்னஞ்சிறு கவிதைகளும், கதைகளும் வெகு நுண்ணிய அறிவு தருபவை. ரஸ்கின் [John Ruskin 1819-1900] என்ற அறிஞன் ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் ஈடுபட்டான். அந்த உலகத்தில் ஒரு புரட்சி ஏற்படுத்தியவன். இவனுடைய 'சிற்பக்கலையின் ஏழு

தீபங்கள்' [Seven Lamps of Architecture] 'வெனிஸ் கற்கள்' [Stones of Venice] என்பன மிகவும் புகழ் பெற்றவை.

**கவிதை உள்ளம்**

விக்டோரியா அரசியின் காலத்துக் கவிதை ஒரு தனி உள்ளப் பான்மை கொண்டது. பல கவிஞர்கள் கணக்கற்ற கவிதைகளை இயற்றினார்கள். ஆனால் அவைகள் எல்லாம் இரண்டு பெரும் புலவர்களைச் சுற்றி விளங்கின. அவர்கள் டெனிசன், பிரௌனிங்கு என்பவர்கள். இவ்விருவரும் எல்லோருக்கும் மேலாக ஓங்கி நின்றனர். அவர்களுடைய சாயலில் ஏனையோர் தோன்றினர்.

இவ்விரு பெரியோர்களில் முதலில் டெனிசனைப் பற்றிப் பேசுவோம். டெனிசன் [Alfred Tennyson 1809-1892] 1809—இல் பிறந்தான். இளம் வயது முதற்கொண்டே செய்யுள் எழுதத் தொடங்கினான். முதலில் பதிப்பித்த கவிதைகளை மக்கள் போற்ற வில்லை. பிறகு பதித்தவைகள் சிறிது சிறிதாக அவன்பெயரை முன்னுக்குக் கொண்டு வந்தன. *அரசகுமாரி* [The Princess] *நினைவுக்குறிப்பில்* [In Memoriam] என்பவைகள் புகழப்பட்டன. 1850—இல் ஆஸ்தான கவிஞனான் பிறகு '*வைட்*' [Isle of Wight] தீவில் குடியேறி அங்கே இறுதி வரைக்கும் அமைதியான வாழ்க்கை நடத்தினான். *மாட்* [Maud] *அரசன் கவிதைகள்* [Idylle of the King] முதலாயின இவனுக்குப் பெரும் புகழ் தந்தன. கணக்கற்ற சிறுகவிதைகளும் இயற்றினான். பிரபுப் பட்டம் கிடைக்கும் அளவிற்கு அத்தனை சிறந்து அவன் புகழ் ஓங்கிற்று. வெஸ்ட்மின்ஸ்டர் ஆபியில் புலவர்களிடையே சமாதி செய்யப் பட்டான்.

'நினைவுக் குறிப்பில்' என்பது அவனுடைய நண்பனது மறைவைக் குறித்து எழுதிய இரங்கற்பாடல்கள். அவைகளிலே அளவற்ற தத்துவ இரத்தினங்களைப் பொதிந்து வைத்துள்ளான். 'அரசன் கவிதைகள்' பழைய ஆர்தர் கதையைத் தழுவி எழுதப் பட்டன. ஆர்தம் மரணம் என்ற பகுதி மிக உருக்கமானது. டெனிசனுடைய நடைப்போக்கு மிக இனிமையானது. படிப்பவர் களின் இதயத்தைக் கவர்ந்து இழுத்துக் கொண்டு செல்லக்கூடியது. அவனை இறுதி வரைக்கும் மக்கள் மதித்து வந்தார்கள். அவனைச் சுற்றித் திகழ்ந்த கவிஞர்களில் தாமஸ் ஹுட் [Thomas Hood] நகைச்சுவைக் கவிதைகளை எழுதினான். ரோஜட்டி [1818-1882] இத்தாலியாவிலிருந்து வந்தவன். இத்தாலியக் கவிகளை மொழி பெயர்த்தான்.

## வில்லியம் மாரிஸ் [William Morris 1834—1896]

டெனிசன் போல நிரம்ப எழுதியிருக்கிருன். ஆர்தர் கதைகள் போல உலக சுவர்க்கம் [Earthly Paradise] என்ற காவியம் எழுதினுன். இது இத்தாலியப் பொக்கேச்சியோவைப் [Boccaccio] பின்பற்றியது. அரசாளப் பிறந்த மகன் என்றது அருமையான கவிதை. கீழைநாட்டுக் கவிதைகள், வடநாட்டுக் கவிதைகள் ஆகியவற்றைத் தழுவியும் எழுதினுன்.

ரோஜட்டி அம்மையும், எலிஜபெத் பாரட், ப்ரௌனிங்கு அம்மையும் அரிய கவிதைகளே எழுதியிருக்கிருர்கள்.

## பிட்ஜெரால்ட் [Fitzgerold 1809—1883]

பாரசீகக் கவிஞரான 'உமர்க்கய்யாம்' என்பவரின் பாடல்களே மொழி பெயர்த்தான். தன் கவிதைத் திறத்தால் இதனே முதல் நூல் போலவே மாற்றி விட்டான். நடை மிக இனிமையாக இருக்கிறது.

## *ராபர்ட் பிரௌனிங்* [Robert Browning 1812—1889]

மிகப் புகழ்பெற்ற கவிஞன். அவனுடைய மனேவியும் கவியே. "*ஹேமலின் குழலூதி*" [The Pied Piper of Hamelin] என்பது அவனுடைய புகழ் பெற்ற கவிதை. மக்கட் தத்துவத்தை மிக உருக்கமாக எழுதியவன். கீழைநாட்டுத் தத்துவங்கள் போல இவனுடைய ஆராய்ச்சிகள் இருக்கும். வஞ்சித்து ஒழுகுகிறவனே அவ்வஞ்சனேயே மாய்த்து விடும் என்ற நீதியை ஒரு கட்டுக்கதை மூலமாக எடுத்துப் பாடுகிருன். இளேஞர்கள் இவன் கவிதைகளே மிக நன்ருகச் சுவைப்பார்கள்.

## உண்மை நெறி

நாடெங்கும் அறிவு பெருக வேண்டும் என்ற கொள்கை நிரம்பவே சாதாரண மக்களும் படிக்கத் தொடங்கினர். நாட்டில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து முதியோர் படிப்பும் பெருக வேண்டு மென்ற எண்ணம் கொண்ட பேச்சுக்களும் கட்சிகளும் அதிகமாயின. நூலக இயக்கம் மேம்பாடடைந்த நாடெங்கும் நாட்டுப் புறங்களிலும் நூலகங்கள் வைக்கப்பட்டன. அதற்காக மக்கள் வரியும் செலுத்தினர். நூல்கள் நிரந்தரமாகவும், சுற்றி வரவும் தொடங்கின. இவ்வாறு கல்வி அதிகமாகவே மக்கள் புதுக்

கருத்துக்களை எழுதினார்கள். அவ்வெழுத்தாளர்கள் பழைய முறைகளைத் தழுவாமல் உண்மை மொழிகளையே எழுத வேண்டும் என்று எண்ணினார்கள். அந்த வகையில் உண்மைநெறி [Realism] இயக்கம் பெருகிற்று.

ஆங்கில நாட்டில் அதுவரையில் இரண்டு பெரிய பல் கலைக்கழகங்களும் நான்கு பெரிய பள்ளிகளும் கணக்கற்ற சிறு பள்ளிகளும் இருந்தன. கல்வி பரவத் தொடங்கின போது பல்கலைக்கழகங்கள் அதிகரித்தன. பெரிய நகரங்களான இலண்டன், மான்செஸ்டர், பர்மிங்காம், டர்ஹம், லீட்ஸ் முதலிய பல ஊர்களிலும் கழகங்கள் தோன்றின. விஞ்ஞானக் கல்லூரி களும் எங்கும் தோன்றின. இவற்றின் மூலமாக எழுத்தாளர்கள் உண்மைநெறி இயக்கத்தில் ஈடுபட்டனர்.

இந்த முறையில் எழுதிய புலவர்களுள் தாக்கரே [W.M. Thackary] ஒருவர். [பகட்டுச் சந்தை] Vanity Fair என்ற புதினம் அவனுடைய சிறந்த படைப்பாகும். அவருடைய ''எஸ்மாண்டு'' [Henry Esmond] முதலிய கணக்கற்ற புதினங் களும் மக்களால் போற்றப்பட்டன. 'த்ரொலொப்' [Trollope] ரீட் [Reade] காலின்ஸ் [Collins] லிட்டன் [Lytton] முதலியோர் அவனைப் பின்பற்றி வந்த எழுத்தாளர்கள். ஜார்ஜ் எலியட் [George Elliot 1819—1880] என்ற புனை பெயர் கொண்ட அம்மையார் உண்மை நெறியைக் கதைகளின் மூலம் வெளிப் படுத்தினாள். அவள் எழுதிய ஆடம் பீட்' [Adam Bede] சமய வாழ்க்கைச் சித்திரங்கள் [Scenes of Clerical Life] மிகுந்த சிறப்பு வாய்ந்தன. பட்லர், மெரிடித் என்பவர்களும் சிறந்த வர்கள். கிப்லிங்கு [Kipling] என்ற கவி இந்தியாவில் அலுவல் பார்த்தவன்; வேட்டையாடுதல் முதலியவை பற்றி மிகலலிதமாக [இனிமையாக] எழுதினான். அவனுடைய பாடல்களும் இப்படிப் பட்டவைகளே ஆகும். இவன் நூல்களை ஆங்கிலேயர்கள் மிகவும் விரும்பிப் படித்தார்கள்.

## வெளிநாட்டறிவு

ஆங்கிலப் பாமகள் இங்கிலாந்தில் மட்டுமேயன்றி வெளி நாடுகளிலும் புகழ் பெற்று விளங்கினாள். அமெரிக்காவில் ஆங்கிலம் பேசப்பட்டது. பல அறிஞர்கள் ஆங்கிலத்திலேயே எழுதினார்கள். அவர்களிலே லாங்குபெல்லோ [H.W. Long fellow 1807—1882] மிக அருமையான கவிதைகளை எழுதினான்.

பெஞ்சமன் பிராங்கிலின், ஆப்ரகாம் லிங்கன் முதலியோர் எழுதுவதிலும் பேசுவதிலும் வல்லவர்கள். மார்க் ட்வெயின் [Mark Twain] என்ற நகைச்சுவை அறிஞன் பல நகைச்சுவை நூல்களை எழுதினன். ஸ்டௌ [Mrs. Stowe] என்ற அம்மை "Uncle Tom's Cabin" என்ற அரிய நூலை எழுதினள். அதன் விளைவாக அமெரிக்காவில் அடிமைத்தனம் தொலைந்தது.

இந்தியாவிலும் பாமகள் சிறந்து போற்றப்பட்டாள். டோருதத்து (Toru-Dutt) என்ற அம்மையார் அழகிய கவிதைகளை எழுதிப் புகழ் பெற்றுள். ரமேஷ் தத் (Ramesh Dutt) இராமாயணம், பாரதம், கீதை முதலிய காவியங்களை ஆங்கிலத்தில் எழுதினர். தாகூர் கணக்கற்ற நூல்களையும் கவிதைகளையும் ஆங்கிலத்தில் புனைந்தார். அவற்றில் கீதாஞ்சலி சிறந்தது. அதற்காக நோபல் பரிசு பெற்ருர். சரோஜினி தேவியார் மிக இனிய குயில் பாக்களை இயற்றினர்.

மேற்கிலிருந்து இந்தியாவிற்கு வந்த அறிஞர்களும் கீழை நாட்டுக் கலைகளை ஆங்கிலம் ஆக்கினர்கள். அவர்களில் சிறந்தவர்கள் மாக்ஸ் முல்லர் என்பவர். வேதங்கள் முதலியவைகள் ஆங்கில மொழியேறுவதற்கு அவரே காரணமாக இருந்தார்கள். ஜோன்ஸ், கோர்லிஜ் என்பவர்கள் சாகுந்தலம் முதலிய கவிதைகளை இயற்றினர்கள். கிரிபித் [Griffith] பாரதம், இராமாயணங்களைச் செய்யுட்படுத்தினர். சர் எட்வின் ஆர்னல்ட் [Edwin Arnlod] என்ற கவிஞர் 'Light of Asia' (ஆசிய சோதி) Celestial Song (தேவ கீதம்) என்ற இரண்டு கவிதைகளில் புத்த சரித்திரம், பகவத்கீதை முதலியவைகளை இயற்றினர். இந்த வகையில் இந்தியக் கவிதைகள் ஆங்கிலம் ஏறிச் சிறப்பித்தன. தமிழிலிருந்து போப் (Pope) திருக்குறள், திருவாசகம், இரண்டையும் ஆங்கிலம் ஆக்கினர். இந்த முறையில் ஆங்கிலம் சீரும் சிறப்பும் பெற்றது.

## குறிப்புகள்

1. ஆசிரியர் ஜான்சனின் அக்காலப் புகழைப் பற்றி (Contemporary Popularity) இவ்வாறு குறிப்பிடுகிருர் போலும். ஜான்சன் இன்றும் நினைவு கூறப்படும் பெரும் எழுத்தாளர்களுள் ஒருவன். அவனுடைய அகராதி பற்றிய புகழ் வரலாற்று மதிப்புடையது (historical estimate). ஆனல் அவனுடைய புகழுக்கு அடிப்படையாக அமைந்திருப்பன அவனுடைய இலக்கிய ஆராய்ச்சி பற்றிய சிந்தனைகள்தாம். இச்சிந்தனைகள் அவன் இயற்றிய "புலவர்களின் சரிதங்கள்", ஷேக்ஸ்பியர் நாடகங்கட்கு அவன்

எழுதிய முகவுரை (Preface to Shakespeare), பல கவிஞர்களைப் பற்றி அவன் கூறியனவாகப் பாஸ்வெல் குறிப்பிடும் உரையாடல்கள் ஆகிய நூல்களில் செறிந்து காணப்படுகின்றன. கற்ற நூல்களால் அவன் பெற்ற அறிவை விட அவன் இயற்கையாகப் பெற்றிருந்த மானிடப் பொது அறிவு தான் (Common Sense) அவனுடைய மேதைமைக்கு அடையாளமாகக் கருதப் படுகிறது. 20 ஆம் நூற்றுண்டின் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞனுகவும் திறனுய்வாளனுகவும் கருதப்பெறும் டி. எஸ். எலியட் ( T. S. Eliot ) ஜான்சனுடைய ஆராய்ச்சி வன்மையைப் பற்றி, "It is dangerous to disagree with Dr. Johnson" ஜான்சனின் கருத்தை மறுப்பது பெரும் பேதைமையாய் முடியும் என்று கூறுவதனுல் அவனுடைய எழுத்துப் பெருமை இன்றும் தொடர்ந்து விளங்குவதைக் காணலாம்.

2. கரும்பு (The Sugarcane), ஏகாந்த நினைவு (Ode on Solitude) என்னும் இரு நூல்களும் ஜேம்ஸ் கிரைஞ்சர் ( James Grainger 1721?—1766 ) என்பவரால் இயற்றப் பெற்றன.

3. 'The Lay of the Last Minstrel' என்னும் கவிதைத் தொகுப்பில் இப் பாடல் அடங்கியுள்ளது.

4. The fountains mingle with the river
And the rivers with the ocean
The winds of heaven mix for ever
With a sweet emotion;
Nothing in the world is single,
All things by a law divine
In one another's being mingle —
Why not I with thine ?

See the mountains kiss high heaven,
And the waves clasp one another;
No sister flower would be forgiven
If it disdain'd its brother:
And the sunlight clasps the earth,
And the moon beams kiss the sea —
What are all these things worth,
If thou kiss not me ?

5. வில்லியம் வோர்ட்ஸ்வொர்த், கோல்ரிட்ஜ், சதே ஆகிய கவிஞர்களே 'ஏரிக்கவிஞர்' எனப்படுவர். இங்கிலாந்தின் வடமேற்கே அமைந்த ஏரி மாவட்டத்தில் ( Lake District ) கவிதைப் படைப்புக்காகக் குடியேறி வாழ்ந்தவர்கள். எனவே அவ்வாறு அழைக்கப்பட்டார்கள்.

6. தாமஸ் டீகுவென்ஸி ( Thomas De Quincy 1785—1859 ) எழுதிய 'Confession of an English Opium Eater' என்ற கட்டுரை நூல் ஒரு இலக்கியவாதியின் மன ஓட்டத்தை விளக்குகின்ற ஒரு கற்பனைப் படைப் பாகும்.

# வளர்ச்சி முதிர்ந்த பருவம்

1900-1950

# VII. வளர்ச்சி முதிர்ந்த பருவம்
## (1900—1950)

ஆங்கிலப் பாமகள் 19 ஆவது நூற்ருண்டு முழுவதும் இல்லற வாழ்க்கையில் மிகப் புகழ் பெற்று வாழ்ந்தாள். எங்கும் அவளுடைய நல்லறங்களே பேசப்பட்டன. அவளுடைய புகழ் ஆங்கில நாட்டில் மட்டுமன்றி உலகில் சிறந்த நாகரிகம் பெற்ற மற்றைய நாடுகளிலும் பரவிற்று. இவ்வாறு புகழோடு வாழ்ந்த பெண்மணி 20—ஆம் நூற்ருண்டில் நிரம்ப வளர்ச்சி பெற்று விளங்கினுள். வளர்ச்சி மிகுதியாகப் பெற்ற முதுமக்கள் வீண் ஆடம்பரங்களில் மனதைச் செலுத்தார்கள். சிறந்த அனுபவ அறிவு முகத்தில் திகழும். அப்படிப்பட்ட மகளின் தோற்றம் கம்பீரமாக இருக்கும். வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் பொன் போன்று விலேயுயர்ந்த நன்னெறி கொண்டவைகளாக இருக்கும். ஆடி, ஓடிப் புரளும்; பன்னிறங்களேக் கொள்ளாமல் தூய வெண்மை படிந்த அமைதியைக் கொண்டிருக்கும். அந்த வளர்ச்சி நிலேயில் ஆங்கிலப் பாமகள் இலங்கினுள்.

20—ஆவது நூற்ருண்டில் விக்டோரியாப் பேரரசி மறைந்து அவளுடைய மூத்த மகன் ஏழாம் எட்வார்டு பட்டத்திற்கு வந்தான். பட்டம் பெற்ற போதே அவன் அறுபது வயதைத் தாண்டியிருந்தான். அவன் ஆட்சி அமைதியாக நடந்தது. அவன் 1910—இல் மறைய அவன் மகன் ஐந்தாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தான். அவன் வந்து 4 ஆண்டிற்குள் ஜெர்மன் முதல் போர் தொடங்கிற்று. 4 ஆண்டுகள் மிகக் கடுமையாக நடந்த அந்த உலகப் போரில் ஜெர்மானியர்கள் தோற்றுப் போனுர்கள். 1918 முதல் அமைதி ஏற்பட்டும் போர் புரியும் அவா நீங்கவில்லே. ஜெர்மானியர் மீண்டும் போருக்கு ஆயத்தம் ஆனுர்கள். விஞ்ஞானக் கலே முதிர்ச்சி அடைந்து பயங்கரக் கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. ருஷியா பொது உடைமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டு இராணுவப் பேரவையில் புகுந்தது. அமெரிக்கா மிகுந்த செல்வம் பெற்று உலகில் பெரிய நாடு என்று அகந்தை கொண்டது. 1938—இல் மீண்டும் இரண்டாம் போர் தொடங்கிற்று. ஐந்தாண்டுக்குள் ஜெர்மானியர், இத்தாலியர், ஜப்பானியர் தோல்வியுற்ருர்கள். இங்கிலாந்து போரில் வென்ற போதிலும் செல்வத்தில் குறைந்தது. தன் அடிமை நாடுகளுக்குச் சுதந்திரமும் வழங்கிற்று.

இந்தியா சுதந்திரம் பெற்றது. இந்த நிலைமையில் அனுபவ சாலியாக ஆங்கில மாது வாழ்க்கை நடத்தினுள். அடிமை நாடு களுக்குச் சுதந்திரம் வழங்கியதற்கு முன்பே தன் அருமை மக ளிரான கனடா, தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து முதலிய குடியேற்ற நாடுகளுக்கும் தன்னுரிமை வழங்கினுள். மகளிர் தனிக் குடித்தனம் வைத்துக் கொண்டு பெருஞ் சுதந் திரத்துடன் வாழுகிருர்கள். அவ்விதச் சுதந்திரத்தினுல் மனது பூரித்துத் தன் தாய்க்கு மறவாத நன்றி செலுத்தி மொழி வளர்ச்சியிலும் கவிதை வளர்ச்சியிலும் பங்கு கொண்டு பேருதவி செய்து வருகிருர்கள். இந்த வகையில் ஆங்கிலப் பாமகள் முதிர்ந்த வயதில் பெருஞ் சிறப்போடு இந்த 20—ஆவது நூற் ருண்டில் அரசு கட்டிலில் வீற்றிருந்து பேரரசு செலுத்தி வரு கிருள்.

## *அறிவு முதிர்ச்சி* (1900—1925)

### *1.* புது மாறுதல்கள்

மக்கள் எண்ணப் போக்கில் ஒரு புது மாறுதல் ஏற்பட் டது. விஞ்ஞானம் வளர்ச்சி பெறவே புதுப் புது யந்திரங்கள் செய்யப்பட்டன. போக்குவரத்து துரிதப்பட்டது. மனிதன் தன் கையினுல் செய்ததைக் காட்டிலும் கருவிகள் மூலம் மிக விரை வில் பன்மடங்கு வேலைகள் செய்ய முயன்ருன். இயந்திரங்களும் பொருள்களும் அளவு மீறி செய்யப்படவே கருவிகள் மனித னுடைய அடிமையாவதற்கு மாருக மனிதன் கருவிகளுக்கு அடிமை ஆகி விட்டான். இந்த அடிமைத்தனம் தீவிர நிலைமை அடையவே ஆறறிவுள்ள மனிதன் வெட்கம் அடையவும் தொடங் கினுன். மக்களிடையே ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்பட்டது. கருவிப் பெருமை மீறி வருவதைக் கண்டு மக்கள் அதனை எதிர்க்கத் தொடங்கினுர்கள். தொழிலாளிகள் தங்களை ஆடு மாடுகளைப் போலவும் உயிரற்ற கருவிகளைப் போலவும் நடத்து வதை எதிர்த்தார்கள். தொழில் செய்யும் நேரத்தைக் குறைத்து ஊதியத்தைப் பெருக்கி, தொழிலாளிகளை மனிதர்களாக நடத்த வேண்டும் என்ற போராட்டம் ஏற்பட்டது. அதன் விளைவாகத் தொழிலாளர்கள் நிலைமை செழித்தது. தொழிலாளர்களுக்குக் கல்வி, சுகாதார உதவி, விளையாட்டுக்கள், காட்சிப் படங்கள் முதலிய வசதிகள் தரப்பட்டன. இந்தச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாகப் பல தத்துவ ஞானிகள் எழுதினுர்கள், கருவிகளின் அடிமைத்தனம் கூடாது என்று வற்புறுத்தி மனிதனுடைய அறி வின் மேன்மையைப் புகழ்ந்து எழுதினுர்கள். இதுவே கருவி

களின் மீது அறிவு நடத்திய போராட்டம். இதில் ஈடுபட்ட பல அறிஞர்கள் பல்கலைக் கழகங்களில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள். அவர்களில் சிறந்தவர்கள் கிரீன் [T. H. Green], ப்ராட்லி [F. H. Bradley], பட்ராண்ட் ரஸ்ஸல், ] Bertrand Russell ] வெஸ்லி. இவர்களுடைய நூல்கள் பொதுமக்களின் மனப் போக்கை மாற்றத் தொடங்கின. மனப் போக்கு தாராளத் தன்மை அடைந்தது.

## 2. அறிவுப் போராட்டம்

இந்த அறிவுப் போராட்டத்தில் இரண்டு சிறந்த எழுத்தாளர்கள் விளங்கினார்கள். சேமுவல் பட்லர் [Samuel Butler 1835—1902] என்ற அறிஞர் முதலில் நியூஜிலந்தில் ஆட்டுப் பண்ணை வைத்து நடத்திப் பிறகு இங்கிலாந்து சென்று எழுத்தாளராக விளங்கினார். பல சமய நூல்கள் எழுதியிருக்கிறார். அவைகளில் ஒன்று 'தெரிந்த கடவுளும், தெரியாத கடவுளும்' [God the Known and God the Unknown] என்பது. இவருடைய எண்ணப் போக்கு மிகவும் மலர்ச்சி தந்தது மற்றொருவர் ஜார்ஜ் மெரிடித் (1828—1909) என்ற கதையாசிரியர். வழக்கறிஞராக இருந்து அதனை விட்டு எழுத்தாளரானார். கவிதைகளும் இயற்றியுள்ளார். மனிதன் யார் என்ற கேள்வியை நன்கு சிந்தித்து அதனைக் குறித்து மிக எழுதினார். தன் கருத்துக்களைத் தெளிவாகவும் வெகு உருக்கமாகவும் எழுதினார். சிறந்த எழுத்தாளராகப் புகழ் பெற்று விளங்கினார். இவர் படைத்த கதாபாத்திரங்கள் உலகியல் அறிவையும் பண்பாட்டையும் வளர்த்தவர்கள்.

அதே காலத்தில் பிற்போக்கு எண்ணங்கள் கொண்ட சில எழுத்தாளர்கள் தோன்றினார்கள். அவர்களில் தாம்சன், ஹார்டி, கிஸ்ஸிங்கு என்ற எழுத்தாளர்கள் முக்கியமானவர்கள். தாம்சன் ஒரு சிறந்த கவிஞன். உள்ளெழுச்சி படைத்தவன். ஹார்டி திட மனது வாய்ந்தவன். கதைச் சித்திரம் தீட்டுவதில் சிறந்தவன். கிஸ்ஸிங்கு வறுமையினால் வாட்டப் பெற்று எழுத்தினால் பிழைக்கத் தொடங்கினவன். என்றாலும் சிறந்த கொள்கைகளை நிலை நாட்டினவன். இவர்களே அறிவுப் போராட்டத்தில் விளங்கினவர்கள்.

## 3. புத்துணர்ச்சி

கவிதையில் ஷெல்லி, பைரன் காலத்தில் எழுந்த உணர்ச்சி போல இப்பொழுதும் ஒரு புது மலர்ச்சி தோன்றியது. அதற்குக்

காரணபூதமாக இருந்தவன் ஸ்வின்பர்ன் என்ற கவிஞன் [Swin Burn 1839—1924] இவன் ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் கணக்கற்ற கவிதைகளை எழுதியிருக்கிருன். டெனிசன் போலவே ஆர்தர் கதைகளை ஒரு கவிதையாகத் தீட்டியுள்ளான். விக்டர் ஹி யூ கோ என்ற பிரஞ்சு கவியை மிகவும் வணங்கிப் போற்றினவன். அவனைப் பற்றி ஒரு பாராட்டு நூலும் வரைந்திருக்கிருன்.

இந்த நாளில்தான் துணிகர யாத்திரை நூல்கள் தோன்றின. பிற நாடுகளில் சென்று அபாயங்களுக்கு அஞ்சாது துணிகரமாய் யாத்திரை போவது இயல்பாகி விட்டது.

ஸ்டான்லி முதலியோர்கள் ஆப்பிரிக்கா சென்று வீர தீர யாத்திரை புரிந்தார்கள். அந்தத் துணிகர யாத்திரைகள் நூல்களைப் பரிணமித்தன. அவ்வித நூல்களில் சிறந்தவை ஆர். எல் ஸ்டீவென்சன் எழுதினன் (1850 – 1894) தன் உடல் நலமின்மையினுல் தென் கடலில், ஒரு தீவில் குடியிருந்தான். பொறிவல்லவர் குடியில்பிறந்தும் எழுத்தாளனுகத் திகழ்ந்தான். பொக்கிஷத் தீவு அவனுடைய சிறந்த சித்திரம். டாக்டர் ஜெகில் Mr. ஹைட் என்பது ஒரு விசித்திர சித்திரம். ஒரே ஆள் இரண்டு முரணுன வாழ்க்கை வாழ்ந்த கவிதையை அது கூறுகிறது. மேலும் ரைடர், ஹாக்கார்ட் முதலியோர் பல துணிகர நூல்களை இயற்றினுர்கள்.

### *4.* அயர்லாந்துப் பகுதி

இந்தக் காலத்தில் அயர்லாந்து முன்னுக்கு வந்தது. தங்களுக்குத் தன்னுரிமை வேண்டும் என்று அது போராடிப் பெற்றது. அதற்கு அடிகோலின எழுத்தாளர் பலர் இருந்தனர். அவர்களிலே ஈட்ஸ் (1865—1939) மிகச் சிறந்தவன். மற்ற வர்கள் சிர்ஜ் (1891—1950). ஜார்ஜ் மூர் (1852—1933) தாம்ஸன் (1859—1909) என்பவர்கள் அயர்லாந்தின் பண்பாட்டை நன்கு விளக்கியுள்ளவர்கள்.

### *5.* செயற்கைக் குறிக்கோள்

செயல்முறையே குறிக்கோளாகக் கொண்ட சில எழுத் தாளர்கள் இப்போது தோன்றினுர்கள். அதில் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கொண்டவர்கள் ஹெல்லி 1949—1903) ருட்யார்ட் கிப்ளிங்கு (1865—1936) என்பவர்கள். கிப்ளிங்கு இந்தியாவில் பிறந்து இங்கே வாழ்ந்த ஆங்கிலேயர். இந்தியர்களைப் பற்றி எழுதினுன். சிறுகதைகளிலும் வருணனைகளிலும் சிறந்தவன்.

ஆங்கிலர் மீது வைத்திருந்த மதிப்பினுல் இந்தியர்களைப் பாராட்டவில்லை. அவனுடைய சிறந்த நூல் 'காட்டு நூல்' என்பது.

பரம்பரைக் கொள்கை கொண்ட எழுத்தாளர்களில் செஸ்டர்டன் [G.K. Chesterton] என்பவன் பழைய புல்லர்களைப் பற்றி ஆராய்ச்சி உரைகளைத் தீட்டினுன்.

## தளர்ச்சிக் காலம் (1925—1950)

ஆங்கிலப் பாமகள் வயது முதிர முதிர அணியலங்காரங்களைப் புறக்கணிக்கத் தொடங்கினுள். கொள்கைகளையும் குணங்களையுமே பாராட்டத் தொடங்குகிருள். உலக அமைதியையே விரும்பத் தொடங்குகிருள். முன்னுளில் செய்யுளும் அச்செய்யுளில் பொருள் நயத்தைக் காட்டிலும் சொல்நயமுமே விரும்பியிருந்தாள். அந் நயங்களையே தன் அணிகளாக உற்று அரசு கட்டிலில் அழகு செய்து கொண்டிருந்தாள். ஆனுல் வயது முதிர முதிர சொல் நயங்களையும் அதற்கேற்ற எதுகை, மோனை இயைபுகளையும் வெறுத்தாள். ஆகவே பாக்களில் வெறும் பொருள்நயமே மிகுந் திருந்தது. வரவர அந்தப் பொருள்நயம் கொண்ட பாக்களையும் வெறுத்தாள். வெறும் உரைநடையில் பொருள் சிறந்திருந்தால் போதும் என்று எண்ணினுள். ஆகவே தற்போது உரைநடையே சிறந்த அணியாக அவள் ஏற்று வருகிருள்.

### 1. சோஷியலிசம்

நாட்டில் கொள்கைகள் சிறந்து விளங்கின. மக்கள் நாயகக் கொள்கை வலுக்கத் தொடங்கியது. அதுவும் போது மானது அல்லவென்று மார்ஷ் (Marse) முதலிய அறிஞர்கள் பொது உடைமையைப் போதித்தார்கள். அதிலும் சரியான முன்னேற்றம் இல்லை என்று பெர்ஞர்ட்ஷா முதலிய அறிஞர்கள் சோஷியலிசம் என்று இடைத்தரக் கொள்கையை வற்புறுத்தி ஞர்கள். ஷா என்ற அறிஞர் கணக்கற்ற நூல்கள் எழுதியிருக் கின்றுர். சிக்கனம், அரசியல். தொழிலாளத் துறை முதலிய கொள்கைகளைச் சித்தாந்தம் செய்து உரை நூல்களாகவும் நாடகங்களாகவும் எழுதியிருக்கிறுர். அவருடைய நூல்கள் மக் களின் எண்ணப் போக்கை மிகவாக மாற்றி விட்டன. அவர் இறக்கு மட்டும் எழுதிக் கொண்டே இருந்தார். மிகுந்த முதிய வயதில் அவர் நாட்டிலேயே உயிர் துறந்தார். அவரைப் போலவே H. G. Wells என்ற மற்ருெரு அறிஞர் கணக்கற்ற

அறிவு நூல்களை எழுதியிருக்கிருர். அவருடைய 'உலக சரித்திரம்' மிகப் புகழ் பெற்றது. மக்கள் சமுதாயத்தைக் குறித்து கணக் கற்ற நூல்களை எழுதியிருக்கிருர். எட்வார்டு கார்பென்டர் என்ற மற்ருெரு அறிஞர் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி சோஷிய லிஸ்ட் கொள்கைகளை நிறுவிஞர்.

## 2. தற்காலப் போக்கு

தற்காலத்தில் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் உரை நடையை விரும்பி காலத்திற்கேற்ற கொள்கைகளை வற்புறுத்தி வருகிருர்கள். கட்டுரைகளை எழுதித் தினத்தாள்களுக்கு அனுப்பு கிருர்கள். சிறு கதைகளை மாசிகைகளுக்குத் [ இதழ்கள் ] தருகிருர்கள். நவீனங்களைத் தனித் தனியே பதிப்பிக்கிருர்கள். இவ்வாறு தற்காலப் போக்கு இருக்கின்றது. பேரி ( Baeri ) கான்ராட், ( Conrad ) பென்னெட், ( Bennett ) கால்ஸ்வர்த்தி ( Galsworthy ) முதலியோர்கள் தற்காலச் சிறந்த கதாசிரியர்கள். செய்யுள் நடை குறைந்து விட்டது. அதனை விரும்பிப் படிப் பார் இல்லை.

சில மாசிகைகள் மட்டும் சிறிய கவிதைகளை வெளியிடு கிறதுண்டு. போலிச் செய்யுட்கள் சில விகடப் பத்திரிக்கைகளில் வருகின்றன. இந்த வகையில் பாமகள் வாடுகின்ருள்.

## 3. வெளிநாடுகள்

ஆனுல் வெளிநாடுகளில் ஆங்கிலம் பரந்திருக்கிறது. அங்கே செய்யுள் ஒருவாறு போற்றப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் நூல் பதிப்பு மிகவாக வளர்ந்து வருகிறது. இந்தியா விலும் கூட ஆங்கிலம் போற்றப்படுகிறது. தாகூர் அரிய நூல்களை எழுதியிருக்கிருர். அவருக்கு ' நோபல் ' பரிசும் கிடைத் தது. முதலில் வங்க மொழியில் எழுதி அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிருர். அதில் சிறந்தது கீதாஞ்சலி என்ற அருள் நூல். சரோஜினி தேவி பல அரிய பாக்களை எழுதியிருக் கிருர். அவைகள் திவ்ய கீதங்களாக மிளிர்கின்றன. ஹரீந்தர நாதர் அழகிய நாடகங்களை எழுதியிருக்கிருர், இவ்வாறு வெளி நாடுகளிலும் ஆங்கிலப் பாமகள் போற்றப்படுகிருள்.

## பின்னுரை

இதுவரை ஆங்கிலப் பாமகளின் வளர்ச்சிச் சித்திரத்தைக் கண்டு வியந்தோம். அவ்வகையான வளர்ச்சிச் சித்திரம் வேறு

எம்மொழியிலும் இல்லை என்றால் அது மிகை அல்ல. ஒவ்வொரு மொழியாரும் ஒவ்வொரு பண்பில் சிறந்து விளங்கியிருக்கலாம். ஆனால் வளர்ச்சி முறையில் மிகுந்த மேன்மையுற்றிருப்பது ஆங்கில மொழியே. அந்தச் சிறப்பினாலே ஆங்கில மொழி தற்போது உலக மொழியாகத் திகழும் என்று கூறலாம். பண்டைய எகிப்தியர் சித்திர எழுத்து மொழி உண்டு பண்ணி மேன்மை அடைந்தார்கள். சீனர்கள் தத்துவ நெறியை வளர்த்திருக்கிறார்கள். கிரேக்கர்கள் அழகுப் பண்பை உயர்த்தினார்கள். உரோமானியர் சட்ட திட்டங்களில் புகழ் பெற்றார்கள். இந்திய ஆரியர் சமயக் கோட்பாடுகளில் சிறந்து நின்றார்கள். தென்னாட்டுத் தமிழர்களோ மக்கட் பிறப்பின் பயனாகிய நான்கு உறுதிகளைப் பாகுபடுத்தி அவைகளின் வழியாக மொழியைச் சீர்படுத்தினார்கள். அரிய கருத்துக்களை வெளியிட்டுத் தமிழ் அணங்கிற்கு அணிகளை அணிவித்து அழகினை நுகர்ந்தார்கள். அது போலவே ஆங்கிலேயர்களும் ஆங்கிலப் பாமகளை ஒவ்வொரு வழியிலும் செம்மைப்படுத்தி வளர்த்தார்கள். மொழி வளர்ச்சியிலும் பொருள் செறிவிலும் அழகிய வடிவிலும் ஆங்கில மொழிக்கு வேறு எந்த மொழியும் ஒப்பில்லை என்னும் வண்ணம் வளர்த்திருக்கிறார்கள். ஆகவே தற்போது மேல் நாடுகளில் அம்மொழி மற்ற எல்லா மொழிகளுக்கும் தலைமை இடம் பெற்று அரியாசனத்தில் வீற்றிருக்கிறது.

அவ்வளர்ச்சியில் மேன்மை பெற்றிருக்கிறது. ஆங்கிலப் பாமகளின் பவளவாயிலிருந்து உதிர்ந்து அழகு செய்து வருகிற முத்துக்களில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து அவைகளை ஆங்கிலத்தில் கண்டு களிக்க இயலாத தமிழ் மக்களுக்குத் தமிழ்ப் படுத்தித் தொகுத்துக் கொடுக்க எண்ணியுள்ளோம். இவ்வாறு செய்வதில் சிறந்து விளங்குகிற கவிஞர்களின் இனியவையும், சிறியவையுமாகி இருக்கிற தனிப் பகுதிகளையும், பெருங் கவிதைகளில் புதைந்து கிடக்கும் பாக்களில் பொறுக்கி எடுத்த பகுதிகளையும் மட்டும் வெளியிடுவோம்.[2] இவைகள் தமிழ் மக்களுக்கு முதல் நூல்களுடைய முழு உயர்வையும் தெரிவிக்காவிடினும் வளர்ச்சி முறையின் மேன்மையையாவது தெரிவிக்கும் என்று நம்புகிறோம். இந்த வகையில் தமிழ் அன்னைக்குச் செய்யக் கூடிய ஒரு சிறு பணியாக இது விளங்கலாம் அல்லவா?

# குறிப்புகள்

1. இந்நூலின் ஆசிரியர் 1936-ஆம் ஆண்டளவில் இதனை இயற்றினர் எனப் பக்கம் 15 அடிக்குறிப்பு எண் இரண்டில் குறிக்கப்பட்டது. (1936-ஆம் ஆண்டு என்ற குறிப்பு அவருடைய சிதைந்துபோன ஏட்டின் மூன்ரும் தொகுதியின் மேலுறையில் எழுதப்பட்டுள்ளது). நூலின் பெரும் பகுதியை அக்கால எல்லையில் முடித்திருப்பினும் அது அச்சேருமலேயே இருந்தது. எனவே ஆசிரியர் இடையிடையே அதனைத் திருத்தியும் புதுப்பித்தும் வந்துள்ளார் அவ்வாறு செய்தபோது இந்த இறுதிப் பகுதியையும் எழுதிச் சேர்த்துள்ளார் எனத் தெரிய வருகிறது. அவருடைய கையெழுத்துப் படியில் இதைப் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லையெனினும், அக் கையெழுத்துப் படியில் காணப்படும் தாள்வேறுபாடும் அவருடைய கை யெழுத்து வேறுபாடும் இவ்வாறு ஊகிக்க இடமளிக்கின்றன.

2. ஆங்கிலப் பாமகளின் இலக்கிய வளர்ச்சி வரலாற்றை எழுதியதோடு அமை யாது ஆங்கில இலக்கியத்தில் காணப்படும் சிறந்த பகுதிகள் பலவற்றை இவ் வாசிரியர் தமிழ்ச் செய்யுள் வடிவிலும் தந்துள்ளார். சற்றேறப்ப 250 க்கு மேற்பட்ட பாடல்கள் இவ்வாறு இவரால் தமிழாக்கம் பெற்றுள்ளன. இவற்றைத் தனித் தொகுதியாக ''ஆங்கிலப் பாமகள்: பவழவாய் முத்துக்கள்'' என்ற தலைப்பில் வெளியிட ஆசிரியர் கருதினர் என அறிகிரேம்.

இந்த இரண்டாம் தொகுதியினை வெளியிட இயலாத காரணத்தால் இவற்றில் காணப்படும் தமிழாக்கங்களுட் சிறந்தன சில மட்டும் இந்த நூலில் தக்க இடங்களில் பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளன. ஆசிரியரின் மூல ஏட்டிற் காணும் கருத்தோட்டத்திற்கு ஏற்ப இவை இடையிடையே தரப்பட்டுள்ளன.

## இணைப்பு 1

### இங்கிலாந்து அரசர்கள்—11 ஆம் நூற்றாண்டு முதல்

| வ. எண். | அரச வம்சம் | அரசன் | அரச ஆண்டு |
|---|---|---|---|
| 1. | நார்மன் | முதலாம் வில்லியம் | 25. 12 1066 — 9. 9. 1087 |
| 2. | ,, | இரண்டாம் வில்லிய | 26. 9. 1087 — 2. 8. 1100 |
| 3. | ,, | முதலாம் ஹென்றி | 5. 8. 1100 — 1. 12. 1135 |
| 4. | ,, | முதலாம் ஸ்டீபன் | 22. 12. 1135 — 25. 10. 1154 |
| 5. | பிளாண்டஜெனட் | இரண்டாம் ஹென்றி | 19. 12. 1154 — 6. 7. 1189 |
| 6. | ,, | முதலாம் ரிச்சர்டு | 3. 9. 1189 — 6. 4. 1199 |
| 7. | ,, | முதலாம் ஜான் | 27. 5. 1199 — 19. 10. 1216 |
| 8. | ,, | மூன்றாம் ஹென்றி | 28. 10. 1216 — 16. 11. 1272 |
| 9. | ,, | முதலாம் எட்வர்டு | 20. 11. 1272 — 7. 7. 1307 |
| 10. | ,, | இரண்டாம் எட்வர்டு | 8. 7. 1307 — 20. 1. 1327 |
| 11. | ,, | மூன்றாம் எட்வர்டு | 25. 1. 1327 — 21. 6. 1377 |
| 12. | ,, | இரண்டாம் ரிச்சர்டு | 22. 6. 1377 — 29. 9. 1399 |
| 13. | லங்காஸ்டர் | நான்காம் ஹென்றி | 30. 9. 1399 — 20. 3. 1413 |
| 14. | ,, | ஐந்தாம் ஹென்றி | 21. 3. 1413 — 31. 8. 1422 |
| 15. | ,, | ஆறாம் ஹென்றி | 1. 9. 1422 — 4. 3. 1461 |
| 16. | யார்க் | நான்காம் எட்வர்டு | 4. 3. 1461 — 9 4. 1483 |
| 17. | ,, | ஐந்தாம் எட்வர்டு | 9. 4. 1483 — 25. 6 1483 |
| 18. | ,, | மூன்றாம் ரிச்சர்டு | 26. 6. 1483 — 22. 8. 1485 |
| 19. | டுடர் | ஏழாம் ஹென்றி | 22. 8. 1485 — 21. 4. 1509 |
| 20. | ,, | எட்டாம் ஹென்றி | 22. 4. 1509 — 28. 1. 1547 |

| வ. எண். | அரச வம்சம் | அரசன் | அரச ஆண்டு |
|---|---|---|---|
| 21. | ,, | ஆரும் எட்வர்டு | 28. 1. 1547 — 6. 7. 1553 |
| 22. | ,, | ஜேன் | 6. 7. 1553 — 19. 7. 1553 |
| 23. | ,, | மேரி | 19. 7. 1553 — 17. 11. 1558 |
| 24. | ,, | முதலாம் எலிசபெத் | 17. 11. 1558 — 23. 3. 1603 |
| 25. | ஸ்டுவர்ட் | முதலாம் ஜேம்ஸ் | 24. 3. 1603 — 27. 3. 1625 |
| 26. | ,, | முதலாம் சார்லஸ் | 27. 3. 1625 — 30. 1. 1649 |
| 27. | ,, | * இரண்டாம் சார்லஸ் | 30. 1. 1649 — 6. 2. 1685 |
| 28. | ,, | இரண்டாம் ஜேம்ஸ் | 6. 2. 1685 — 12. 2. 1689 |
| 29. | ,, | மேரி | 13. 2 1689 — 27. 12. 1694 |
| 30. | ,, | மூன்ரும் வில்லியம் | 28. 12. 1694 — 8. 3. 1702 |
| 31. | ,, | ஆன் அரசி | 8. 3. 1702 — 1. 8. 1714 |
| 32. | ஹாஞேவர் | முதலாம் ஜார்ஜ் | 1. 8. 1714 — 11. 6. 1727 |
| 33. | ,, | இரண்டாம் ஜார்ஜ் | 11. 6. 1727 — 25. 10. 1760 |
| 34. | ,, | மூன்ரும் ஜார்ஜ் | 25. 10. 1760 — 29. 1. 1820 |
| 35. | ,, | நான்காம் ஜார்ஜ் | 29. 1. 1820 — 26. 6. 1830 |
| 36. | ,, | நான்காம் வில்லியம் | 26. 6. 1830 — 20. 6. 1837 |
| 37. | ,, | விக்டோரியா | 20. 6. 1837 — 22. 1. 1901 |
| 38. | சாக்ஸ்கோபர்க் | ஏழாம் எட்வர்டு | 22. 1. 1901 — 6. 5. 1910 |
| 39. | விண்ட்சர் | ஐந்தாம் ஜார்ஜ் | 6. 5. 1910 — 20. 1. 1936 |
| 40. | ,, | எட்டாம் எட்வர்டு | 20. 1. 1936 — 11. 12. 1936 |
| 41. | ,, | ஆரும் ஜார்ஜ் | 11. 12. 1936 — 6. 2. 1952 |
| 42. | ,, | இரண்டாம் எலிசபெத் | 6. 2. 1952 — |

* இரண்டாம் சார்லஸ் தன் தந்தை கொல்லப்பட்ட ஆண்டான 1649-இல் அரசுக்கு வரவில்லை. ஸ்காட்லாந்திலும், ஐரோப்பாவிலும் அடைக்கலமானுன். 1649 முதல் 1658 வரையில் ஆலிவர் கிராம் வெல்லின் குடியரசும் 1658—1559 வரையில் அவன் மகனுடைய குடியரசும் நிலவின.

ஓர் அழகு வாய்ந்த பொருள்
என்றுமே இன்பம் தரக்கூடியது.

— *கீட்ஸ்*

கடலை நோக்கிடு; கடலைப் போற்றிடு; ஆயின்
நிலத்திலே இருந்திடு;
எங்கும் நீர்மயமாகத் தோன்றினும்,
அருந்த ஒரு துளி கிட்டுவதாகுமோ?

— *கோல்ரிட்ஜ்*

இரவு இருட்டிலே உட்கார்ந்து கொண்டு
தனது தனிமைக்கு இனிமை ஊட்டுமாறு
பாடிக் கொண்டிருக்கும் இரவுப் பறவைக்கு
ஒப்பானவன் கவிஞன் ஆவான்.

— ஷெல்லி